# கல்கி


KALKI 8-7-79 75 காசு



## அர்ஸ் சிறப்புப் பேட்டி

கவிதாவின் முகத்தில் பெருமையும், பூரிப்பும் காணுங்கள். அப்பெருமையும், பூரிப்பும் கரூர் வைஸ்யா பாங்கின் ஜம்போ சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொருவருக்கும் உரியதாகும்.

இன்றே உங்கள் குழந்தையின் பெயரில் ஒரு ஜம்போ சேமிப்புக் கணக்கைத் துவங்கி, அழகுமிளிரும் யானை உருவில் அமைந்த உண்டியல் பொம்மையைப் பெறுங்கள். அதன் வயிறு நிரம்பியதும் கரூர் வைஸ்யா பாங்குக்கு கொண்டு வாருங்கள். அதில் சேர்ந்த தொகை உங்கள் குழந்தையின் கணக்கில் செலுத்தப்படும். சேமிப்பு பெருகுவதையும், உங்கள் குழந்தையின் முகம் பெருமையில் பூரிப்பதையும் காணுங்கள்.




**கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: கரூர் 639 001

கே.வி. ராகவாச்சாரி,
சேர்மன்




SAC/KVB/5001

# Kalki Shopping Page

## Beauty **with HAL* brains**

(* Hindustan Aeronautics Limited)

# Bharat TV



*Available at:*

**PHOENIX ELECTRONICS**
Mount Road, Ph. 87286
Adyar, Ph. 411208

**ARUNA & CO.,**
Tiruvottiyur,
Ph. 553644

**HAPPY HOUSE**
Teynampet,
Ph. 443545

ACIL BT-33/79

## இந்தியாவின் ஒரே எவர்சில்வர் பிரஷர் குக்கர்

# “கிச்சன்-கிங்”



இரு அளவுகள்
5 & 7.5
லிட்டர்களில்
கிடைக்கிறது.

இல்லத்தரசிகளுக்கு
''கிச்சன்-கிங்''
எவர்சில்வர்
பிரஷர்குக்கர் ஓர்
இன்றியமையாத
வரப்பிரசாதமாகும்.


தயாரிப்பாளர்கள் :
**இந்தியா மெட்டல்
இண்டஸ்ட்ரீஸ்**
பம்பாய்-400 004

தென்னிந்தியாவிற்கு வினியோகஸ்தர்கள்
**அல்கோ எலக்ட்ரானிக்ஸ்**
த.பெ. எண் :- 687
சென்னை-600 014. போன் : 845656

ARIES/AE. 501

# Kalki Shopping Page


## HMV STEREO 1010



Rs 1393/-
Max. Rec. Ret.
Price incl.
Excise Duty.
Taxes extra.

**HMV STEREO SYSTEMS**

*Available at:*

**SREE VIJAY AGENCIES**
110, Dindigul Road,
Madurai-625001 Ph. 24468

## HMV STEREO 3131 SUPERTRACK

Magnetic cartridge with diamond stylus.



Rs 2878/-
Max. Rec. Ret.
Price incl.
Excise Duty.
Taxes Extra.

**HMV STEREO SYSTEMS**

*Available at:*

**RHYTHM HOUSE**
69 A, West Tower Street
Madurai-625001 Ph. 25522

## HMV STEREO 1515



Rs 2358/-
Max. Rec. Ret.
Price incl.
Excise Duty.
Taxes Extra.

**HMV STEREO SYSTEMS**

*Available at:*

**GEETHALAYA ENTERPRISES**
6, Harriot Know-well Bldgs.,
East Veli st, Madurai-625001

## HMV STEREO POPULAR II



Rs 994/-
Max. Rec. Ret.
Price incl.
Excise Duty.
Taxes extra.

**HMV STEREO SYSTEMS**

*Available at:*

**ROYAL MUSIC CENTRE**
136, West Masi St,
MADURAI - 625001

# Kalki Shopping Page




**SRI BHUVANESWARI ENTERPRISES**
'GOKULAM'
Karunanidhipuram,
Madipakkam P.O.
Madras-600 091

**SUKI ELECTRONICS**
16, Veera Raghavan St., Nanganallur,
Madras-600 061 Ph: 433019
*BRANCH*: C-3, Kapaleeswarar
Shopping Complex
V.A. Agraharam Road, Madras-600 004

**SUPRIYA ELECTRONICS**
10, Nelson Manicka Mudaliar Road,
Choolaimedu, Madras-600 094
(Near Nungambakkam Rly. Station)

**T. V. HOME**
43, Sir C. P. Ramaswamy Iyer Road,
Madras-600 018 Ph: 71826

**ASIA SALES AGENCIES**
853, Mount Road (Opp. Alankar Theatre)
Madras-600 002 Ph: 85413

AD BUREAU

# Kalki Shopping Page

## FREE DEMONSTRATION

NEW **Sumeet**

**Kitchen Machine**

400 Watts 30 Mins.Rating
230 V. AC/DC



between
5-00 & 7-30 p.m.
on Friday & Saturday


at **VIVEK & CO**
133, Royapettah High Road, Mylapore,
Ph: 76661, 76923;
206, Purasawalkam High Road, Madras
Ph: 662462, 663545

1199

---

Admired for beauty
Bought for performance


# Bharat TV
## Urvashi



*Available at:*
**TV TRADERS**
Alwarpet,
Madras 600 018 Phone: 71238
Anna Nagar, Madras 600 040

---

## முதலில் 1/3 (மூன்றில் ஒன்று) மீதி 10 மாதங்களில்




ஒரு மல்டி சானல் 51செமீ TV ஆன்டெனா, ஆட்டோ மாடிக் ஸ்டபிலைசர் நீல ஸ்க்ரீன், & லைசன்ஸ்.

| | முதலில் | 12 மாதங்கள் | 15 மாதங்கள் | 18 மாதங்கள் |
|---|---|---|---|---|
| DYANORA T - 481 | ரூ 885 | ரூ 225 | ரூ 186 | ரூ 160 |
| ALLWYN | 875 | 223 | 184 | 158 |
| televista | 825 | 208 | 172 | 148 |

ரொக்கத்திற்கு கவர்ச்சிகரமான தள்ளுபடி உண்டு

**doss** **தாஸ்**

Dependable dealer of dependable durables

நம்பிக்கையான பொருட்களின் நம்பிக்கையான விற்பனையாளர்

W 109 III அவின்யு,
அண்ணா நகர்,
சென்னை–600 040.
போன்: 614063.
ஞாயிறு விடுமுறை

தவணைத்திட்டம் சென்னை நகரில் மட்டுமே

# கர்நாடக காங்கிரஸ் உதயம்!

## எங்கே போகிறது?



[இந்திரா காங்கிரஸ் மேலிடம் அனுப்பியிருந்த ஒழுங்கு நடவடிக்கை குற்றப் பத்திரிகைக்குப் பதிலாக திருமதி இந்திரா காந்திக்கு திரு அர்ஸ் காரசாரமாக பதில் கடிதம் போட்டிருந்த காலகட்டம். பெங்களூரில் அவரது வீட்டை நாடிப் போகிறேன். நூற்றுக் கணக்கான அவரது ஆதரவாளர்கள், அவரைச் சந்திக்கக் காத்திருக்கும் நிலையில், உடல் நலம் குன்றி அவர் படுத்திருந்த போதிலும் அவரைப் பேட்டி காணும் வாய்ப்பு சென்னையிலிருந்து வந்துள்ள கல்கி பிரதிநிதிக்குக் கிடைக்கிறது. தலையைச் சுற்றிக் கம்பளித் துண்டால் போர்த்தியபடி, மிகவும் சோர்ந்த நிலையில் அர்ஸ் காணப்படுகிறார்.

''எந்த நிமிடமும் நான் இந்திரா காங்கிரஸிலிருந்து விலக்கப்படும் நிலையில் உள்ள தருணத்தில் பேட்டி காண வந்திருக்கிறீர்கள்'' என்று மெதுவாகக் கூறிப் புன்னகைக்கிறார். பேட்டி ஆரம்பமாகிறது.]

**கேள்வி:** கர்நாடகத்தில் இந்திரா காங்கிரஸில் தற்போது உண்டாகியுள்ள பிளவால் அகில இந்திய அளவில் அரசியல் கட்சிகளிடையே புனரமைப்பு (Realignment) உண்டாகும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

**திரு அர்ஸ்:** எல்லாப் பத்திரிகைகளும் அவ்வாறுதான் கூறுகின்றன. அம்மாதிரி புனரமைப்பு ஏற்பட வாய்ப்பு உண்டாகலாம்' ஆனால் வேறு பல விஷயங்கள் உள்ளன.

**கேள்வி:** மஹாராஷ்டிராவில் முதலமைச்சர் திரு ஷரத் பாவர் அடிப்படையான காங்கிரஸ், கேரளாவில் திரு அந்தோனி தலைமையிலான காங்கிரஸ், தமிழகத்தில் திரு குமரி அனந்தன் காங்கிரஸ், கர்நாடகத்தில் தங்களுக்கு ஆதரவாக உள்ள காங்கிரஸ் ஆகியோர் ஒன்று சேர்ந்து அகில இந்திய அளவில் ஒரு மூன்றாவது அரசியல் சக்தியை உண்டாக்கலாம் அல்லவா?

**திரு அர்ஸ்:** இந்த நிலையில் என்னால் ஒன்றும் சொல்ல முடியாது. எல்லாத் தலைவர்களும் கலந்து பேசி ஆலோசித்து முடிவெடுக்க வேண்டிய விஷயம் இது. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**கேள்வி:** கட்சி விவகாரத்தில் சர்வாதிகார மனப்பான்மை கொண்டு செயல்படுகிறார் திருமதி இந்திரா காந்தி என்ற முக்கிய காரணத்தால்தான் சுவரண்சிங் தலைமையிலான காங்கிரஸ் திருமதி இந்திராவை விட்டுப் பிரிந்தனர். நாங்களும் தங்களது ஆதரவாளர்களும் இதே காரணத்தால்தான் வெளி வந்திருக்கிறீர்கள். இந்நிலையில் நீங்கள் ஒரு புதிய கட்சி அமைக்காமல் சுவரண் சிங் தலைமையிலான காங்கிரஸில் சேர்ந்து விட வேண்டியதுதானே?

**திரு அர்ஸ்:** இது எங்கள் முன் உள்ள கேள்விதான். ஆனால் ஒன்று. நாங்களாக வெளிவரவில்லை. அந்நிலைக்கு திருமதி இந்திராவால் ஆட்படுத்தப் பட்டுள்ளோம். எந்த




நிமிடத்திலும் கட்சியினின்று விலக்கப்படும் நிலையில் உள்ளேன்... இந்தச் சூழ்நிலையில் அடிப்படை விஷயம் என்னை நானே காத்துக் கொள்வதுதான். (I should survive) மற்ற கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் நானும் எனது ஆதரவாளர்களுமாகச் சேர்ந்து எடுத்த முடிவின் படிதான் புதிய கட்சி தொடங்கப்படுகிறது. நீங்கள் சொல்வது போல் திரு சுவரண் சிங் தலைமையிலான காங்கிரஸின் கொள்கைகளும் எங்களுடையவையும் ஒத்துப் போனால் இரு கட்சிகளும் இணையும் சூழ்நிலை உண்டாகலாம். இப்போதே எப்படிச் சொல்ல முடியும்?

> கேள்வி: தங்களுக்கு எதிராக இருந்த ஜனதா கட்சித் தலைவர்கள் தற்போது தங்களை தைரியம் மிக்கவர் ( man with real guts ) என்று புகழுகிறார்கள். அவர்களது புகழ்ச்சியின் பின்னே சுயநலம் பொதிந்து இருப்பது தங்களுக்குத் தெரியவில்லையா? இந்திரா காங்கிரஸில் தற்போது உண்டாகியுள்ள பிளவில் அவர்கள் தான் அதிகம் நன்மை அடையப் போகின்றார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?

திரு அர்ஸ்: காங்கிரஸ் கட்சி பிளவு படுகிறதோ இல்லையோ, ஜனதாக் கட்சி பிளவு பட்டுக் கொண்டே இருக்கிறது. காங்கிரஸ் பிளவால் அவர்களுக்கு நன்மை கிடைக்குமா கிடைக்காதா என்பது எனக்குத் தெரியாது! ஆனால் அவர்கள் என்னைத் ''தைரியசாலி'' என்று புகழ்கிறார்கள் என்று குறிப்பிட்டீர்களே, அதற்கு உள் அர்த்தம் நாம் ஏன் கற்பித்துக் கொள்ள வேண்டும்? ஒரு கால்பந்து ஆட்டத்தில் ஒரு ஆட்டக்காரர் சிறப்பாகக் கோல் போட்டால் எதிரணியில் இருப்பவர்களும் அந்த ஆட்டக் காரரின் திறமையைக் கண்டு கைதட்டிப் பாராட்டுவது உண்டு. ஜனதாக் கட்சித் தலைவர்கள் அம்மாதிரிதான் என்னைப் பாராட்டுவதாக நாம் எடுத்துக் கொள்ளலாமே!

> கேள்வி: தற்போது காங்கிரஸில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு முக்கிய காரணம், சஞ்சய் காந்தி இந்திரா காங்கிரஸில் தீவிரப் பங்கேற்பதற்கு எதிராகத் தாங்கள் இருப்பதுதான் என்று கருதப் படுகிறது. நெருக்கடிக் காலத்தின் போது திரு சஞ்சய் காந்திக்கு மிகவும் நெருங்கியநிலையில் இருந்த தாங்கள் தற்போது அவரைப் புறக்கணிக்கும் காரணம் என்ன?

திரு அர்ஸ்: நான் அவருடன் நெருங்கியிருந்தேன் என்பதோ, தற்போது புறக்கணிக்கிறேன் என்பதோ சரியல்ல. நான் எப்போதும் சுயபலத்தை நம்புபவன். தற்போது என்னை என்னால் ஸ்திரப்படுத்திக் கொண்டு நிற்க முடிகிறது என்பதே இதற்கு எடுத்துக் காட்டு.

> கேள்வி: குரோவர் கமிஷனின் முடிவுகள்தாம் திருமதி இந்திராவிடமிருந்து நீங்கள் விலகிச் செல்ல உண்மைக் காரணமாக அமைந்துள்ளது என்று தங்களை விமர்சிப்பவர்கள் கூறுகின்றார்களே, உங்கள் பதில் என்ன?

திரு அர்ஸ்: அவ்வாறு இருக்கும் பட்சத்தில் நான் ஜனதாக் கட்சியுடன் அல்லவா நட்பு கொண்டிருக்க வேண்டும்? நான் சுய பலத்தில் நிற்பதே இக்கருத்து தவறானது என்பதை வெளிக்காட்டுகிறதே!

[டெலிபோன் மணி அடிக்கிறது. திரு அர்ஸ் போனில் பேசி விட்டுப் புகைப்படக்காரரும் நானும் இருக்கும்பக்கம் திரும்புகிறார். 'என்னை இந்திரா காங்கிரஸிலிருந்து விலக்கிவிட்டதாக செய்தி' என்று கூறி மென்மையாகப் புன்னகைக்கிறார். செய்தியினால் எவ்விதப் பாதிப்பும் அடையாமல் பேட்டியைத் தொடரும்படி அவர் கூறும் போது அவரது மனத்திண்மையைப் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. பேட்டி தொடருகிறது.]

> கேள்வி: விசேஷ (special) கோர்ட்டுகள் அமைப்பது பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

திரு அர்ஸ்: விசேஷ கோர்ட்டுகள் அவசியம் இல்லை என்பது என் கருத்து. ஆனால் அதனை எதிர்த்துப் போராட்டங்கள் நிகழ்த்தும் அளவுக்கு அது பெரிய பிரச்னை அல்ல!

> கேள்வி: குரோவர் கமிஷன் தீர்ப்புக் குறித்து மேல் நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசு தங்கள் அரசிடம் பணித்து இருப்பதன் காரணம் என்ன? இவ்விஷயத்தில் கர்நாடகா அரசு என்ன மேல் நடவடிக்கை எடுக்கப் போகிறது?

திரு அர்ஸ்: இந்திய அரசியல் சாஸனப்படி மத்திய அரசு மாநில முதலமைச்சர்கள் மேல் உள்ள குற்றச் சாட்டுகளை விசாரிக்க விசாரணைக்குழு அமைக்கலாமேயொழிய, அக்குழுவின் கண்டுபிடிப்பின் அடிப்படையில் மேல்

நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மாநில அரசுக்குத்தான் உண்டு. இதனை ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியும் ஒப்புக் கொண்டுள்ளார். இந்நிலையில் விசாரணைக் குழு அமைத்து, நேரத்தையும் பணத்தையும் மத்திய அரசு வீணடித்திருக்க வேண்டாம். மாநில முதலமைச்சர் மீது இக்குற்றச் சாட்டுக்கள் அடிப்படையில் நடவடிக்கை ஏதேனும் எடுப்பதானால் சட்டசபையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொணர்தல், குற்றம் சாட்டுதல், (In peachment) ஆகியவைதாம் சரியான வழிமுறைகள் என்பது என் கருத்து.

குரோவர் கமிஷனின் கண்டுபிடிப்புக்கள் சம்பந்தமாக மாநில அரசு முடிவெடுக்கும்.

**கேள்வி: திருமதி இந்திரா காந்திக்கும் தங்களுக்கும் இடையேயுள்ள மன வேற்றுமைகள் ஒரு குறிப்பிட்ட காரணத்தின் அடிப்படையில் மட்டுமின்றி, சிக்மகளூர் தேர்தலுக்கு முன்பிருந்தே வளர்ந்து வந்திருக்க வேண்டும் என்று மக்களிடையே ஒரு கருத்து நிலவுகிறது. இதனைத் தாங்கள் ஒப்புக் கொள்ளும் பட்சத்தில் திருமதி இந்திரா காந்தியைத் தாங்கள் எதனால் அந்தத் தேர்தலில் ஆதரித்தீர்கள்?**

திரு அர்ஸ்: என்னைப் பொறுத்த மட்டில் எனக்கு அவரிடம் எவ்வித மன வேற்றுமையும் இல்லாமல் தான் இருந்தேன். ஆனால் திருமதி இந்திரா காந்தி 1978 லிருந்தே என்னிடம் மனவேற்றுமை கொண்டிருந்தார் என்று பலரும் சொன்னதுண்டு. ஆனால் நான் நம்பவில்லை. பின்புதான் புரிந்து கொண்டேன். சிக்மகளூர் தேர்தலைப் பொறுத்த மட்டில் என்னால் முடிந்த அளவுக்கு உழைத்து அவருக்கு வெற்றி கிடைக்கப் பாடுபட்டேன். ஆனால் என்னுடைய ஒவ்வொரு செயலும் சந்தேகத்துடன் கண்காணிக்கப் பட்டதையும், நான் பேசிய ஒவ்வொரு வார்த்தைக்கும் உள்ளர்த்தம் கற்பிக்கப்பட்டதையும் பின்னால் புரிந்து கொண்டேன். அகமதாபாத் மாநாட்டில் சஞ்சய் பற்றி நான் வெளியிட்ட கருத்துக்களுக்கு இந்திரா காந்தி உள் அர்த்தம் கற்பித்துக் கொண்டதே பிளவுக்கான சூழ்நிலையைத் தீவிரப்படுத்த உதவியது.

**கேள்வி: தங்கள் கணிப்புப்படி திருமதி இந்திரா காந்தியின் எதிர்காலம் எப்படியிருக்கும்?**

திரு அர்ஸ்: எனக்குத் தெரியாது. அவரிடம் எனக்கு எவ்வித மனத்தாங்கலும் கிடையாது. அவருக்கு நல்லனவற்றையே விரும்புகிறேன்!

[புகைப்படம் எடுக்க திரு அர்ஸிடம் அனுமதி கோருகிறோம். உடல் நலம் குன்றியுள்ள இந்த நிலையில் எடுக்க வேண்டுமா என்று தயங்குகிறார். பேட்டி கண்ட நிலையில் எடுத்தால் நன்றாக இருக்கும் என்று அபிப்பிராயம் தெரிவித்ததும், 'எனக்கென்ன கல்யாணத்துக்குப் பெண்ணா கொடுக்கப் போகிறார்கள், எடுத்துக் கொள்ளுங்கள்' என்று நகைச்சுவையுடன் அவர் கூறவும் புகைப்படம் எடுக்கிறோம். நன்றி தெரிவித்து விடைபெறுகிறோம்.]

பேட்டி: நாயகன்
புகைப்படம்: மன்னை மூர்த்தி

---

# "அது வேறு – இது வேறு!"

''ஜனநாயகக் கொள்கைகளுக்காக ஜனதா போன்ற கட்சிகளுடன் உடன்பாடு கொள்கிறோம். அக்கட்சியுடன் உடன்பாடு கொள்வது என்பது வேறு! வழக்கு விசாரணை என்பது வேறு!''
—கருணாநிதி

''சிக்மகளூரில் இந்திராவை ஆதரித்தோம்! அதற்காக ஜனதா கட்சியுடன் முரண்பாடு என்று அர்த்தமல்ல! அது வேறு — இது வேறு.''
- எம்.ஜி.ஆர்.



''சர்வாதிகாரம் மீண்டும் தலையெடுத்து விடக் கூடாது என்பதற்காகத்தான் தஞ்சையில் நாங்கள் தி.மு.க.வுடன் இணைந்திருக்கிறோம். அதற்காக எங்கள் கொள்கையை விட்டுக் கொடுத்து விடவில்லை. கொள்கை என்பது வேறு: கூட்டணி என்பது வேறு!''
—கல்யாண சுந்தரம்

''நம் பாரத அரசு அமெரிக்காவுடன் மீண்டும் உறவை வலுப்படுத்துவதால், ஏற்கெனவே ரஷ்யாவுடன் இருந்து வரும் உறவு நிலையில் எந்த மாற்றமும் இல்லை. அது வேறு— இது வேறு!''
—மொரார்ஜி தேசாய்

''கர்நாடகாவில் நமது கட்சிக்கு ஒரு பிரதேசத் தலைவரை நியமிக்க வேண்டும் என்றால் முதல்வர் பதவியையும் கட்சித் தலைவர் பதவியையும் ஒருவரே நிர்வகிக்கக் கூடாது என்ற எண்ணத்தினால்தான். அதற்காக தேவராஜ் அர்சுடன் மோதுகிறோம் என்பது அர்த்தமல்ல. கட்சி என்பது வேறு! நிர்வாகம் என்பது வேறு!''
—இந்திரா காந்தி

தொகுப்பு: எஸ். வி. ராமன்

# பிளவு பற்றி இவர்கள்



மேலே : ரங்கநாத்; ரெட்டி
கீழே : ராம்தேவ், ரகுநாதன்

(கர்நாடக மாநிலத்தில் ஆளும் கட்சியான இந்திரா காங்கிரஸில் உண்டாகியுள்ள பிளவு பற்றியும் அதனால் உண்டாகக் கூடிய விளைவுகள் பற்றியும நான்கு பேர்களைச் சந்தித்துக் கேட்டபோது....)

**திரு பி. ராம்தேவ்**

*(கர்நாடக மாநில சட்டசபையில் ஜனதா கட்சி உறுப்பினர்.)*

தேவராஜ் அர்ஸ் இந்திரா காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்டதால் அகில இந்திய அளவில் இந்திரா காந்திக்கும், ஆர். எஸ். எஸ்.ஸுக்கும் எதிரான காங்கிரஸ் சக்திகள் ஒருங்கிணைந்து மூன்றாவது அணி தோன்ற வாய்ப்பு உண்டு. இவ்வணி எதிர் காலத்தில் ஜனதாவுக்கு ஆதரவு அளிக்கச் சாத்தியக் கூறுகள் உள்ளன. கர்நாடகத்தைப் பொறுத்த மட்டில் தேவராஜ் அர்ஸை விட இந்திரா காந்திக்குத்தான் மக்களிடையே அதிக ஆதரவு இருப்பதாகத் தோன்றுகிறது. இந்திரா காந்தியைப் பொறுத்த மட்டில் மாநிலங்களில் அரசு அமைக்க வேண்டும் என்று அவருக்கு விருப்பம் கிடையாது. மறுபடியும் தாம் பிரதம மந்திரியாக வேண்டும் என்றுதான் அவருக்கு ஆசை. இதனால்தான் தேவராஜ் அர்ஸ் ஆதரவு போனாலும் பரவாயில்லை என்று சஞ்சய் காந்தியை விட மாட்டேன் என்கிறார் இந்திரா.

**திரு டி. ஆர். ரங்கநாத்:**

*(தனியார் நிறுவனத்தில் பணி புரிபவர்)*

தேவராஜ் அர்ஸ் இந்திரா காந்தியின் ஆதிக்கத்திலிருந்து வெளி வந்தது சரிதான். அர்ஸ் கீழ் மட்ட மக்களிடையே மிகவும் பிரபலமானவர். அவர்களது நலனுக்காக எவ்வளவோ செய்துள்ளார். இந்திரா காந்தியின் சர்வாதிகாரப் போக்கிலிருந்து வெளி வந்ததால் அவரால் மக்களுக்கு மேலும் சிறப்பாகப் பணியாற்ற முடியும். கர்நாடகத்தைப் பொறுத்த மட்டில் இந்திரா காந்தியை விட அவருக்குத்தான் மக்களிடையே அதிக ஆதரவு உள்ளது. மறுபடியும் தேர்தல்கள் வந்தாலும் அவர் ஆட்சி அமைப்பது உறுதி. இப்பிளவால் அகில இந்திய அளவில் கட்சிகளின் புனரமைப்பு உண்டாக வாய்ப்புகள் உள்ளன. ஆனால் கர்நாடகத்தில் இப்பிளவைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொள்ளும் திறமை ஜனதாக் கட்சிக்குக் கிடையாது!

**திரு எம். ஜி. ரெட்டி**

*(பட்டப்படிப்புப் படித்துவிட்டுக் கரும்பு ரசம் வியாபாரம் செய்பவர்):*

திரு தேவராஜ் அர்ஸ் முரடர்களுக்கு முரடர். நல்லவர்களுக்கு நல்லவர். ஆட்சி செய்வதிலும் புதிய பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டு வந்து செயல் படுத்துவதிலும் நிபுணர். ஏழைகளுக்காக எதையும் செய்யத் தயங்காதவர். சர்வாதிகார மனப்பான்மை கொண்ட இந்திரா காந்தியிடமிருந்து அவர் பிரிந்து வந்தது சந்தோஷமான செய்தி. கர்நாடக மாநிலத்தில் இந்திரா காந்திக்கு மக்களிடையே ஆதரவே கிடையாது. சிக்மகளூரில் இந்திரா காந்தி வெற்றி பெற்றது திரு தேவராஜ் அர்ஸினால் தான்! எப்போது தேர்தல் வந்தாலும் அர்ஸ் ஆட்சி அமைப்பது முடிவான விஷயம்!

**திரு ரகுநாதன்**

*(விற்பனையாளர்):*

இந்திரா காந்தியும் தேவராஜ் அர்ஸும் பிரிந்து போனது மிகவும் வருந்தத் தக்க செய்தியாகும். இதனால் கர்நாடகத்தில் ஜனதா கட்சி தன்னை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு உண்டாகியுள்ளது. இந்திராவும், அர்ஸும் இணைந்து இருந்தால் கர்நாடகத்தில் நிலையான ஆட்சி இருந்து மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருக்க முடியும். பிரிந்துள்ள நிலையில் கர்நாடக மக்களிடையே, தேவராஜ் அர்ஸை விட, இந்திரா காந்திக்குத்தான் செல்வாக்கு அதிகம் உள்ளதாகத் தெரிகிறது. கிராம மக்களிடையே 'கை' சின்னம் என்பது மனத்தில் பதிந்து போன விஷயம். இப்பிளவால் அர்ஸுக்குத்தான் இழப்பு அதிகம்.

பேட்டி: **கோகுலா**

புகைப்படங்கள் : **மன்னை மூர்த்தி**

# அர்ஸுக்கு ஏது ஆதரவு?

## பங்காரப்பா பேட்டி

**[இந்திரா காங்கிரஸ் மேலிடம் கர்நாடக மாநில இந்திரா காங்கிரஸின் தலைமைப் பொறுப்பேற்க அட் ஹாக் கமிட்டி நியமித்துள்ளது. இதன் தலைவர் திரு பங்காரப்பாவைச் சந்தித்துச் சில விளக்கங்கள் கேட்டபோது:]**

**கேள்வி:** கர்நாடக மாநில இந்திரா காங்கிரஸில் தற்போது ஏற்பட்டிருக்கும் பிளவுக்கு முக்கிய காரணம் முதலமைச்சர் திரு தேவராஜ் அர்ஸுக்கும், திருமதி இந்திரா காந்திக்கும் இடையே ஏற்பட்டுள்ள கொள்கை வித்தியாசங்கள் தாம் என்று பத்திரிகைகளில் தாங்கள் கூறியதாக வெளியாகியுள்ளனவே, அக் கொள்கை வித்தியாசங்கள் எவை?

திரு. பங்காரப்பா: அரசியல், பொருளாதாரக் கொள்கை வித்தியாசங்கள். அரசியல் பற்றி எல்லோருக்கும் தெரியும். பொருளாதாரக் கொள்கையில் அடிப்படை வித்தியாசங்களை விளக்குகிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் 1.3.74ல் நெருக்கடி நிலை வருவதற்கும் முன்பாக கர்நாடக மாநிலத்தில் அமுலுக்கு வந்ததையொட்டி சுமார் 8 லட்சம் விவசாயிகள் நில உரிமைப் பதிவுக்காக விண்ணப்பம் செய்தனர். ஆனால் இவற்றில் 4 லட்சம் விண்ணப்பங்கள் மீது மட்டும்தான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதிலும் 35 சதவிகிதத்தினருக்கு நிலங்கள் பதிவு படுத்தப் படாத நிலை. உண்மையில் விவசாயிகள் அந்நிலங்களுக்குச் சொந்தக் காரர்களாக இருந்தும், பதிவாகாததனால் அவர்களுக்கு உள்ள இன்னல்கள். 1978ஆம் ஆண்டுத் தேர்தலின் போது, விவசாயிகள் கொடுக்க வேண்டிய நஷ்டஈடு அளவைக் குறைப்பதாக வாக்குறுதி கொடுத்துப் பிற்பாடு ஆவன செய்து குறைத்தோம். ஆனால் சட்ட மன்ற அங்கத்தினர்கள் கூட்டமொன்றில் இதனை திரு அர்ஸ் எதிர்த்து நஷ்டஈடு தொகையைப் பழைய அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று நிலச்சுவான்தார்கள் சார்பில் பரிந்துரைத்தார்.

பஸ்களை முழுமையாகத் தேசிய மாக்குவது இந்திரா காந்தியின் கொள்கை. இக்கொள்கைக்குப் புறம்பான வகையில், ஏற்கெனவே அரசுடைமையில் இருக்கும் பஸ்களைக்கூடத் தனியார் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று திரு அர்ஸ் சட்டமன்ற உறுப்பினர்க் கூட்டத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். இம்மாதிரி கொள்கையளவில் மேலும் பல மாறுபாடுகள் அவர் கொண்டிருந்ததுதான் இப்பிளவுக்கு வழி வகுத்தது!

**கேள்வி:** திரு அர்ஸ் இந்திரா காங்கிரஸ் ஆட்சியிலிருந்து விலக்கப் பட்டதைத் தொடர்ந்து அகில இந்திய அளவில் கட்சிகளின் புனரமைப்பு உண்டாகும் என்று சொல்லப் படுவது பற்றித் தங்கள் கருத்து என்ன?

திரு பங்காரப்பா: அம்மாதிரி ஏதும் நிகழாது என்பது என் அபிப்பிராயம். திரு அர்ஸுக்குக் கர்நாடக மாநிலத்திலேயே போதிய ஆதரவு கிடையாது. மற்றைய மாநிலங்களில் அவருக்குத் துளிக்கூட செல்வாக்குக் கிடையாது. இதனால் அகில இந்திய அளவில் எவ்விதப் பெரிய மாறுதலும் நிகழாது!



கேள்வி: அரசு அமைக்கச் சொல்லித் தங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று கர்நாடக ஆளுனரிடம் விண்ணப்பம் விடுத்திருக்கிறீர்களே. தங்களுக்குச் சட்டமன்றத்தில் அந்த முடிவுக்கு ஆதரவு உள்ளதா?

திரு பங்காரப்பா: 'இந்திரா காங்கிரஸ் சின்னத்தில் நின்று மக்களிடம் வோட்டுப் பெற்று வென்ற திரு அர்ஸ் உட்பட எல்லா சட்டமன்ற அங்கத்தினருக்கும், அக்கட்சியி லின்று விலகும் பட்சத்தில், சட்டமன்றத்தில், நீடித்திருக்கும் உரிமை கிடையாது. அவர்கள் உடனடியாக ராஜினாமா செய்தாகவேண்டும். இந்நிலையில் அரசு அமைக்க எங்களைத்தான் ஆளுனர் அழைக்கவேண்டும். எங்களுக்குள்ள ஆதரவைச் சரியான சமயத்தில் நிரூபிப்போம். பொறுத்திருந்து பாருங்கள்!

கேள்வி: சர்வாதிகாரத் தன்மையுடன் திருமதி இந்திரா காந்தி நடந்து கொண்டார் என்று திரு அர்ஸ் குற்றம் சாட்டியுள்ளாரே!

திரு பங்காரப்பா: திரு அர்ஸ் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது வேடிக்கையாக உள்ளது. அவரே சர்வாதிகார மனப்பான்மை கொண்டவர்தான்!

கேள்வி: எதிர் காலத்தில் என்ன முறையில் நீங்கள் செயல்படப் போகிறீர்கள்?

திரு பங்காரப்பா: மக்களைச் சந்தித்து மக்களிடம் எங்களது பொருளாதாரக் கொள்கைகளை விளக்குவோம். தற்போது உள்ள சூழ்நிலைக்குக் காரணங்களை மக்களிடம் விளக்கி அவர்கள் ஆதரவைப் பெறுவோம்!

பேட்டி: ரங்கா
புகைப்படம்: மன்னை மூர்த்தி

# மனிதனாய் இருங்கள்!



● ஜேசுதாஸ் —
கிறிஸ்தவரா? இல்லை.
இந்துவா? இல்லை.
அவர் யார்? அவர் ஒரு மனிதர்!

மதத்தின் பெயரால் எல்லோருக்கும் பொதுவான இறைவனை ஏதோ ஒருவழியில் தமக்கே அடிமையாக்கிக் கொண்டு மற்றவர்களையும் கண்மூடித் தனமாக அடிமைகளாக்க முயல்வோரிடையே வாழும் மனிதர்!

மதம் ஒரு மனிதனின் மனத்தைக் குறுகலாக்கிவிடக் கூடாது. மதம் ஒரு மனிதனின் சுதந்திரமான சிந்தனைகளைச் சிதைத்து விடக் கூடாது.

தன் மதம் தவிர வேறு மதத்தை நினைக்கவே கூடாது என்று கூறுவதே ஆணவத்தைக் குறிக்கும். ஆணவம் ஆண்டவனை அடைய முடியாதபடி தடுக்கும் ஒரு தடை!

சபரிமலை சன்னிதானத்தில் மோட்ச சாம்ராஜ்யத்தின் அதிபதியைக் காண முடியாதா? எம்பெருமான் ஜீவனாகவும் உயிராகவும் சத்தியமாகவும் இருக்க முடியாதா?
ஈஸ்வர அல்லா தேரே நாம்!
ராமும் ரஹீமும் ஒன்றே!
எத்தனை காந்திகளும், எத்தனை கபீர்களும், எத்தனை ராமலிங்க வள்ளலார்களும் தோன்றட்டுமே! ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற பொய்யா மொழிக்கு உயிரே வரப் போவதில்லை.
ஜேசுதாஸ் அவர்களே!
நீங்கள் கிறிஸ்தவனாக இருக்க வேண்டாம்!
நீங்கள் இந்துவாக இருக்க வேண்டாம்!
நீங்கள் மனிதனாக இருங்கள்!
அதுதான் பக்தி!
அதுதான் தொண்டு!

திண்டுக்கல் — எஸ். கிருஷ்ணமூர்த்தி


● திரு மூக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சாரியார் கருத்திலிருந்து திரு ஜேசுதாஸ் இந்து கோவில்களுக்குப் போய் வருவது வியாபாரத்துக்காக என்று தெரிகிறது. வேற்று மதத்திற்கு அறிவுரை கூறும் திரு லக்ஷ்மி நரசிம்மாச்சாரியார் இந்து மதத்தின் ஒரு பிரிவான வைணவத்தைச் சேர்ந்தவர். இவர்கள் பின்பற்றுகின்ற ஸ்ரீராமானுஜரின் 'விசிஷ்டாத்வைத சித்தாந்தம்' வைணவர்கள் விஷ்ணுவைத் தவிர வேறு தெய்வத்தை வணங்க இடம்தரவில்லை. நடைமுறையிலும் பல . கட்டுப்பாடுகள். நம் மதத்திலேயே இவ்வளவு வேற்றுமைகளை வைத்துக் கொண்டு கிறிஸ்துவ மதத்தினருக்கு அறிவுரை கூறுவானேன்?

மஹேந்திரவாடி — உ.மாசங்கரம்

● 24.6.79 இதழில் ''ஜேசுதாஸ் விவகாரம்'' கிறிஸ்துவ மதச் சட்டங்களுக்கு உட்பட்டது. அதற்கு திரு மூக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சாரியாரின் கருத்தைப் பேட்டியாக வெளியிடுவது ஆச்சரியமாய் இருக்கின்றது.

சென்னை—2 — ஜே. ஜெரோம் செல்வராஜ்

''ரொம்பவும் அடக்கமான பெண்ணோ, குனிந்த தலை நிமிராமல் தரையையே நோக்கிய வண்ணம் போகிறாளே?''
''ம்ஹூம். அதுதான் இல்லை. போன வருடம் தரையில் பத்து ரூபாய் கண்டு எடுத்தானாம். அதிலிருந்து இப்படித் தான்...!''
— ஸ்ரீ வெங்கடேஷ்



இப்படி நேரவில்லை:
ரீல்கள்தான் மாறிப்போயின!

**துக்காராம்:** (பஸ் கண்டக்டர்) நானும் எனது மனைவியும் எப்போதாவது தெரிந்தவர் வீட்டுக்கு டீவி பார்க்கச் செல்வோம். சனிக்கிழமை 23-ம் தேதி இரவு எம்.ஜி.ஆர். படம் என்பதால் போகலாம் என்றாள் மனைவி. படம் ஆரம்பித்து நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது. திடீரென்று ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் காட்சிகள் வந்தன. நான் முன்பே "குமரிக் கோட்டம்" படம் பார்த்திருந்ததால் எனக்கு இந்தக் குளறுபடியின் காரணம் புரிந்தது. ரீல் மாறி விட்டது! ரீல் மாறுவது கூடவா டீவிக்காரர்களுக்குத் தெரியாமல் போய் விட்டது?



# டிவியில் ஒரு குளறுபடி!



துக்காராம், பாலாஜி, ராஜி


**பாலாஜி** (வங்கி ஊழியர்):— குடும்பத்தோடு டீவி பார்த்துக் கொண்டிருந்தோம். திடீரென்று நில அதிர்ச்சி ஏற்பட்டால் எப்படி இருக்குமோ அப்படி படத்தில் ஓர் அதிர்ச்சி. முன்னுக்குப் பின் முரணாகச் சம்பந்தமே இல்லாத காட்சிகள். டீவியைக் குறை சொல்பவர்களை நான் எப்பொழுதுமே சாடுவேன். ஆனால் இப்போது .... ரீல் மாறிப் போனதைக் கூட நான் பெரிதாகக் கருதவில்லை. ரீலில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதைக் கண்டு பிடிக்கவும் ஒப்புக் கொள்ளவும் எவ்வளவு தாமதம்?


**திருமதி ராஜி** (குடும்பத் தலைவி):— வானொலியில்தான் "வருந்துகிறோம்" என்பதை அடிக்கடி கேட்டுக் கொண்டேயிருக்கிறோம். அது டீவியிலும் தொத்திக் கொண்டுவிடுமோ என்று கவலையாக இருக்கிறது. எந்த நிகழ்ச்சியையுமே ஜாக்கிரதையாகத் தயாரிக்க வேண்டும். அதிலும் முதலமைச்சர் சம்பந்தப்பட்ட விஷயமென்றால் அதிக அக்கறை வேண்டாமா?

சென்னை டீவி நிலைய இயக்குனர் **திரு கர்க்** ( Garg ):— கவனமாகப் பணியாற்றினாலும் தவறுதல் மனித இயல்பு. நாங்கள் மன்னிப்பும் கேட்டு விட்டோம். எனக்குத் தமிழ் அவ்வளவாகத் தெரியாது. என்றாலும் குறிப்பிட்ட அந்தப் படத்தின் ரீல் மாறியிருக்கிறது என்பது நன்றாகவே தெரிந்தது. பொதுவாக நமது இந்தியப் படங்கள் எல்லாமே இடைவேளைக்குப் பிறகு உட்கார்ந்து பார்த்தால் கூடக் கதை புரிந்துவிடும்.

குறிப்பிட்ட அந்தச் செக்ஷன் அதிகாரியிடம் என்னை அனுப்பி வைத்தார், நிலைய இயக்குனர். செக்ஷன் அதிகாரி திரு பாஸ்கரனிடம் என்னை நான் அறிமுகப் படுத்திக்கொள்ளவும் அதே சமயம் அவரை வேறு ஒருவர் பார்க்க வரவும் சரியாக இருந்தது. வந்த நபரைப் பார்த்து, "நீங்க செய்த. தவறினாலே பத்திரிகைக்காரங்க என்னைக் கேட்கறாங்க" என்றார் அவர்.

அவ்வளவுதான்; பொறுப்பு யாருடையது என்பது பற்றி நீண்ட நேரம் அவர்கள் தங்களுக்குள் தர்க்கம் செய்துகொண்டார்கள். மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். பின்னர் என் பக்கம் திரும்பிக் கூறினார், பாஸ்கரன்: "நாங்கள் முதலில் படத்தைப் போட்டுப் பார்ப்போம். படம் சரியாக இருந்தது என்றால் (தேய்ந்து போகாமல், கோடுகள் விழாமல், அறுந்து இராமல்) நாங்கள் பார்த்த பிரிண்டையே உபயோகப் படுத்திக் கொள்வோம். அப்பொழுது இந்த ரீல் தடுமாற்றத்துக்கே வழி இருக்காது. ஆனால் இந்தப் படத்தைப் பொறுத்த வரையில் பழைய பிரிண்டாக இருந்தபடியால், "புதுப் பிரிண்ட்" அனுப்புங்கள் என்று கேட்டுக் கொண்டோம். இரண்டாவது வந்த பிரிண்ட், ரீல் டப்பாக்களில் மாறிவிட்டிருக்கிறது. அதை நாங்கள் கவனிக்கவில்லை. அதன் விளைவுதான் இது. நான் யாரையும் குறை கூற விரும்பவில்லை. இந்த மாதிரி இதற்கு முன் ஒரு தடவை நடந்துள்ளது. "ஜெய் சந்தோஷி மா" படத்தின்போது. ஆனால் குமரிக் கோட்டத்தில் படத்தின் இரண்டு ரீல்கள் மாறிவிட்டபடியால் பளிச்சென்று தெரிந்து விட்டது. "வருந்துகிறோம்" என்றுதான் போட்டோமே?" பேட்டி: **அசோக**




ஜவுளி ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் முதல்வர் தலையிட்டு சமரசம் காண வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறியுள்ளார்கள்!

கல்கி



1979 ஜூலை 8

சித்தார்த்தி ஆனி 24

மலர்: 37 இதழ்: 49


தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

# கட்டுப்பாடு இழந்த காவலர்கள்

**ப**ஞ்சாபில் ஆரம்பமான போலீஸ் கிளர்ச்சி மற்ற மாநிலங்களுக்கும் புயல் வேகத்தில் பரவியது.

கேரளாவில் ஆரம்பமான மத்திய ரிஸர்வ் போலீஸ் ஆர்ப்பாட்டங்கள் தேசம் முழுவதும் தீ போலப் பரவியது.

அடுத்து ரயில்வே பாதுகாப்பு போலீஸ் கிளர்ச்சி தொடங்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுமீறிச் செல்பவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டிய கடமை கொண்ட போலீசாரே கட்டுப்பாடு இழக்கலாமா? கூடாது என்று அனைவருக்கும் தெரியும்.

இத்தகைய கிளர்ச்சி, ஆர்ப்பாட்டங்களை முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டியதுதான் என்றால் யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். எச். எம். பட்டேல் இரும்புக் கரம் கொண்டு எடுத்த நடவடிக்கைகளை எல்லாரும் வரவேற்பார்கள். ஒரு கரத்தில் தண்டம் ஏந்தும்போதே மற்றொன்றை நேசக்கரமாக நீட்டுகிறார் பட்டேல். பாராட்ட வேண்டியதுதான்.

ஆனால் கதை இத்துடன் முடிந்து போகிறதில்லை. ஓர் இடத்தில் அணை கட்டினால் கால்வாய்க் கரை இன்னோர் இடத்தில் உடைப்பெடுக்கும். தடுப்புக் காவல் சட்டம் கொணர்ந்து அரசு அதிகாரங்களை அதிகப்படுத்திக் கொள்வதாலும் பிரமாத பலன் விளைந்து விடாது.

அடிப்படைகளை ஆராய்ந்து நிவாரணம் தேட வேண்டும்.

காவலர்கள் மற்ற தொழிலாளர்கள் போல் அல்ல, கண்ணியம் காக்க வேண்டியவர்கள்; கிளர்ச்சி - ஆர்ப்பாட்டம் என்றெல்லாம் அவர்கள் இறங்கக் கூடாது என்பதாலேயே, அந்தத் தைரியத்திலேயே, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள்கூட நீண்டகாலமாக அலட்சியம்செய்து வரப்பட்டுள்ளனவா?

உதாரணமாக ரிஸர்வ் போலீஸில், மேலதிகாரி வீட்டுக்குச் சென்று அடிமட்ட ஊழியர் வேலை செய்ய வேண்டும் என்பது போன்ற காலத்துக்கு ஒவ்வாத நடைமுறைகளை நீக்கி விடலாம் தானே? போலீஸாரின் சுயகௌரவமும் தன்மானமும் அரசியல்வாதிகள் தலையிட்டால் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தலாம் அல்லவா? இப்படிக் கவனித்துத் திருத்தப்பட வேண்டிய பல அம்சங்கள் உள்ளன.

இது தவிர, பொதுவாகவே எந்த வேலைநிறுத்தம், கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம் என்றாலும் அடிப்படைக் காரணம் பொருளாதாரப் பிரச்னையாகத்தான் இருக்கும். பலவகை போலீஸாரும் இதற்கு விதிவிலக்கல்ல. தேச மக்கள் அமைதி காத்து நிம்மதியாக வாழ்வது என்பது தேசப் பொருளாதாரத்துடன் பின்னிப் பிணைந்திருக்கும் விஷயம். எவ்வளவு வருமானம் வந்தாலும் அதற்கு முன்பே ஏற்படும் விலைவாசி உயர்வு அதனை விழுங்கி ஏப்பம் விட்டு விடும் என்றால் அமைதி ஏது? நிம்மதி ஏது?

மற்றொன்று. நம்மை ஆள்பவர்கள் தங்களுக்குள்ளேயே ஒற்றுமையின்றிக் கிழக்கும் மேற்குமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பிரதமரும் உள்துறை அமைச்சரும் ரிஸர்வ் போலீஸ் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியதைத் தேசிய நோக்கு கொண்ட எல்லாப் பத்திரிகைகளும் வரவேற்றிருக்கும் போது துணைப் பிரதமர் சரண் சிங்கோ ''இந்தக் கிளர்ச்சி கையாளப்பட்ட விதமே சரியில்லை, கொஞ்சம்கூடச் சரியில்லை'' என்று அதிருப்தியை வெளியிட்டிருக்

கிறார். மக்களுக்கு, வளர்ச்சியில் ஈடுபடும் மற்றவர்களுக்கு எப்படி இவர்களிடம் பய பக்தி, மதிப்பு, மரியாதை ஏற்படும்?

போலீஸோ ராணுவமோ, தொழிலாளிகளோ முதலாளிகளோ, அரசு ஊழியர்களோ — எந் துறையைச் சேர்ந்தவராயினும் சரி, அவர்களுக்குத் ''தேச முன்னேற்றத்தில் நாமும் முக்கிய பங்கு வகிக்கிறோம்; நாடு உயர நாமும் உயர்கிறோம்' என்ற ஊக்கத்துடன் கூடிய ஈடுபாடு ஏற்பட வேண்டும். 'யாரோ ஆள்கிறார்கள் எப்படியோ நாம் காலத்தை ஓட்டுகிறோம்?' என்ற ஏனோதானோ மனப்பான்மைதான் இன்று நிலவுகிறது. இதனை மாற்றுகிற விதமாகக் கொள்கைகளை வகுத்து, திட்டங்கள் தீட்டி, அமல்படுத்த வேண்டும்.

''காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும். கிளர்ச்சிகளெல்லாம் அடங்கி விடும்'' என்று பிரதமர் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதால் மட்டும் நிலைமை சீராகி விடாது.



# அழுத பிள்ளை சிரிக்குமாம்!

நாடக நடிகர்: அடுத்த வாரம் ரிஸல்டுன்னு இன்னைக்கே ஏன்டா அழுகிறாய்?...

பையன்: ஒத்திகை பார்த்துக் கொள்கிறேன்...

எஸ். ராமன்

• • •

மாணவன் 1: கவர்ச்சியான காற்று எது தெரியுமா?

மாணவன் 2: எது?

மாணவன் 1: பருவக்காற்று! —இரா. செயபாலன்.

• • •

டுடோரியல் காலேஜ் பிரின்சிபால்: ''நான் புதுசா ஆரம்பிக்கப் போகிற காலேஜுக்கு அதற்குள் இரண்டு மாணவர்களிடமிருந்து அப்ளிகேஷன் வந்திருக்கு. எனக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.''

மனைவி: ''இதுக்கு சந்தோஷம் தானே பட வேண்டும்?''

பிரின்சிபால்: ''இரண்டையும் அனுப்பியவர்கள் நம் பிள்ளைகள்தான்!''

எஸ். பத்மாவதி

• • •

''கல்யாணம் பண்ணிக்கிட்டா ரொம்ப ''குண்டா' இருக்கற பெண்ணைத்தான் பண்ணிப்பேன்!

''ஏன்?''

''பெரிய ஒட்டியாணமா கிடைக்கும்.''

வெ. சீதாராமன்.

•

ஒருவன் கடையில் டசன் கணக்கில் விலையைக் கேட்டு 7 பனியனும், 7 ஜட்டியும் வாங்கினான். மற்றொருவன் 12 பனியனும் 12 ஜட்டியும் வாங்கினான்.

பக்கத்தில் இருந்த ஒருவர், ''ஏன் ஏழு ஏழு?'' என்றார்.

''வாரத்திற்கு ஏழு நாட்கள். ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொன்று'' என்றான்.

அடுத்தவனைப் பார்த்து, ''ஏன் பன்னிரண்டு?'' என்றதும் ''வருடத்திற்கு பன்னிரண்டு மாதம். மாதத்திற்கு ஒன்று வீதம்'' என்றான்! -இரா. செயபாலன்.

• • •

''இந்த சைக்கிளில் ஏன் பிரேக் எப்போதும் பிடித்தபடியே இருக்கிறது?''

''சைக்கிள் காரருக்கு முக்கியமான நேரத்தில் பிரேக் பிடிக்க மறந்து விடுகிறதாம். அதற்காக அப்படி ஒரு ஏற்பாடு!''

''பிறகு எப்படி சைக்கிளை வெளியில் எடுத்துச் செல்கிறார்?''

''வெளியில் போய் வந்த பிறகு தானே சைக்கிள் இருக்கிற ஞாபகம் வரும் அவருக்கு!'' —தி. நா. அரசு

• • •

நாடக டைரக்டர்: புத்தராக நடிக்கிற கிச்சாமியை உடனே மாற்றணும்.

நாடகாசிரியர்: ஏன்?

டைரக்டர்: நம்ம ஹீரோ 'புத்தம் சரணம் கச்சாமி'ன்னு சொல்றதுக்குப் பதிலா 'புத்தம் சரணம் கிச்சாமி'ன்னே சொல்றார்!

—மு. ரவீந்திரன்



**கங்கை அமரன் கூறுகிறார்:**

சினிமாப் பாடல் என்பது எளிமையும் அதைக் கேட்டு ரசிக்கக்கூடிய மக்களுக்குச் சீக்கிரம் ரெகித்துக் கொள்ளக்கூடிய அளவுக்குச் சாதாரணமாகவும் இருக்க வேண்டும். அப்படி உள்ள பாடல்கள்தாம் இதுவரை மிகப் பிரபலமாகி இருக்கின்றன.

திரை இசைப் பாடல்களை இலக்கண வரம்புக்குட்பட்டுத்தான் எழுத வேண்டும் என்

# ஓரம்போ!


கங்கை அமரன்

இல்லை. பேரிலக்கியமாக இருக்க வேண்டுமென்பதில்லை. கவிஞர், இசையமைப்பாளர், இயக்குனர் இவர்களுடைய முக்கிய எண்ணம் தமிழ்நாட்டின் நாலரைக் கோடி மக்களைக் கவர வேண்டும் என்பதுதான்.

குறிப்பிட்ட இந்த ஓரம்போ பாடலில் மதிப்புக்குரிய திரு துறைவன் அவர்கள் கூறியுள்ளது போல், பிரபலமான பாடல்களின் சாயலோ, வன்முறைத் தாண்டுதலோ, பாலுணர்வைச் சித்திரிப்பதோ, தீய பழக்கங்களை ஊக்குவிப்பதோ இல்லை. அரசியல் கட்சி அல்லது தலைவர்களைத் தாக்கவுமில்லை.

நாங்கள் கேட்பது ஒன்றுதான். 'குறிப்பிட்ட அந்தப் பாடலில் என்ன தவறு இருக்கிறது. அதைத் தடை செய்து வைத்திருப்பதன் காரணம் என்ன?' என்பதுதான்.

நீங்கள் தடை செய்து வைத்திருக்கும் உங்கள் கூற்றுப்படியே சொன்னால், இலக்கியத் தரமற்ற, அனர்த்தமான அவலட்சணமான அந்தப் பாடலை உங்கள் குழந்தைகளோ உங்கள் வீட்டு வேலையாட்களோ, அல்லது உங்களை மறந்த நிலையில் நீங்களேயோ முணுமுணுத்துக் கொள்வதை யார்தான் தடை செய்ய முடியும்?

**இளையராஜா கூறுகிறார்:**

திரு துறைவன் தாது பதில் ஓரம்போ பாட்டை ஏன் தடை செய்தார் என்று சரியான காரணம் கூறவில்லை. மழுப்பி விட்டார். பொதுவாக ஒரு பாடல் தடை செய்யப் படு

# மக்களின் விருப்பத்துக்கு வழிவிடு!

வதற்கான விதிமுறைகளைக் கூறியவர் இப்பாடலைப் பற்றி வரும்போது ''வசனத்தைக் கேட்பது போன்ற உணர்ச்சியே எழுகிறது. பாடல் நயம் இல்லை' என்று கூறியுள்ளார். கவி நயம் இல்லை என்பதற்காக ஒரு பாடலைத் தடை செய்ய முடியாது. அவரே குறிப்பிட்டுள்ள விதிமுறை இதற்கு இடம் தரவில்லை. கவிநயம் இருக்கிறது, இல்லை என்று யார் நிர்ணயிப்பது?

நாலரைக்கோடி தமிழ் மக்கள் எதை விரும்பினாலும் நாங்கள் ஒலிபரப்புவதைத் தான் ரசிக்க வேண்டும். அது நல்லதாகத் தான் இருக்கும் என்று இவரே ஒரு முடிவுக்கு வந்து விட்டார். ஆக மறைமுகமாக இசைக்கும், பாடலுக்கும் இவரும் இவரைச் சார்ந்தவர்களும் ''நாங்கள் தான் அத்தாரிடி'' என்று சொல்லாமல் சொல்வது போல் இல்லையா?

'ஓரம்போ' பாடலின் மீது இவருக்குத் தனி Prejudice வந்து விட்டது. அதைக் கட்டிக் காக்க இவர் படாத பாடு படுகிறார்.

மக்கள் விருப்பம்தான் எங்கள் விருப்பம். அவர்கள் விரும்பும் இந்தப் பாடல் ஒலிபரப்பாகும் வரை நாங்கள் போராடத்தான் போகிறோம். இது இளைய ராஜாவுக்கான போராட்டம் அல்ல. மக்களின் போராட்டம்.

பேட்டி: **''அழகன்''**


இளையராஜா

# பாட்டிமார்களும் பேத்திமார்களும்

## ஜெயகாந்தன்

### 2. சிங்காரத்தின் திருமணம்

கல்யாணம் நடந்தது. சிறப்பாகவே நடந்தது. சிங்கார வேலனின் நிலைமை என்னதான் நெருக்கடி மிகுந்திருந்த போதிலும் அவ்வையாரம்மாள் செல்வநிலையிலிருந்ததால் கன்னிகா தானமாகவே தன் பேத்தியைச் சிங்கார வேலனுக்குத் தந்து அவனுக்கு ஒரு செலவுமில்லாமல் பார்த்துக் கொண்டாள். பொன்னம்மாளுக்கே இன்னும் வயது முப்பதாகவில்லை, அதற்குள் அவள் மாமியாராகி விட்டாள். அமுத வல்லிக்கு வயது 'பதினாறு தான் என்றாலும் சிங்காரத்துக்கு இணையாக வளர்ந்திருந்தாள்.

இந்தக் கல்யாணத்திற்குப் பெரியசாமியை, உரிய முறையில் மரியாதை தந்து, தகுந்த ஸ்தானத்தில் வைக்க யாரும் முன்வரவில்லை. 'சிங்காரம் தான் சின்னப் பையன்; அதுவும் என் மீது கேசு போட்டு விட்டுக் கோபமாய் இருக்கிறான். மற்றவங்களுக்கு புத்தி எங்கே போச்சு?' என்று சகோதரிமார்களின் மீது கோபித்துக் கொண்டு மறுபடியும் இந்த வீட்டு வாசலை மிதிப்பதில்லை என்று சபதம் கூறி விட்டுத் தாசித் தெருவுக்குப் போய் உட்கார்ந்து கொண்டான் பெரியசாமி.



'அவர் இல்லாத இந்த வீட்டில் நானும் இருக்க மாட்டேன்' என்று இத்தனை வருஷத்துக்குப் பிறகு ஏற்பட்ட தைரியத்தில் நாத்திமார்களைப் புறக்கணித்து விட்டு, மங்களம் தன் மூன்று பையன்களையும் இழுத்துக் கொண்டு, தோப்புக்கு மேற்கே பழனியாண்டவர் கோயிலை அடுத்த கிராமத்து வீட்டுக்குப் போய் விட்டாள்.

சிங்காரம் அமுதுவைக் கல்யாணம் செய்து கொண்ட பின் மீண்டும் பெரிய வீட்டுக்கே குடியேறினான். பெரியசாமியை அந்த வீட்டை விட்டுத் துரத்தி விட்ட வெற்றிக் களிப்பு, கல்யாண குதூகலம் எல்லாம் இருந்தும் சிங்காரத்தின் மனத்தில் இந்த வீட்டையும் வைத்துக் கையெழுத்துப் போட்டுக் கடன் வாங்கி, அந்தக் கடனும் வட்டியுமாக இன்னும் சில நாட்களில் தெருவில் வந்து தண்டோராப் போடத் தயாராக இருக்கும் கடன்காரர்களின் வரிசைதான் கையில் தேங்காய் வெற்றிலைப் பாக்குச் சகிதம் வந்து நிற்பது போல் தோன்றியது...

பெரியசாமியின் சகோதரிகள் அனைவரும் சிங்காரவேலுவுக்கு அவன் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டான் என்று தூற்றினர். தோப்பிலிருந்தும், நிலத்திலிருந்தும் வருகிற வருமானங்கள் தற்போது இந்தக் குடும்பத்துக்குப் பாத்தியமில்லை என்று இடைக்காலத் தீர்ப்பு வாங்கியிருந்தான் பெரியசாமி.

கல்யாணத்துக்கு அடுத்தநாளே கையில் கேசுக் கட்டுக் காகிதங்களுடன் நாளெல்லாம் கோர்ட்டிலும் வக்கீல் வீட்டிலும் காத்திருந்தான் சிங்காரம். அவனுக்கு வீட்டில் தங்கவோ சாப்பிடவோ, மனைவியுடன் கொஞ்சிப் பேசி மகிழ்ந்திருக்கவோ, நேரமுமில்லை; மனமுமில்லை.

கல்யாணத்துக்கு முதல் நாளே சிங்காரம் உருவத்திலும் மாறி விட்டான், கிராப்பு வைத்துக் கொண்டான். தங்க நகைகள் ஒன்று கூட உடம்பில் இல்லை. மீசையை நறுக்கி அரை மீசையாக்கிக் கொண்டான். வண்டி மாடுகளையெல்லாம் விற்று விட்டு, கோர்ட்டுக்குப் போக வர வசதியாய் சைக்கிள் வண்டி வாங்கிக் கொண்டான்... ஏற்கெனவே தைத்து வைத்த தும்பைப் பூப்போன்ற வெண்மையான அவனது உடைகள் மட்டுமே பழைய சிங்காரத்தை அடையாளம் காட்டின. சிகரெட் பிடிக்கும் வழக்கத்துக்கு மாறாகக் கட்டுக் கட்டாய்ப் பீடி புகைக்க ஆரம்பித்திருந்தான் சிங்காரம். அதற்குக் காரணம் பொருளாதாரம் மட்டுமல்லாது இப்போது இருக்கும் மனநிலைக்கு [அவன் அதிகமாகப் புகை பிடிக்கவும் வேண்டியிருந்தது. மேலும்

காரமும் வேண்டியிருந்தது போலும். அவன் சதா நேரமும் புகை பிடித்துக் கொண்டே எதிர்காலத்தை எண்ணிப் புழுங்கிக் கொண்டிருந்தான்.

அமுதவல்லி சிங்காரத்துக்கு ஒருநாள் ஆறுதல் சொன்னாள்; அவள் அவனை எப்போதும் போல் மாமா என்றே அழைத்தாள்; நீ நான் என்று ஒருமையிலேயே பேசினாள். ஆனால் புருஷன் என்ற பக்தியும் அவனது சுகதுக்கங்களில் தான் சமபங்கு பெற வேண்டியவள் என்ற பொறுப்பும் குறைவறப் பெற்றிருந்தாள்.

''நீ என்னத்துக்கு மாமா எப்பப் பார்த்தாலும் கப்பல் கவுந்துப் போனா மாதிரிக் கன்னத்திலே கையை வெச்சி யோசனை பண்ணிக்கிட்டே இருக்கே? இப்ப இந்தச் சொத்தெல்லாம் போனாத்தான் என்ன? எங்கே போயிடப் போவுது? உன் கையிலேந்து பெரிய மாமா கைக்கித்தானே போவுது! நாம்ப ஒண்ணும் தெருவுலே நின்னுட மாட்டோம்... தாத்தா எங்கம்மாவுக்கு எழுதி வெச்ச வீடு இருக்குது... எங்க பாட்டி எங்க சித்தப்பா மேலே வழக்காடி வாங்கின நிலம் இருக்குது... அதெ வெச்சிக்கினு ரொம்ப கௌரவமா இருக்கலாம்... நீ வீணா கேஸைப் பத்தி நெனைச்சி வருத்தப் படாதே'' என்று தைரியம் சொன்ன போது சிங்காரம் கண் கலங்கி முகத்தை மேல் துண்டால் மூடிக் கொண்டான். அவனுக்கு இருமல் புகைந்து வந்தது... சற்று நேரம் இருமி, அதனால் வந்த கண்ணீர் போல் துடைத்துக் கொண்டான்.

''என்னத்துக்கு மாமா இந்தப் பீடிச்சனியனை ஓயாம ஊதிக்கிட்டிருக்கே?... அதான் இப்படி இருமுது'' என்று அவன் மார்பைத் தடவிக் கொடுத்தான் அமுது. ''மாமா, கல்யாணத்துக்கப்பறம் நீ ரொம்பவும் இளைச்சுப் போயிட்டே. நீ சரியாகச் சாப்பிடறதில்லே; வீடு தங்கறதில்லே... நீ எதுக்கும் கவலைப் படாதே, மாமா''என்று அவன் மோவாயைப் பிடித்துக் கெஞ்சி, கண்ணீர் சிந்தினாள்.


''அமுது, நான் வருத்தமா இருக்கேன்னு நீ அழுறே? ரொம்ப நல்லாயிருக்கு!'' என்று அவளைப் பரிகசித்து அவளது கண்ணீரையும் துடைத்துவிட்டான் சிங்காரம். ''அமுதா!'' என்று மறுபடியும் ஒரு புன்னகையுடன் அவள் பெயரை உச்சரித்துப் பெருமூச்சு விட்டான் சிங்காரம். பிறகு ஏதோ ஆழ்ந்த யோசனையில் நெற்றி சுருங்க, தன்னையறியாமல் ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். அமுது அவனைத் தடுக்கவில்லை.

''அமுது... இந்தச் சொத்தெல்லாம் நிலைக்காது. சீக்கிரம் எல்லாம் இந்தப் புகைமாதிரி போயிடும்...' நம்ப சாமியார் சொன்னார். அவரு எல்லாந்


''யார்டா இந்தப் பெண்? எல்லாரையும் தள்ளிக் கிட்டு ஏறுது?''
''அவன்தான் என் பெண் Push-லதா!
—கௌரி கிருஷ்ண மூர்த்தி


தெரிஞ்சவர்... என்னமோ நம்ப தோப்பிலே பரதேசிமாதிரித் திரியறார்னு நெனைச்சிக் காதே... அவருசொன்னார்... நான் கோட்டையிலே பொறந்தேனாம்... 'கோட்டையை அழிப்பே... ஆனா உன் குலம் விளங்கும் போ!"ன்னு சொன்னாரு... அதெ நெனைச்சிப் பார்க்கறேன்... நாம் இந்தச் சொத்து வீடு எல்லாம் இல்லேன்னா எப்படி அமுது வாழ்வோம்! எனக்குப் படிப்பும் இல்லே, நான் என்ன உத்தியோகம் பண்ணி உனக்கு ஒரு கௌரவமான வாழ்க்கையைக் குடுப்பேன்னு யோசிக்கிறேன்...'' என்று அவளை அன்





"இந்தச் சின்ன வயசில் உங்களுக்கு வழுக்கை விழுந்துவிட்டதே, சார்! என்ன செய்யப் போகிறீர்கள்?"

"என்னை விடச் சின்ன வயசில் வழுக்கை விழுந்தவர்களைப் பார்த்து ஆறுதலடையப் போகிறேன்."

— ஜீ. நடராஜன்

போடு அணைத்துக் கொண்டு ஆதரவாகச் சொன்னான்.

அமுது சிரித்தாள்: "குலம் விளங்கும்னு சொன்னாரே... அது போதாதா? வேற என்ன மாமா வேணும்?" அவள் மேலும் கொஞ்சம் தைரியமாய்ச் சொன்னாள்:

"ஆமா — நீ பெரிய மாமா மேலே போட்டிருக்கற வழக்கு என்னு ஆவுமாம் எப்போ முடியுமாம்! எங்கப் பாட்டி பேச்சை கேட்டு இட்டுக் கோர்ட்டுக்குப் போயிருக்க வேணும். இந்த அவ்வையாரம்மாளுக்கு இதே தொழில்... இல்லாட்டி மருமகளுக்கு ஆதரவா எங்க சித்தப்பா மேலேயே வழக்குப் போடுவாங்களா?... இப்ப நீயும் பெரிய மாமாவும் ராசியாப் போயிட முடியாதா?" என்று மிகுந்த நல்லெண்ணம் கொண்டு பரந்த மனத்துடன் கேட்டதற்காக, அமுது சற்றும் எதிர் பாராத விதமாய் அவள் கன்னத்தில் அறைந்து தள்ளினான் சிங்காரம்.

"எனக்குப் புத்தி சொல்ல வந்துட்டியோ?... பெரிய மாமாவாம், பெரிய மாமா!... அவனோட ராசியாப் போறதா, அவனைக் கொன்னுட்டு நானும் சாகறதான்னு நீ ஒண்ணும் சொல்ல வேணும்... ரொம்பப் பெரிய மனுஷி!" என்று அவன் இட்டியதை ரம் அடித்ததையும் பார்த்து அமுது நடு நடுங்கிப் போனாள். அவனுக்கு உள்ளூற அவன் அப்படித் தன்னை உதாசீனமாக நடத்தி விட்டதில் பொருத்த அவமானமும், இது மற்றவர்களுக்குத் தெரிந்து விடக் கூடாதே என்ற வெட்க உணர்வும் ஏற்பட்டது.

அவள் இரவெல்லாம் தனிமையில் படுத்து அழுது கொண்டிருந்தாள். சிங்காரம் கட்டுக் கட்டாய்ப் பீடி புகைத்தவாறு இரவெல்லாம் யோசித்தவாறிருந்தான்...

தன்னை அண்டி, தனது நலனில் நாட்டம் கொண்டு, தன் பொருட்டு, சரியாகவோ தவறாகவோ யோசித்து, சொந்தத்துடன் ஏதோ சொன்ன குற்றத்துக்காக அமுதுவைத் தான் அடித்திருக்க வேண்டாம் என்று விடிகிற நேரத்தில்தான் சிங்காரத்தின் கோபம் தணிந்த அறிவுக்கு உறைத்தது.

அழுது கொண்டிருந்த அமுதுவைத் தூக்கிக் குழந்தை போல் சமாதானப் படுத்தினான்.: "இனிமே அவனைப் பத்தி நீ எதுவும் என் கிட்டச் சொல்லாதே. நீ சொன்ன மாதிரி, இந்தச் சொத்தும் பணமும் இல்லாமல் ஒழிஞ்சாத்தான் என்ன? நாம எங்காவது போயிப் பொழைச்சிக்கலாம். இந்த மனுஷாளுங்களையே எனக்குப் பிடிக்கல்லே... அந்த எரிச்சல்லே உன்னைக் கோவிச்சுக்கிட்டேன்!" என்று அவளிடம் வருந்தினான். அமுது அதற்காகக் காத்திருந்தவளே போன்று சமாதானமடைந்தாள்.

சிங்காரம், அமுதவல்லி கல்யாணத்துக்குப் பிறகு, கல்யாணத்துக்கு வந்தவர்கள் கலைகிற மாதிரியே சிங்காரத்தின் சகோதரிகள் — காந்திமதியைத் தவிர ஒவ்வொருவராய்த் தமது புருஷன் வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்...

இந்தச் சொத்துக்கள் அழிந்தாலும் அதிலே இது ஒரு நல்லவிஷயம் என்று நினைத்தான் சிங்காரம். இல்லாவிட்டால் மருடேசன் வீட்டுப் பெண்கள் புருஷன் வீடு தங்குவார்கள் என்று யாராவது சொல்லக் கேட்டதுண்டா?

'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைப்போல்' என்று வாசற்படியில் உட்கார்ந்திருந்த விளக்குச் சாமி ராகம் இழுத்துப் பாடிக் கொண்டிருந்தார். (தொடரும்)

## நாலடங்கும் நூற்றண்டு கூறா!



"பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்தில ஒரு சர்ச் இருக்கு"

"சரி!"

"அங்க நின்னு மாரியம்மன் கோவில் எங்கேன்னு கேளு. அங்கே போ!"

"சரி"

"மாரியம்மன் கோவில் வந்ததும் பெருமாள் கோவில் எங்கேன்னு விசாரி. சொல்வாங்க."

"அது சரி! அப்புறம்?..."

"பெருமாள் கோவில் கிட்டே மசூதி இருக்கும். அங்கேயிருந்து ரைட்ல வந்தேன்னு ஒரு பெரிய சிவன் கோவில் வரும்."

"சரி! சரி!"

"அந்தச் சிவன்கோவிலுக்கு ரெண்டு கட்டடம் தள்ளி ஸ்ரீராமர் இடம் இருக்கு. அங்கதான் பேரினர் நூற்றாண்டு விழா நடக்குது. மறக்காமல் போய்வா!"



நடிகர் விஜயகுமார் தம் வாழ்க்கையை மாற்றி அமைத்த ஆறு நபர்கள் பற்றிக் கூறுகிறார்:

**தாயார் சின்னம்மாள் ரங்கஸ்வாமி:** பட்டுக்கோட்டை அருகே ''நாட்டுச்சாலை'' என் ஊர். என் பெற்றோருக்கு நான் செல்லப் பிள்ளை. நான் ஒரு டாக்டராக வேண்டும் என்று என் தாய் விரும்பினாலும் எனக்கு நடிப்புத் துறையில் உள்ள ஆர்வத்தைப் புரிந்துகொண்டு ஆதரவு காட்டி அப்பாவிடம் எனக்காகச் சிபாரிசு செய்து ஊரிலிருந்து தேவையான பணமும், அனுப்பிவைத்தார். நானும் ஒரு நடிகன் என்று நிரூபித்த போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. நான் நடிக்கும் எல்லாப் படங்களையும் அவர் பார்ப்பார். ஒரு படத்தில் நான் சாப்பாட்டுக்கு இல்லாமல் பட்டினி இருப்பதாக ஒரு காட்சி. அதை ஊரிலே பார்த்த தாயார் ''சாப்பாடு இல்லாமல் தம்பி அழுதே. நான் அனுப்பிய அரிசிபோய்ச் சேரலியா?'' என்று அழுதாராம்! அந்த அன்புத் தெய்வத்தை இங்கு நினைவு கூர்வதில் பெருமைப் படுகிறேன். 76,70 வயதில் என் பெற்றோர் 'ஆக்டிவ்' ஆக கிராமத்தில் இருக்கிறார்கள்.



**நண்பர் எம். ஜகதீசன்:** நான் சினிமாவில் நுழைந்ததற்கு என் உயிர் நண்பர் ஜெகதீசன் ஒரு முக்கிய காரணம். அவரும் நானும் ஒரே அறையில் ராயப்பேட்டை ஹைரோட்டில் பல வருடங்கள் வாழ்ந்தோம். சினிமாவில் சேர நான் முயற்சிகள் செய்து கொண்டிருந்த காலம். மூவி மேக்கர்ஸ் கவுன்சில் என்ற ஸ்தாபனம் சினிமாவில் நடிக்க விரும்பிய 16000 பேர்கள் அனுப்பிய மனுக்களிலிருந்து 500 பேரைத் தேர்ந்தெடுத்து 50 பேரை நேர்முகத் தேர்வுக்கு அழைத்தார்கள். டைரக்டர்கள் ஸ்ரீதர், ஏ. பி. நாகராஜன், கே. எஸ். கோபாலகிருஷ்ணன், மாதவன் ஆகியோர் இருந்தார்கள். நான் நடித்துக் காட்டினேன். ஆனால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மனத்தில் குழப்பம். இவ்வளவு டைரக்டர்களும் வேண்டாம் என்றால் பின்னர் எங்கே வாய்ப்புத் தேடுவது என்று நினைத்த போது, ''இவ்வளவு பேரும் உன்னிடம் வந்து நிச்சயம் கூப்பிடத்தான் போறாங்க, தைரியமாக இரு'' என்று இமாலய நம்பிக்கை அளித்தார் நண்பர்.

ஜகதீசன் ஒரு கெட்டிக் கலைஞர். அவர் திறமையை மெச்சிய ஓர் ஆங்கிலேயர் என்ஜினியரிங் மாடல்கள் செய்ய அவரை லண்டனுக்கு அழைத்துச் சென்றார். அவர் இப்போது பல ஆயிரம் மைல்கள் தூரத்தில் இருந்தாலும் என் உடன்பிறவாச் சகோதரர்.



**டைரக்டர் மாதவன்:** திரு எஸ்.வி. ஸஹஸ்ரநாமம் குழுவில் நான் நடித்ததைப் பார்த்து 'ராஜபார்ட் ரங்கதுரை' படத்துக்கு என்னை அழைத்தார் மாதவன். ஆனால், ''இப்போது வேண்டாம் பிறகு பார்த்துக்கொள்வோம்'' என்று திருப்பி அனுப்பி விட்டார். எனக்குத் தாங்கொணாத வருத்தம். ஆனால் ஒரே மாதத்துக்குள் மீண்டும் என்னை வரவழைத்துப் ''பொண்ணுக்குத் தங்க மனசு'' படத்தில் கதாநாயகனாக அறிமுகப் படுத்தினார். தொடர்ந்து ''மாணிக்கத் தொட்டில்'', 'பாட்டும் பரதமும்', 'பாலூட்டி வளர்த்த கிளி', 'சங்கர் சலீம் சைமன்' 'என் கேள்விக்கு என்ன பதில்?' என்று பல படங்களிலும் பல நல்ல பாத்திரங்களாகக் கொடுத்தார். நான் மஞ்சுளாவைத் திருமணம் செய்துகொண்ட போது திரையுலகில் பரபரப்பு ஏற்பட்டது. எங்கள் திருமணத்தை ஏற்றுக் கொண்டு எங்களை வாழ்த்தினார். அவருக்கு என்றும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

**மஞ்சுளா:** எந்த மனிதனுக்கும் வாழ்க்கையில் இன்றியமையாத கட்டம் 'திருமணம்.' தனக்கு

- டைரக்டர் மாதவனுடன்
- தாயுடன்
- தமிழக முதல்வர் எம். ஜி. ஆருடன்
- மஞ்சுளாவுடன் விஜயகுமார்



அழகான மனைவி வர வேண்டும் என்று எண்ணாத ஆண் இல்லை. ஓரளவு பெயர் புகழ், வசதிகள் பெற்றிருந்த நான் மஞ்சுளாவைச் சந்தித்தபோது உடனே அவளைத் திருமணம் செய்துகொள்ள நினைத்துக் கேட்டேன். நான் ஏற்கெனவே திருமணமானவன், குழந்தைகளுக்குத் தகப்பன் என்று தெரிந்தும் அவள் உடனே சம்மதித்தாள். என்னைவிட சினிமாத் துறையில் ஸீனியர் ஆர்டிஸ்ட், குணம், திறமை, அறிவு எல்லாம் கொண்டவளை நான் மனைவியாகப் பெற்றது உண்மையிலேயே எனது அதிர்ஷ்டம்தான். அது மட்டுமல்ல, என் மனைவி முத்துக் கண்ணு, குழந்தைகள் அனைவரின் மீதும் மஞ்சுளா அன்பு கொண்டு, மகிழ்ச்சிகரமாக, இணைந்து வாழ்வது சிறப்பான அம்சம். ''Behind every successful man , there is an intelligent woman'' என்பதற்கு மஞ்சு எடுத்துக்காட்டு.

**மக்கள் திலகம் எம். ஜி. ஆர். :** என்னைக்கேட்டால் ஒவ்வொரு சராசரி மனிதனுக்கும் அரசியல் ஈடுபாடு தேவை என்பேன். என்னையும் சேர்த்து லட்சக் கணக்கான பேர்களை நடிகர் என்றமுறையில் கவர்ந்தவர் எம். ஜி. ஆர். இந்தியத் திரைப்படத் துறையில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியவர். அத்துடன் நில்லாது ஓர் அரசியல்கட்சி அமைத்துத் தலைவராகி, முதலமைச்சராகவும் விளங்குகிறார். அரசியலில் ஈடுபட வேண்டும் என்று எனக்கிருந்த ஆசையை, முழுமையாக்கி என்னை அரசியலில் ஈடுபடச் செய்தவர் அவர்;

**அன்னை பராசக்தி :** என் வாழ்க்கையில் திருப்பம் ஏற்படுத்திய ஐவரைப்பற்றிச் சொன்னாலும் முன்னேற்றம் எல்லா வகையிலும், ஏற்படக் காரணமானவர் மற்றொரு பெண், தாய். அவள்தான் அன்னை பராசக்தி. மகிழ்ச்சிகரமான வாழ்க்கையும் நல்லதொரு தொழில் அமைப்பும் எனக்குப் பிரசாதமாக வழங்கிய இறைவியைச் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

பேட்டி: ''சிக்கி''

# வழுக்கி விடாத ஆட்டம்!

● எழும்பூர் நகரசபை ஹாக்கி மைதானம் அன்று மழை பெய்து இலேசாக வழுக்கிவிடும் நிலையில் இருந்தது. சர்வதேச ஆட்டக்காரரும் ஜலந்தர். ஏ.எஸ்.ஸி. குழுவின் கோச்சுமான பல்பீர் சிங், நடுவர் கௌஸை அணுகி, ''மைதானம் இலேசாக வழுக்கிவிடும் போலிருக்கிறதே! எங்கள் குழு எப்படி ஆட முடியும்?'' என்று அங்கலாய்த்தார்.

''ஐயா! அதனை முடிவெடுக்க வேண்டியது நடுவர்களின் வேலை. தெரியுமல்லவா?''

ஆட்டம் தொடங்கி அரை மணி ஆயிற்று. ஆட்டத்தில் ஜலந்தர் ஏ.எஸ்.ஸி. குழு ஒரு கோல் போட்டு விட்டது. இத்தருணத்தில் நடுவர் கௌஸ். 'கோச்' பல்பீரை அணுகி, ''மைதானம் வழுக்கிவிழும் போலிருக்கிறது என்றீர்களே, இப்பொழுது மாட்சை நிறுத்தினால் என்ன?'' என்று குத்தலாகக் கேட்டார்.

''வேண்டாம்! வேண்டாம்!'' என்று அலறினார் பல்பீர் சிங். முதலில் தம் குழுவுக்குப் பாதகமாக எண்ணிய மைதானம் 'கோல்' விழுந்தவுடன் சாதகமாகப் போய் விட்டது!





● ஒலிம்பிக் ஆட்டக்காரர் ஜென்லாவிடம். ''சர்வதேசப் போட்டிகளில் நம் இந்திய ஆட்டக்காரர்கள் பல தோல்விகளைச் சந்தித்து வருகிறார்களே. அதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டேன்.

''ஹாக்கி ஒரு டீம் கேம். திடீரென்று ஓர் ஆட்டக்காரரையோ, இருவரையோ தலையில் தூக்கி வைத்து ''Star Super Star'' ஆக்குகிறோம். அவர்களுக்கு 'மண்டை 'கன'த்து விடுகிறது. ஹாக்கி 'டீம் கேம்' என்பதையே அவர்கள் மறந்து ஆடத் தொடங்குகிறார்கள். இதனால் 'இணைந்த ஆட்டம்' பூஜ்யமாகி விடுகிறது. தோல்வியும் கூடவே வந்து விடுகிறது'' என்று அனுபவ பூர்வமாகச் சொன்னார்.

● ஸி.ஆர்.பி. வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டத்தை அடக்க ராணுவம் அழைக்கப்பட்டது. ஹாக்கி மைதானத்திலும் ராணுவமே ஸி. ஆர். பி.யை வென்றது. ஜலந்தர் ஏ.எஸ்.ஸி. ராணுவ ஹாக்கிக் குழு திறமையான 'டீம்' மட்டுமல்ல; அர்ஜென்டினாவில் உலகக் கோப்பை ஆட்டத்தில் கலந்து கொண்டு ஆடிய வின்சென்ட் லக்ரா, பங்ரா ஆகியோரைக் கொண்டது! ஆங்காங்கே ஸி. ஆர்.பி. தன் திறமையைக் காட்டினாலும், ஏ.எஸ். ஸி. ராணுவப் படையே வென்றது. முருகப்பா தங்கக் கோப்பையும் ஆளுக்கொரு கைக்கினும் அந்தக் கோஷ்டியினர் பரிசாகப் பெற்றனர்.

— குண்டுமணி

படங்கள்: 1. முருகப்பா ஹாக்கிப் பந்தயம்.
2. ஜலந்தர் ஏ. எஸ். ஸி. குழு காப்டன் மந்திரி திரு ராகவானந்தத்திடம் 'தங்கக் கோப்பை' பெறுகிறார். போட்டோ: வி. சிவராமன்

# மும்முனைகள்

அட்டமனஜ

● தற்பொழுது இந்தியத் தொழிற்சாலைகளில் நிலவி வரும் தொழில் அமைதியின்மையால் பொதுஜன நலன் பாதிக்கப்படுவதை ''மும்முனைகள்'' மூலம் தெளிவாகக் காட்டி இருக்கிறீர்கள். தொழிலாளி—முதலாளி என்ற இருமுனைகளே இதுவரை எடுத்தாளப்பட்டிருந்தன என்றால் தேச நலன் என்று மூன்றாவது முனை எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை அழகான கதையுடன் அழகாகச் சொல்லியிருக்கிறீர்கள். அருமை.

சங்கர்நகர் — எஸ். ராஜாமணி

● தமிழ்நாட்டுப் பரப்பளவையே உடைய ஜப்பான் அமெரிக்காவிற்கு நிகராகத் தொழில் வளம் பெற்று உள்ளது. அங்கு தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய நேரிட்டால், தாங்கள் உபயோகிக்கும் மெஷின்களுக்கு எண்ணெய் தடவித் துருப் பிடிக்காமல் வைத்து விட்டுச் செல்வார்கள். இங்கோ சமீபத்தில் 'என்ஜின் வால்வுகள்' என்ற தொழிற்சாலையில், தொழில் நிறுத்தம் ஏற்பட்ட போது, சில நாட்டுப்பற்று உள்ள தொழிலாளர்கள் அவ்வாறு எண்ணெயிட்டுப் பாதுகாப்பு செய்த போது அவர்கள் மற்றவர்களால் தடுக்கப்பட்டார்கள்!

சென்னை—81 — ஆ. சுப்பிரமணியம்

● ''மும்முனைகள்'' தொடர் கதையை நாங்கள் கல்கி வந்தவுடன் முதன் முதலில் அதைத்தான் படிப்போம். கதையின் முடிவு சரியில்லை. கம்பெனித் தொழிலாளர்கள் பிரச்னை தீர்ந்ததா? சத்யா, பிரமீளா (பிங்கி) தீபக், கலோசனு இவர்களைக் கதையின் முடிவில் ''அம்போ'' என்று விட்டுவிட்டீர்களே.

செருமுடி, பாகசாலை — ஏ. ராஜேந்திரன், கணேசன், பி. ராமையன்

● ''மும்முனைகள்'' கதையின் ஆசிரியர் இப்படித் திடீரென்று முடித்துவிடுவார் என்று எதிர்பார்க்கவில்லை. கல்பனு அவர்களின் ஓவியங்கள் 'Excellent'. மொத்தத்தில் கதை 'OK'.

சென்னை—34 — வி. பாஸ்கரன்

● தொழிலாளர் போராட்டத்தை மிகச் சிறப்பான முறையில் இரு குடும்பத்துடன் இணைத்து ''மும்முனைகள்'' என்னும் பெயரில் ஒரு நல்ல தொடர்கதை வழங்கியமைக்கு நன்றி.

கோவை — கு. ராஜகோபால்

● என்ன சார் இது!? கல்யாணம் செய்து முடிகிறவரைக்கும் 'பிங்கி'யுடைய மாமனாரை உயிரோடு வைத்திருக்கலாமே?

உத்தமபாளையம் — வி. கே. ராமச்சந்திரன்

● ''மும்முனைகள்'' அருமையான பாத்திரப் படைப்புகளுடன், மிகவும் இயல்பான முறையில் தொடர்ந்தது. முடிவு 'சப்'பென்றாகி விட்டதே. பிங்கி, சத்யா திருமணத்தைப் பார்க்க முடியவில்லை. 'தொழிலாளர் — முதலாளி'' உறவைச் சுமுகமாக அமைத்து முடித்திருந்தால், இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

சென்னை—30 — ஜ. ராஜாராமன்

● 'மும்முனைகள்' படித்து முடித்தேன். நெஞ்சைத் தொட்ட பாத்திரங்கள். உன்னதமான படைப்புக்கள் தொடரட்டும்.

எட்டயபுரம் — கே. கே. ராஜன்

● ''என்னது!... இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் மும்முனைகளை முடித்து விட்டீர்கள்? தொழிலாளர்கள், முதலாளிகள் உறவின் ஆணி வேரையே தொட்டுக் காட்டுவீர்கள் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் மரத்தையும், பனிச்சென்று இருக்கும் பூ, பிஞ்சு, காய், கனிகள் இவற்றை மட்டும் சுட்டிக்காட்டி விட்டு விட்டீர்கள். தாங்கள் ஆரம்பத்தில் சொன்னது போல் 'சிலர் இதைப் போன்ற கதைகளை எழுதவே பயப்படுவார்கள். சிலர் இதைப் போன்ற கதைகளைப் பிரசுரிக்கவே அஞ்சுவார்கள்' என்று நீங்கள் விளம்பரப்படுத்திய அளவிற்கு இதில் தெரிந்த புரட்சி எதுவும் இல்லை..

மதுரை — சக்திநாயனார்

● மனிதாபிமானம் நிறைந்த தொழிலதிபரான வைத்தியலிங்கத்தைக் கதாசிரியர் இப்படி சாகடிப்பாரென்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அருண்ராஜ் போல் நானும் சிறிது நேரம் அழுதே விட்டேன்.

செங்கோட்டை — ஏ. எம். ராஜ்



● தாங்கள் ஏற்கெனவே கல்கியில் செய்யும் புதுமைகளையே எங்களால் தாங்க முடிய வில்லை. எதைச் சொல்வது எதை விடுவது தங்களைப் பாராட்ட! இதெல்லாம் போதா தென்று 24.6.79 இதழில் அறிவிக்கப்பட்ட புதுமைகள், அதிசயங்கள், அடேயப்பா! தங்களின் பணி சிறப்புடன் தொடர விநாயகர் அருள் புரியட்டும்

ராஜபாளையம் பா. சேதுராமலிங்கம்

● 6, 12, 14, 24, 36, 43, 48, 56 ஆகிய பக்கங்களில் பல அதிசயங்களைத் தந்த, சென்ற இதழை, ஏல 'அதிசயச் சிறப்பிதழ்' என்று அழைக்கக் கூடாது!

பழைய பல்லாவரம் பி. ஆர். சுதாகர்

● '24.6.79 கல்கி இதழில் பல அதிசயங்கள் காத்திருக்கின்றன...' என்ற அறிவிப்பைப் போன வாரம் படித்தவுடன்... ஏதோ தானே வென்றுதான் இருந்தேன். ஆனால்...இதழைப் பார்த்தவுடன்...

சார் என்னால் நம்பவே முடியவில்லை!

சுஜாதா, சாண்டில்யன், லட்சுமி, வாஸந்தி... அம்மாடியோவ்...!

கல்கி இதழில் காணப்படும் வியத்தகு மாற்றங்கள்... பரவசமூட்டுகிறது...

உதகை ரஜனிதேவி

● சுந்தரவடிவேலு வற்புறுத்திக் கூறியுள்ள 'Co-curricular activities' ஐ சென்னை பல்கலைக் கழகம் மட்டுமல்ல; ஏனைய அனைத்துப் பல்கலைக் கழகங்களும் செயல்படுத்த வேண்டும்: சிறந்த சமுதாயம் உருவாக வழிவகுக்க வேண்டும்.

திருச்சி வெ. முத்துகணேசன்

● திரு நெ. து. சு. பேட்டி படித்தேன். அவர் கருத்துக்கள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. ஆனால் இவற்றையெல்லாம் சொல்ல வேண்டிய நேரத்தில், சொல்ல வேண்டியவர்களிடம் அவர் அடித்து ஆணித்தரமாகக் கூறியிருந்தால், பலன் இருந்திருக்கும். நிர்வாகத் தலைமையில் ஒரு பயம் கலந்த போக்கு கல்வித் துறையில் மட்டுமல்ல எல்லாத் துறைகளிலும் இன்று நிறைந்து காணப்படுகிறது. நிர்வாகத் தலைமையை எதிர்த்துப் போராட வேண்டும் என்கிற உணர்வு வெகு வேகமாக அடிமட்டத்திலும் அரசியல் வாதிகளிடமும் வளர்கிற போது, அதனால் எழுகின்ற பிரச்னைகளைச் சமாளிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற தைரியம் இன்று நிர்வாகத் தலைமையில் அறவே இல்லை.

பம்பாய்—8 வசந்தா ராமதாஸ்

● தான் இயக்கிய நான்கு படங்களில் எதுவுமே தனக்குப் பிடிக்கவில்லை என்று 'வெள்ளி விழா' டைரக்டர் பாரதிராஜா கூறியதைக் கண்டு பெரிதும் வியப்படைந்தேன். கற்றுக் குட்டி டைரக்டர்களெல்லாம் கலைக்காகச் சேவை செய்வதாகப் பேட்டியளிக்கும் போது, ஸில்வர் ஜூப்ளி படங்களைத் தொடர்ந்து வழங்கி வரும் பாரதிராஜா இம்மாதிரி கூறியிருப்பது அவரது அடக்கத்தையும், திறமையையும் வெளிப்படுத்துகிறது. Deep Rivers move in silence என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

திருச்சி—8 எஸ். பி. முருகப்பன்

● அட்டைப் படப் பெண்ணுக்கு அருகில் தம்பூர் இருந்தால் கர்நாடக இசைதான் ரொம்பப் பிடிக்கும் என்றுதான் அர்த்தம் செய்து கொள்ள வேண்டுமா? ஹிந்துஸ்தானி ஸங்கீதம் பிடிக்கும் என்று பொருள் செய்து கொள்ளக் கூடாதா?

பம்பாய் தேவராஜன்

● ஏன் சார், ஜூலை 15ந்தேதி இதழ் உணவுப் பிரியர்கள் சிறப்பிதழா அல்லது உல்லாசப் பயணிகள் சிறப்பிதழா?

கதிரிமங்கலம் வி. ரங்கநாதன்

கல்கி உணவுப் பிரியர்கள் சிறப்பிதழ் அறிவித்தது 4-3-79 இதழில். இதன் பிறகு 'இதயம் பேசுகிறது' அறுசுவைச் சிறப்பிதழை அறிவித்து வெளியிட்டுள்ளது. எனவேதான் மாற்றம். — ஆசிரியர்


● 'இதயம் பேசுகிறது' பத்திரிகையில் லட்சுமி சுப்பிரமணியம் எழுதிவரும் 'மறப்பதற்கு ஒரு நெஞ்சம்' தொடர்கதையில் சில இடங்கள் — சம்பவக் கோவைகளும், சூழ்நிலைகளும், சம்பாஷணைகளின் அமைப்பும், சொற்றொடர்களுமே அமரர் கல்கி எழுதிய 'தியாக பூமி' நாவலில் வருவன போன்றே அமைந்துள்ளன. குறிப்பாக இரண்டு அத்தியாயங்களில் இப்படி உள்ளது.

தாங்கள் ஏன் இவ்விஷயத்தைப் பற்றி லட்சுமி சுப்பிரமணியத்திற்கு எழுதக் கூடாது?

சென்னை—34 கே. சீதா

(காப்பிரைட் உரிமையாளர் என்ற முறையில் எழுதினேன். கிடைத்த பதில் எனக்குத் திருப்தி தரவில்லை. இரு கதைகளுக்கும் இடையில் சம்பந்தம் இல்லை என்றாலும் அவற்றில் இந்த இரு இடங்களுக்கிடையே திடமான ஒற்றுமை இருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. — இ. ராஜேந்திரன்

# அடேயப்பா! அதிசயச் சிறப்பிதழ் தான்!



# தியாக வல்லபன்

## விக்கிரமன்

### அத்தியாயம் 17

### ''மறக்க வேண்டியதுதான்''

சோழச் சக்கரவர்த்தி ராஜராஜ சோழ தேவர் மிகுந்த சிந்தனையில் ஆழ்ந்தார். திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பிப் பல்லவராயர் அவரது நம்பிக்கைக்குப் பெரிதும் உரியவர். அவர்களுடைய நட்பு அந்தஸ்துக்கும் அப்பாற்பட்டது. நம்பியின் உண்மை உள்ளத்தை அரசர் அறிவார். சோழ வளநாட்டிற்குத் தளபதி என்ற முறையில் அவர் ஆற்றிய தொண்டைப் பாட ஒட்டக்கூத்தர் தான் வர வேண்டும். அவர் மனம் மாறியிருந்தால் சோழ நாட்டைத் தமது கைக்குள் வைத்துக் கொண்டிருப்பார். அரசரை ஆட்டிப் படைத்திருப்பார். இளவரசர் பதவிக்குத் தன் சகோதரியின் மகனை அவர் தேர்ந்தெடுத்த போது, அதற்கு அவர் கூறிய காரணங்களை ஏற்றார். இரு குழந்தைகளுக்கும் ஆபத்து நேரவிருந்த போது, அதை ஒற்றர்கள் மூலம் அறிந்து முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்து, கங்கை கொண்ட சோழ புரத்திலிருந்து காப்பாற்றினார். காப்பாற்றியதுடன் குழந்தைகளை வளர்ப்பதற்குத் தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து ஒப்படைத்தார்.

சோழ குலத்துக்கே பெரும் தொண்டாற்றிய நம்பியின் உள்ளக் கிடக்கை தம் மகளை, வல்லபனுக்கு மணம் புரிந்து கொடுக்க வேண்டும் என்பது. ராஜராஜரின் இரண்டு குழந்தைகளுள் ஒருவன் வளர்ந்து, தக்க பருவம் அடையும் போது, வல்லபன் தனது பதவியை அவனிடம் ஒப்படைக்க வேண்டும். எட்டு வருடங்களோ, பத்து வருடங்களோ! அந்தக் காலம் வரை தன் மகள் இளவரசியாகத் திகழ்வாள்!

திருச்சிற்றம்பலத்து இறைவனிடம் அசையாத பக்திகொண்ட நம்பி, இச்சிறு ஆசையைத் தன் உள்ளத்தில் கொண்டிருக்க வேண்டாம். ஆவலை அரசரிடம் தெரிவித்திருக்க வேண்டாம்...

வெளிப்படுத்தி விட்டார். சக்கரவர்த்திக்கும் சங்கடம்தான். என்ன முடிவைக் கூறுவார்? இரவெல்லாம் அவருக்கு உறக்கமில்லை. திருக்கோவலூர் மலையமான் தன் சகோதரரின் மகளைத் தான் மணம் புரிவிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

நம்பியிடம் தம் கருத்தை உடனே எப்படிச் சொல்லுவார் ராஜராஜர்! சுற்றி வளைத்துப் பேசத் தொடங்கினார்.

''முதல் குழந்தையைக் கூத்தர் வளர்ப்பார் என்று எதிர்பார்த்தேன்'' என்று பேச்சைத் தொடங்கினார் அரசர்.

''கேசவசுவாமியின் விருப்பப்படியே நான் செய்தேன். அல்லியை விட்டு இளவல் பிரிய மாட்டேன் என்கிறான். அவளும் தன் சொந்தக் குழந்தையைப் போல் அவனை வளர்க்கிறாள். கூத்தர்பிரானும் தம் முதிய பருவத்தில் குழந்தையைக் கொஞ்சும் அழகே அழகு'' என்றார் நம்பி.

சக்கரவர்த்தி பெருமூச்சு விட்டார். ''குழந்தைகளின் பால் முகத்தைப் பார்க்கக் கூடக் கொடுத்து வைக்காத பாபி நான், நம்பி. நான் முன்பிறவியில் என்ன பாபம் செய்திருப்பேன்?'' என்று கண்களில் நீர் மல்கக் கேட்டார்.

''சக்கரவர்த்திகள் இப்படி மனத்தைக் கலங்கவிடக் கூடாது. குழந்தைகள் தக்க இடத்தில் சௌக்கியமாக வளர்ந்து மாமேதைகளாக வீரர்களாக ஆவார்கள். சில வருடங்களே... கேசவ சுவாமி எப்போது உத்தரவிடுகிறாரோ, அப்போது இரண்டு குழந்தைகளும் பழையாறை மாளிகைக்கு வந்து விடுவார்கள். வருங்காலத்து மாமன்னராக விளங்கப் போகும் இளவரசரை கேசவசுவாமி வளர்க்கிறார் என்றால் தாங்கள் முன் பிறவியில் புண்ணியம் அன்றோ செய்திருப்பீர்கள்'' என்று சமாதானப் படுத்தினார் நம்பி.

''நம்பி, தங்களிடம் என் மனத்திலுள்ளதை நான் ஏன் மறைக்க வேண்டும்? என் மனத்துக்குள்ளே ஏதோ அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. நான் அதிக காலம் உயிருடன் இருக்க மாட்டேன் என்று தோன்றுகிறது... அதற்குள் ஒரு தடவை என் மழலைச் செல்வங்களைப் பார்க்கக் கூடாதா – என்னைப் பார்க்க அனுமதிக்க மாட்டீர்களா?'' என்று நெஞ்சு தழுதழுக்கப் பேசினார்.


நம்பி உரிமையுடன் சினங் கொண்டவராக, ''சக்கரவர்த்தி அவர்களே! தங்களுக்கு நான்

---

''இந்த மோட்டார் சைக்கிளை நான் வாங்கியதிலிருந்து, ரிப்பேருக்காக ஒரு பைசாகூட கொடுத்தது கிடையாது.''

''ஆமாம் ஒர்க்ஷாப்பில்கூட இதையே தான் சொன்னார்கள்.''

- எம். ஏ. அப்துல் காதர்



அறிவுரை வழங்குவதற்கும், சற்றுக் கண்டிப்பாகப் பேசுவதற்கும் மன்னிக்க வேண்டும். தாங்கள் பல்லாண்டுகள் வாழ வேண்டும். வாழ்வீர்கள் என்பது என் நம்பிக்கை. கேசவ சுவாமிகளின் ஆசியும் அப்படித்தான். ஆனால், குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை, உள்ளத் துடிப்பைச் சற்று அடக்கிக் கொள்ளுங்கள்... தாங்கள் குழந்தைகளைச் சந்திக்கக் கூடாது . என்பதற்காகத்தான், பழையாறையிலிருந்து தள்ளிச் சிற்றூரில் குழந்தைகளை வளர்க்க ஏற்பாடு செய்தேன். தங்கள் உடல் நிலை சற்று அபிவிருத்தி அடைந்து வரும் சமயத்தில், இப்படி மனத்தில் கவலையை ஏற்படுத்திக் கொள்ளலாமா?'' என்றார்.

சக்கரவர்த்தி மெல்ல நகைத்தார்: ''நம்பி! ஒரு கவலை போனால் மற்றொரு கவலை ஏற்படுகிறது'' என்றார்.

''இப்போது புதிய கவலைக்குக் காரணமில்லையே?'' என்று கேட்டார் நம்பி. ''பாண்டிய நாட்டினின்று தாக்குதல் ஏதாவது ஏற்படும் என்ற கவலை சில ஆண்டுகளுக்கு இல்லை. அண்ணன் தம்பி சண்டை தான் இப்போது அங்கே புகையத் தொடங்கியிருக்கிறது. இரு குழந்தைகளையும் கொல்லத் திட்டமிட்டவர்களையும் சிறையில் அடைத்து விட்டேன். உட்பகைக்கு இடமில்லை. வேங்கியினின்று வந்துள்ள தங்கள் சகோதரியின் குமாரன் மிகத் திறமைசாலி. தக்க இளவரசரைத்தான் தாங்கள் தேர்ந்தெடுத்துள்ளீர்கள்... வேறு கவலை ஏது அரசே?'' என்று நம்பி கேட்டார்.

''இளவரசரைப் பற்றிய பிரச்னைதான்.''

''இளவரசரைப் பற்றியா? பட்டம் சூட்டுவதற்கான நாளைக் குறித்து விட்டார் கேசவ சுவாமி. இளவரசியைத் தேர்ந்தெடுக்க வேண்டியதுதான்...''

''அதுதான் பிரச்னை...''

''அதில் என்ன பிரச்னை இருக்கிறது சக்கரவர்த்தி?''

''இளவரசி யார் என்று தேர்ந்தெடுப்பதில் தான்...'' என்று கூறி மெல்ல நகைத்தார் ராஜராஜர்.

நம்பி புரிந்து கொண்டு விட்டார். அங்கே மௌனம் நிலவியது. மௌனத்தை அரசர் கலைத்தார்.

''நம்பி அவர்களே, தாங்கள் என் நிலையிலிருந்தால் என்ன செய்வீர்கள்? சோழ நாட்டுக்கு தன்னலமற்ற சேவை புரியும் ஒருவர், அவரது அருமை மகள். சோழ நாட்டின் முதுகெலும்பு போன்ற இருக்கோவலூர் மலையமான். அவருக்கு என் மீது எப்போதும் கோபம். தன் மகளை இழந்த துக்கம் மாறுமுன்பு, தன் பெண் வயிற்றுப் பெயரன் இளவரசனாகவில்லையே என்ற ஏக்கம் வேறு. அவர் குலம், சோழ நாட்டுடன் பல ஆண்டுகளாக மண மகளை அளித்து உறவை உறுதிப் படுத்தி வருகிறது. இப்போது மலையமான் தன் சகோதரரின் மகளை வல்லபனுக்கு அளிக்க முன் வருகிறார். நான் யாரைத் தேர்ந்



தேடுப்பது?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

நம்பிக்குக் கோபம் மெல்ல மெல்ல மூளத் தது. அரசரிடமன்று, மலையமானிடம்தான்.

''சக்கரவர்த்தி அவர்களே! மலையமானுக்கு எப்போதும் யார் மீதாவது கோபம்தான். தங்கள் மீது ஏன் கோப்பட வேண்டும்? ஒரு வயதுக் குழந்தையை இளவரசராக்க முடியாது என்று அவருக்கே தெரியுமே? இன்று இல்லாவிடில் இன்னும் பத்து வருடங் களுக்குப் பிறகு அவருடைய பெயரன் தான் இளவரசன். பிறகு இந்த நாட்டுப் பேரரசர். வல்லபனுக்கு இப்போது கிடைக்கும் அதிர்ஷ் டம் இன்னும் சிறிது காலத்துக்குத்தான்...'' என்று கூறியபோது மன்னர் குறுக்கிட்டார்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''


''அந்த நிபந்தனையின் பேரில்தானே வல்ல பன் இளவரசர்ப் பட்டத்தை ஏற்கிறார். இன் னுள்ள இளம் பிஞ்சு தக்க வயதடையும் போது வல்லபன் விட்டுக் கொடுக்க வேண்டியது தானே? அப்படிச் செய்வதாக, வல்லபன் சம்மதித்துக் குழந்தைகள் எதிரே உறுதி எடுத் திருக்கிறான். அந்த உறுதியை வல்லபன் மீற மாட்டான். இளவரசர்ப் பட்டத்தை உதறித் தள்ளி, தியாகம் செய்து தியாக வல்லபனாக மாறும் ஒருவனுக்கு மலையமான் மகளை மணம் புரிவிக்கச் சம்மதிக்கிறாரா? தாங்கள் உறுதி யாகக் கேட்டீர்களா?'' என்று நம்பி கோப மாகப் பேசினார்.


மன்னர் பேச முற்படுவதற்குள், ''மலைய மானுடைய சகோதரர் மகள் இளவரசியாக வாழ்ந்தவள் தன் பதவியை இழக்கச் சம்மதிப் பாளா கேட்டீர்களா? வருங்காலத்தில் மலைய மானும், அவரது சகோதரரும், மன வேற் றுமை கொண்டு ஒருவரோடொருவர் சண்டை யிட்டுக் கொள்ள மாட்டார்கள் என்பது என்ன உறுதி?'' என்று கடுமையான குரலில் கூறினார்.

மன்னர் மிக அமைதியாக, ''நம்பி, இந்த வாதம் தங்களுக்கும் பொருந்தும் அல்லவா? தங்கள் மகள் பதவி இழக்கச் சம்மதிப்பாளா?'' என்று கேட்டார்.

நம்பி உணர்ச்சி வசப்பட்டவராக, ''என் மகள் பதவி காரணமாக வல்லபனை மணக்க முன் வரவில்லை. முதல் பார்வையிலேயே வல்லபனிடம் அவள் மனத்தைப் பறிகொடுத்து விட்டாள். வல்லபன் இளவரசனாகப் போகி றான் என்று கூட அவளுக்குத் தெரியாது. தாயற்ற அவள் குணத்தை நான் எப்படிப் புகழ்வது என்றே தெரியவில்லை. தெய்வ பக்தி மிகுந்தவள். அவ ள் கண் எனப் போற்றும் நந்தினியையும், காவிரிக் கரையையும், நதிக் கரைக் குடிலையும் விட்டு வருவதற்கு அவள் என்றுமே விரும்ப மாட்டாள். அடக்கத்தில் குன்று அவள். நான்தான் கனவு காண்கிறேன், என் மகளுக்கு ஏற்ற வல்லபனுக்கு அவளை மணம் புரிவிக்க வேண்டும் என்று. அவளுக்கு இளவரசியாகும் ஆசை எள்ளளவும் இல்லை. ஆனால், சக்கரவர்த்தி அவர்களே! என் இதயத் தின் மூலையில்தான் என் மகளை இளவரசியாக்க வேண்டும் என்ற ஆசை...'' என்று நம்பி கூறிவரும்போது மன்னர் குறுக்கிட்டு, ''நம்பி, உமது ஆசை மிக நியாயமானது. உமது சேவைக்கு இந்த நாடு ஏழேழு தலை முறைக்கும் கடமைப் பட்டுள்ளது. ஆனால், இந்த அந்தஸ்து – அரச குலம் என்ற பரம் பரை நிர்ப்பந்தம் மட்டும் இல்லாவிடில், உமக்கு ஒரு மகன் இருந்திருந்தால் இளவரசப் பட்டத்தை அவனுக்கே சூட்டியிருப்பேன்...'' என்றார்.

''அப்போது மட்டும் குலம், பரம்பரை நிர்ப்பந்தம் குறுக்கிடாதோ... அரசர்க்கரசே நாம் இத்துடன் பேச்சை விட்டு விடுவோம். தங்கள் உடல் நிலைக்கு இதனால் ஏதாவது ஊறு நேர்ந்து விட ப் போகிறது...'' என்று கூறிக் கொண்டிருக்கும் போது, வல்லபன் அங்கு வந்து வணங்கி நின்றான். அவன் அந்தக் கூடத்து வாயிலில் வந்து நின்று கொண்டிருந்த போது சக்கரவர்த்தியும், நம்பியும் சம்பாஷித் துக் கொண்டிருந்த பேச்சின் சில பகுதிகளைக் கேட்டான். ஒரு கணம் திகைத்தான். மறு கணம் சிரித்தான்.






சக்கரவர்த்தி அவனை உற்று நோக்கியது, அவன் நகைத்ததற்குக் காரணத்தைவினவியது போலிருந்தது. நம்பியும் அவனை நோக்கினார்.

''சக்கரவர்த்தி அவர்களே! இளவரசர்ப் பட்டத்தை நான் ஏற்கும் தினம் என் அருகே இளவரசி அமர்ந்திருக்க வேண்டுமா?'' என்று கேட்டான்.

''ஆமாம், சாஸ்திரம் சொல்கிறது'' என்று மன்னர் சார்பில் மறுமொழி கூறினார் நம்பி.

''அப்படியென்றால் இளவரசியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்கு உண்டல்லவா?'' என்று வல்லபன் கேட்டபோது, மன்னரும் நம்பியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''உண்டு... ஆனால்'' என்றார் நம்பி.

''ஆனால்... என்ன... முழுக் காரணமும் சொல்லுங்கள்...'' என்றான் வல்லபன்.

''பெரியவர்களாகப் பார்த்துத் தக்கவளை மணம் புரிவிக்க வேண்டும் என்பது முறை'' என்றார் நம்பி.

''எனக்கு யாரைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்?''

''அதைப் பற்றித்தான் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கிறோம்...'' என்றார் நம்பி, மன்னரை நோக்கியவாறு.

''மன்னருக்கு அதனால் சிறிது சங்கடம் கூட.... இல்லையா...?''

''அப்படியெல்லாம்இல்லை. ஆனால், மன்னர் அதிர்ச்சியடையும்படியாக ஏதும் சொல்லக் கூடாது, செய்யக் கூடாது என்று எண்ணுகிறோம்'' என்றார் நம்பி.

''நானும் அதைத்தான் சொல்கிறேன். மலையமான் மகளா, நம்பியின் புதல்வியா என்று விவாதித்து மன்னருக்கு வேதனை தராமல் நான் ஒரு முடிவு கூறுகிறேன்'' என்று வல்லபன் கூறியபோது, மன்னரும், நம்பியும் அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று எதிர்பார்த்தனர்.

வல்லபன் தன் மனத்திலுள்ளதைத் தெரிவித்தான். தன் தாயிடம் விவாதித்ததைத் தெரிவித்தான். வேங்கியில் தன் மனத்துக்குகந்த சந்திரப்பிரபா தனக்காகக் காத்திருப்பதைத் தெரிவித்தான்.

மன்னரும், நம்பியும் திடுக்கிட்டனர். மன்னர் தலையை அசைத்தார். முடியாது, முடியவே முடியாது என்பதற்கு அறிகுறியாகத் தலையைப் பலமாக அசைத்தார்.

''வல்லபா, நீ வேங்கி மகளை மறந்துவிட வேண்டியதுதான்'' என்றார்.

நம்பி மௌனமாக நின்று கொண்டிருந்தார். ''நம்பி பார்த்தீர்களா? இப்போது புதிய பிரச்னை உருவாகி விட்டது. நான் எப்படி அமைதியாக இருக்க முடியும்'' என்றார் மன்னர். அவர் குரலில் பரபரப்பும் கவலையுமிருந்தன. அவர் முகம் மாறியது.

நம்பி அதைக் கவனித்தார். ''மன்னர் பிரானே! நான் உடனே சென்று தங்கள் சகோதரியை இங்கே வருமாறு செய்கிறேன். நெறியுடைப் பெம்மா நல்வழி கூறுவாள்'' என்று கூறி விட்டு விரைந்தார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வல்லபனின் தாய் செல்வி அங்கு வந்து சேர்ந்தாள். தன் சகோதரியைக் கண்டவுடன் ராஜராஜர் தம் மனத்திலுள்ளதைத் தங்கு தடையின்றிக் கொட்டி, ''செல்வி, உன் மகன் வேங்கிமகளை மறந்து விட வேண்டியதுதான்'' என்றார்.

''நானும் அவ்வாறுதான் யோசனை கூறினேன்!'' என்று செல்வியும் கூறினாள்.

வல்லபன் ஆழ்ந்த சிந்தனையுடன் தலை குனிந்தவாறு நின்றான். (தொடரும்)

எல்லா விளம்பரங்களிலும் Previous experience necessary என்று கேட்டிருந்ததால் வருந்தின அந்தப் பட்டதாரியின் முகம் ஒரு விளம்பரத்தைக் கண்டு மலர்ந்தபோது.... அந்தோ!! அது matrimonial விளம்பரமாயிருந்தது!

—மு. செல்வ பாண்டியன்



எங்கும் விற்பனையாகிறது

கீதா சமாஜம் வழங்கும் கவிஞர் கண்ணதாசனின்

**அர்த்தமுள்ள இந்துமதம்**

(பத்தாம் பாகம்)

## "உன்னையே நீ அறிவாய்"

நாத்திக வாதத்தைக் கடுமையாக விமரிசிக்கும் புத்தகம்.
இந்த வரிசையில் சற்று வித்தியாசமான புத்தகம் இது

அர்த்தமுள்ள இந்துமதம் தொடர் நூல்கள்
4, 5, 6, 7, 8, 9 - பாகங்களும் கிடைக்கும்

## கீதா சமாஜம்

12, ஹென்ஸ்மென் ரோடு, சென்னை - 600 017

ஸ்ரீலங்காவில் எங்கள் ஏஜண்டு:
ஆல் சிலோன் டிஸ்டிரிபியூட்டர்ஸ், கொழும்பு-12

# லியோ காபி

மயிலாப்பூர் & கிளைகள்

எங்கள் புதிய **தாம்பரம் கிளை** 28, சண்முகம் ரோடு, தாம்பரம் (போன் 48577) முகவரியில் 4-7-79 புதன்கிழமை முதல் வியாபாரம் ஆரம்பமாகியுள்ள நற் செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்

★ என்றும் தங்கள் ஆதரவை விரும்புகிறோம் ★

காபி & ஏலக்காய் செடிகள் பொதுமக்கள் பார்வைக்கு வைத்துள்ளோம்

## P. R. K. நாடார் சன்ஸ்

காபிக்கொட்டை மொத்த வியாபாரம்

நெ. 16, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் 76557 & 76912

# எம்.ஓ.மத்தாய் — நேரு காலத்திய நினைவுகள்



கிருஷ்ணமேனனுடன்

"நன்றி கெட்ட ஜென்மம்" "உண்ட வீட்டுக்குத் துரோகம் செய்பவர்" என்றெல்லாம் பிரபல பத்திரிகைகளில் பிரபல ஆசிரியர்கள் திரு எம். ஓ. மத்தாய் மீது வசைபாடி வருகிறார்கள்.

பாரதம் சுதந்திரம் அடையாத நாட்களில் பண்டித ஜவஹர்லாலிடம் ஈடுபாடு கொண்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களில் இந்த மலையாளியும் ஒருவர். 1946-ல் இவர் ஜவாஹர்லால் நேருவுக்குத் தாம் தொண்டு செய்ய விரும்புவதாக எழுதினார். அவர் அதிர்ஷ்டம் நேரு தம்மை வந்து பார்க்கும்படி அவருக்குப்பதில் எழுதினார். நேருவைச் சந்தித்த மத்தாய், தாம் பொருளாதார வசதியுள்ளவர் என்றும், மேலும் தாம் திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்க்கை முழுதும் இருக்கப் போவதாகவும், தமக்கு ஊதியம் தேவையில்லையென்றும், அவருக்குத் தொண்டு புரிவதையே பெரும் பேறாகக் கருதுவதாகவும் சொன்னார். மகிழ்ச்சியோடு தமது குடும்பத்தில் ஒருவராக நேருஜி மத்தாயைச் சேர்த்துக் கொண்டார். மத்தாய் சேர்ந்த ஓராண்டுக்குள்ளேயே தேசம் சுதந்திரம் அடைந்தது. மத்தாய், 'பிரதமரின் விசேஷ உதவியாளர்' என்ற பெயரில் பாரத சர்க்காரிடம் ஊதியம் பெற ஆரம்பித்தார். பின்னர் அவர் தமது செல்வாக்கு வாய்ந்த நிலையைச் சொந்தத்துக்குப் பணம் பண்ணத் தவறாகப் பயன்படுத்திக் கொண்ட புகார் பத்திரிகைகளிலும் மக்கள் சபையிலும் எழவே 1959-ல் தமது வேலையை ராஜினாமா செய்தார்.

மத்தாய் மிக அற்புதமாகப் புத்தகத்தை எழுதியிருக்க முடியும். அதற்கு மாறாக ஊர்வம்பு அளப்பது போல் நேருஜி, வாழ்க்கையில் எத்தனை பெண்களுடன் உறவுகொண்டிருந்தார், அவர்கள் அவரிடம் எப்படிப் பழகினார்கள் என்பவற்றையெல்லாம் சாங்கோபாங்கமாக விவரித்திருக்கிறார். நேருஜியின் பொதுவாழ்க்கையை எழுதப் புகும் போது, நேருஜி செய்த அத்தனை நல்ல காரியங்களுக்கும் காரணகர்த்தர் மத்தாய்தான் என்பது போலும், நேருஜியை விட்டுத் தாம் விலகிய பிறகு, அவருக்குச் சரியான யோசனை கூறுபவர் இல்லாததால் அவர் தவறுக்கு மேல் தவறு செய்து வந்தார் என்று தொனிக்கும் பாவனையிலும் பல நிகழ்ச்சிகளைக்குறித்து எழுதுகிறார்.


மத்தாய் தமக்கு வசை கிடைக்கும் என்று தெரிந்தேதான் இப்படி எழுதியிருக்கிறார். நேருஜி என்ற மனிதரை, குறைகள் நிறைகள் எல்லாம் சேர்ந்த மனிதரை, மக்கள் உணர்ந்து எடை போட வேண்டும் என்பது அவர் விருப்பம். எந்தப் பெரிய மனிதரும் அவருடைய அணுக்கத் தொண்டனுக்குப் பெரிய மனிதனல்ல (No man is a hero to his valet) என்ற பழமொழி ஆங்கிலத்தில் உண்டு. ஆனால் நேருஜி இப்பழமொழிக்கு நேர்மாறானவர்; நேருஜியிடம் சில குறைகள் இருப்பினும் அக்குறைகளைவிட அவர் குணங்கள் மிகப் பெரியன என்று தாம் கருதுவதாக மத்தாய் கூறுகிறார். ஆனால் இத்தகைய எண்ணம் அவருக்கு இருப்பது அவர் எழுதியுள்ள இப்



எம். ஓ. மத்தாய்



இந்திரா, சஞ்சய், ராஜீவ், நேரு



ஜாகிர் ஹுசேனுடன்

புத்தகத்தில் வெளிப்படவில்லை. மத்தாயுடைய ஆணவம்தான் அதிகமாகத் தெரிகிறது.

பாரதம் சுதந்திரமடைந்தவுடன் வெளி விவகாரப் பொறுப்பேற்ற பிரதமர் நேருஜி தமது தங்கை ஸ்ரீமதி கிருஷ்ணாவின் கணவர் ராஜா ஹத்திசிங்கை மலேயா நாட்டுத் தூதுவராக நியமிக்க இருந்தார். அவர் இப்பதவிக்கு எல்லாவகையிலும் தகுதி உடையவர்தான். ஆனால் 46-ல் நேருஜியுடன் அவர் மலேயா சென்றிருந்தபோது அங்கே என்ன நடந்ததோ தெரியவில்லை, தில்லியிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் அலுவலகத்தை சேர்ந்தவர்கள் அவர் தூதராகப் போகும் செய்தி கேள்விப்பட்டு, மத்தாயிடம் வந்து, 'இதைத் தவிர்க்கப் பாருங்கள்' என்று யோசனை கூறியிருக்கிறார்கள். நேருஜியின் சொந்தத் தங்கை புருஷனைப் பற்றி நேருஜியிடமே குறைகூறுவது நாகரிகமல்ல. அதனால் மத்தாய் ராஜா ஹத்திசிங்கிடமே சென்று, ''நீ பெரிய பணக்காரன், மலேயா தூதுவர் பதவியோ, இரண்டாம் தர தூதுவர் பதவி. உன் தகுதிக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றதல்ல. அதைப் போய் நீ ஏற்றுக் கொள்வானேன்?''. என்று சொல்லியிருக்கிறார். இதைக் கேட்டு ஹத்திசிங், நேருஜி கொடுத்த பதவியை நிராகரித்து விட்டார் என்றும், இப்படிச் சாமர்த்தியமாக நேருஜி செய்யவிருந்த தவறுன காரியத்தைத் தாம் தவிர்த்ததாகவும் மத்தாய் கூறுகிறார்.

கோஷ்டி சேரா நடுநிலைக் கொள்கையை வலியுறுத்தி வந்தவர் நேரு. பிரிட்டனும், பிரான்சும், சூயஸ் கால்வாய் விஷயமாக எகிப்தின் மீது போர் தொடுத்த போது சற்றும் தயவு தாட்சண்யமின்றி பிரிட்டனைக் கண்டனம் செய்தோம்.

இது நடந்த சில நாட்களுக்குப் பிறகு சோவியத் ருஷ்யா, ஹங்கேரி மீது படையெடுத்து டாங்கு குண்டுகளைப் பொழிந்தது. ஆனால் பாரதம் இதனைக் கண்டித்து ஒரு வார்த்தை சொல்லவில்லை!

இதைக் கண்டு பாரத நாட்டிலும் சரி, உலக அரங்கிலும் சரி, மக்கள் பெருவியப்பில் ஆழ்ந்து விட்டார்கள்.

நேருஜிக்கு என்ன நேர்ந்து விட்டது என்று புரியாமல் குழம்பினர்கள்.

இந்தப் புதிருக்கு விடை மத்தாய் கொடுக்கிறார். ஹங்கேரி படையெடுப்பு நடந்த ஐந்தாவது நாள் ஐ. நா.



யாக்'' என்ற மிருகத்தின் மீது சவாரி


பொதுச் சபை கூடி ருஷ்யாவின் ஆக்ரெமிப்பைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியது. கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து 48 நாடுகள் வாக்களித்தன. 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. எதிர்த்து வாக்களித்த நாடுகளில் இந்தியா ஒன்று. மற்ற பத்து நாடுகளும் கம்யூனிஸ்டு நாடுகள். இப்படி கம்யூனிஸ்ட் கும்பலோடு சேர்ந்து இந்தியாவின் பிரதிநிதியாக வாக்களித்தவர் வி. கே. கிருஷ்ண மேனன். பிரதமர் நேருஜி. தீர்மானத்தை ஆதரித்து – ருஷ்ய ஆக்கிரமிப்பைக் கண்டித்து – வோட்டளிக்கும்படி தந்தி அனுப்பியும் வி. கே. கிருஷ்ணமேனன் இந்தியாவுக்கும் நேருஜிக்கும் தலைகுனிவு நேரும் வகையில் நடந்து கொண்டார். பிறகு கிருஷ்ண மேனனைக் கைவிட மனமின்றி நடந்து கொண்டார் நேருஜி. இந்தக் கட்டத்தில் கிருஷ்ண மேனன் தாம் பெற்ற தந்தியை, 'வரவில்லை'யென்று பொய் சொல்லி, நேருஜிக்கும் நாட்டுக்கும் எவ்வளவு இழிவு ஏற்படுத்தி விட்டார் என்பது புலனாகிறது.

மௌலானா அபுல் கலாம் ஆஸாத் India Wins Freedom என்ற தமது புத்தகத்தில் பாரதம் அமைத்த முதல் மந்திரி சபையில் தாம் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என்று காந்திஜி வற்புறுத்தியதாக எழுதியிருக்கிறார். இது முற்றிலும் தவறு என்கிறார் எம். ஓ. மத்தாய்.

காந்திமகான் மௌன விரதம் அனுஷ்டிக்கும் திங்கட் கிழமை. ஆதலால், மௌலானாவை கல்வி அமைச்சராக நியமித்தால் நாட்டின் கல்வி சீர்கெட்டுப் போகும்; அவரை இலாக்கா இல்லாத அமைச்சராக (Minister without Portfolio) மூத்த சகாவாக (Elder Statesman) பக்கத்தில் வைத்துக் கொள்ளவும் என்று யோசனை கூறி காந்திஜி தம் கைப்பட எழுதியனுப்பினார். ஆனால் மௌலானா கல்வி அமைச்சர் பதவியைத்தவிர வேறு பதவி ஏற்கப் பிடிவாதமாக மறுத்து விட்டதால் அவரைக் கல்வி அமைச்சராக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது நேருஜிக்கு என்கிறார் எம். ஓ. மத்தாய். காந்திமகான் ஜாகிர் ஹுஸேனைத்தான் கல்வி அமைச்சராக்க வேண்டும் என்று கருதினார் என்றும் எழுதுகிறார்.

ருஷ்யாவில் லெனின் கிராடிலுள்ள பிரபல நாவலாசிரியர் புஷ்கினின் நினைவுக்கூடத்தைப் பார்க்க விரும்பினார் மத்தாய். லெனின்கிராடில் புஷ்கினின் நினைவாக இரண்டு நினைவுக் கூடங்கள் உள்ளன. ஒன்று நகருக்கு வெளியே வெகு தூரத்தில் உள்ள பெரிய நினைவுக் கூடம்; மற்றொன்று நகருக்குள்ளேயே உள்ள சிறிய நினைவுக்கூடம். மத்தாய் ஒரு டாக்ஸி பிடித்தார். டாக்ஸி டிரைவரிடம் நகருக்குள்ளிருக்கும் புஷ்கின் நினைவுக்கூடத்துக்குச் செல்லுமாறு கூறினார். ஓட்டுனர் தமக்கு நகருக்கு வெளியே வெகு தூரத்திலிருக்கும் புஷ்கின் நினைவுக்கூடம் தான் தெரியும் என்றும் நகருக்குள் இருப்பது தெரியாது என்றும் கூறினார். அடுத்த டாக்ஸி டிரைவரை விசாரித்ததில் தமக்கு நகருக்குள்ளிருக்கும் சிறிய புஷ்கின் நினைவுக்கூடம் தெரியும் என்றும் ஆனால் அவ்விவரத்தை முதல் டாக்ஸி டிரைவருக்குத் தெரிவிக்க முடியாதென்றும் கூறிவிட்டார்! முதலில் பிடித்த டாக்ஸியை விட்டு விட்டு இரண்டாவது டாக்ஸியில் ஏறினார் மத்தாய்.

''ருஷ்ய டாக்ஸி டிரைவர்களுக்கு விதிக்கப்பட்ட குறைந்தபட்ச மைலேஜைவிட அதிகமாகப் பிரயாணம் செய்ததாகக் காட்டினால் போனஸ் கிடைக்கிறது. அதனால்தான் முதல் டாக்ஸிக்காரர் அப்படிப் பேசியிருக்கிறார்'' என்று மத்தாய்க்கு விளக்கம் அளித்தார் கூட வந்தவர்!



அட, ருஷ்யாவிலும் இப்படித்தானே என்று எண்ணுகிறோம் நாம்.

ருஷ்யாவிலுள்ள செஞ்சதுக்கத்(Red square)துக்கும் ருஷ்யப் புரட்சிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையாம். ருஷ்ய மொழியில் சிவப்பு (Red) என்றால் அழகு என்று பொருளாம்!

இப்படி பல நாடுகளைப் பற்றி பல ரஸமான தகவல்களையும் சம்பவங்களையும் உதிர்த்துக் கொண்டே போகிறார் மத்தாய் தமது நூல்களில். பெரிய மனிதர்கள் பலரது உள்மன விகாரங்களை வெளிப்படுத்துகிறார்.

ஸர் என். கோபாலசாமி அய்யங்கார் நிரந்தரமாக ஓய்வு பெற்றுச் சென்னைக்குத் திரும்புமுன் மத்தாயிடம் வந்து "என் மகன் ஜி. பார்த்தசாரதியின் படிப்பு மற்ற தகுதியெல்லாம் உனக்குத் தெரியும். அவனை நினைவில் வைத்துக் கொண்டு நேருஜியிடம் சமயம் வாய்த்தபோது கூறி நல்ல வேலையில் அமர்த்து" என்று கேட்டுக் கொண்டதாக எழுதியிருக்கிறார்.

ராஜாஜியையும் விட்டு வைக்கவில்லை மத்தாய். பதவி வேட்டையாடும் சாதாரண அரசியல்வாதி போல் ஸி. ஆ.ரைச் சித்திரித்திருக்கிறார்.

நேருவைப் பற்றி எழுதப்பட்டுள்ள மத்தாயின் இரண்டு புத்தகங்களிலும் பல இடங்களில் ஆசிரியரின் சிறு பிள்ளைத்தனம், ஆணவம் ஆகியவை வெளிப்படுகின்றன. இப் புத்தகங்கள் எத்தகையவை என்று எடை போட வேண்டுமானால் அதற்கு நேருஜியின் தையல்காரர் கூறியதுதான் தக்க உதாரணம்.

தில்லியில் நேருஜிக்கு முகம்மது உம்மர் என்றொரு தையல்காரர் இருந்தார். பிரிவினை நாட்களில் இவர் கடை சூறையாடப்பட்டது. பிறகு அவர் கடை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. விரைவில் அவர் தொழில் செழித்தது. அவர் தம் கடைப் பெயர்ப் பலகையில் "பிரதமரின் தையல்காரர்" என்று பிரமாதமாக விளம்பரப்படுத்திக் கொண்டார். இவருடைய ஒரு மகன் பாகிஸ்தானுக்கு வகுப்புக் கலவரத்தின் போது ஓடிப் போனான். அவன் கராச்சியில் கடை வைத்து, "பண்டித ஜவஹர்லால் நேருவின் முன்னாளைய தையல்காரர்" என்று விளம்பரப் படுத்திக் கொண்டான். மத்தாய், முகமது உம்மரிடம் "நேருஜியின் பெயரை உன் மகன் கராச்சியில் பயன்படுத்திக் கொண்டானே, உதவியாக இருந்ததா?" என்று கேட்டார். உம்மர் சொன்னார்: "ஐயா, பண்டிட்ஜியின் பெயர் எங்கும் விலை போகக் கூடியது. என் மகன் இன்று மிகப் பிரசித்தமான தையல்காரன். அவன் ஆற்றலுக்கு மிஞ்சிய வேலை அவனுக்கு வருகிறது."

தையல்காரர் தம் மகன் பற்றிக் கூறியது மத்தாய்க்கும் பொருந்துகிறது.

— எஸ். வி. எஸ்.

1) Reminiscences of the Nehru Age (2) My days with Nehru by M. O. Mathai: Vikas Publishers, New Delhi Price: each Rs. 35/-


# கிரிக்கெட் கற்கலாம்! 41

கோர் : கே. சந்திரசேகர்

படம்: ராஜு.. தயாரிப்பு: குண்டுமணி

## கிரிக்கெட் சட்டங்களில் சில!

விக்கெட் கீப்பர் விக்கெட்டுக்கு முன்னால் போய், பாட்ஸ்மன் மட்டையில் படுவதற்கு முன்போ, பாட்ஸ்மனின் மேல் படுவதற்கு முன்போ பந்தைத் தேக்குதல் கூடாது.





கல்கி
5-8-79
ஆண்டுமலர்
சுஜாதா எழுதும்
பரபரப்பான தொடர்கதை
வைரங்கள்
செம்பியன் எழுதும் முழுநீள நாவல்
பில்லா-ரங்கா
அமரர் கல்கி
நினைவு சிறுகதைப்
போட்டி
ரூ 1000/=
முதல்பரிசு
கதை
112
பக்கங்கள்
75 காசு


கடல் ராணி
சாண்டில்யன்
ஆகஸ்ட் 5
கல்கி
ஆண்டு மலரில்
ஆரம்பம்

# யுகங்கள் மாறும் போது...

## —வாஸந்தி

## 2

'ராஜு' சொன்ன பையன் இவனாகத் தான் இருக்கும் என்று மைதிலிக்குச் சட்டென்று தோன்றிற்று. விளக்குக் கம்பத்தின் வெளிச்சம் வட்டமாகக் கீழே சாய்ந்திருந்தது. அந்த வட்டத்துக்குள் நின்றிருந்த நளினியை நன்றாகப் பார்க்க முடிந்தது. ஜீன்ஸிலும் டீ ஷர்ட்டிலும் நின்றிருந்த நிலையில் ஒரு சின்னப்பெண்ணின் உல்லாசமான அலட்சியம் தெரிந்தது. டீ ஷர்ட்டின் மார்பின் மேல் பெரிது பெரிதாக 'லுக் அட் மீ' என்ற எழுத்துக்கள். அந்த வார்த்தைகள் இல்லாமலே பார்வையைச் சுண்டி இழுக்க வைத்த மார்பகங்கள். இடை சிறுத்து அளவான தொடைகளுடன் நீண்டிருந்த கால்கள். அழகிய மாதிரமான முகத்தில் கண்கள் ஒரு துறுதுறுப்புடன் பளபளத்தன.

மைதிலியைக் கண்டதும் நளினியின் முகத்தில் ஒரு புன்னகை, பளிச்சென்று பரவிற்று தயக்கம் ஏதுமில்லாமல்.

பக்கத்தில் நின்றிருந்தவனிடம் ஏதோ லேசான குரலில் அவள் சொல்வது கேட்டது.

மைதிலி அருகில் சென்றதும் நளினி அவள் அருகில் வந்து கையைப் பிடித்துக் கொண்டாள்.

''மம்மி, இதுதான் அசோக். எனக்குக் கொஞ்ச நாளாத் தெரியும். இங்கே ஒரு கம்பெனியிலே வேலை பார்க்கிறார்.''

அசோக் வாட்ட சாட்டமாக இருந்தான். முகத்தில் ஒரு கட்டித்தனம் தெரிந்தது. பார்வையில் ஒரு சலனம் தெரிந்தது. பெண்களை வசீகரிக்கும் சாப்புத் தெரிந்தது. இலேசான தயக்கத்துடன் அளவாகச் சிரித்து அவன் கை கூப்பி நமஸ்கரித்தான்.

இவனை எப்படி நளினிக்குப் பழக்கமாயிற்று என்று நினைத்தபடி மைதிலி பதிலுக்குக் கைகூப்பினாள்.

''நாங்க ரெண்டு பேரும் பப்ளிக் லைப்ரரியிலே பழக்கமானோம். இவரும் ஒரு புத்தகப் பைத்தியம்.''

இந்த இவர்களுடைய பழக்கம் எத்தனை தூரத்துக்குத் தீவிரமானதாக இருக்கும்? மைதிலி புன்னகைத்தபடி சொன்னாள்:

''உள்ளே வாங்களேன்? உட்கார்ந்து பேசலாம்.''


கேட்டைத் திறந்துகொண்டு போகையில் இத்தனை இருட்டும் வரை இவனுடன் நீ லைப்ரரியில் உட்கார்ந்திருந்தாயா என்று கேட்க வேண்டும் போலிருந்தது. நேருக்கு நேர் முகத்தைப் பார்த்துச் சொல்லக் கூடிய விஷயமில்லையே இது.

இனிமேல் இவ்வளவு இருட்டும் வரை நீ வெளியில் இருக்கக் கூடாது என்று சொல்லவேண்டும், கண்டிப்பாக.



அதுவும் இந்த மாதிரி 'லுக் அட் மீ' என்று சொல்ற சட்டையை மாட்டிக் கொண்டு...

நளினி ஒரு துள்ளலுடன் வீட்டுக்குள் நுழைந்தாள். அசோக் நிதானமாக மைதிலியுடன் நடந்தான். ஒரு தோழமையுடன் அவன் பேசினன்.




''உங்களைப் பத்தி நளினி நிறையச் சொல்லியிருக்கிறள்.''

மைதிலி ஒரு புன்னகையுடன் நடந்தாள்.

''உங்களைப் பார்த்தபோது எனக்குப் பெரிய அதிர்ச்சியேற்பட்டது.''

அவள் சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''நான் உங்களை வேறு விதமாகக் கற்பனை பண்ணிண்டிருந்தேன். கொஞ்சம் உருண்டையா தலைநரைச்சு கண்ணாடி போட்டுண்டு''

மைதிலி சிரித்தாள்.

''நீங்க இத்தனை இளமையா அழகா இருப்பீங்கன்னு நா நினைக்கல்லே.''

அதற்கு ஒன்றும் பதில் சொல்லாமல் மைதிலி நடந்தாள். இந்த உருவத்துக்கு நான் பொறுப்பேயில்லை என்கிற மாதிரி... இந்த உருவம் எனக்குப் பெருமையைக் கொடுத்ததில்லை; சிறுமையைத்தான் கொடுத்திருக்கிறது என்று நினைத்தபடி...

வரவேற்பறையில் நளினி ஐஸ் போட்ட பழ ரஸத்தை மூன்று கண்ணாடி டம்ளர்களில் தயாராக வைத்திருந்தாள்.

''எனக்கு வேண்டாம் நளினி. நான் இப்பத்தான் ராஜூ வீட்டிலே குடிச்சேன்'' என்று கூறியபடியே மைதிலி டம்ளரை அசோக்கிடம் கொடுத்தாள்.

''உங்களுக்கு இந்தவூர்தானு?''

''இல்லே. நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் பம்பாயிலே. இங்கே வேலை கிடைச்சது. அதனாலே இரண்டு வருஷமா இங்கேயிருக்கேன்.''

''தனியாவா?''.

''ஆமாம் இங்கே ஒரு லாட்ஜிலே ரூம் எடுத்திண்டிருக்கேன். எனக்கு அப்பா அம்மா இரண்டு பேருமே இல்லே. சித்தப்பா வீட்டிலே தான் வளர்ந்தேன்.''

மைதிலி யோசனையுடன் அவனைப் பார்த்த படி உட்கார்ந்திருந்தாள். அவன் பேசும் போது புன்னகையுடன் பேசினான். 'அப்பா அம்மா இல்லே' என்பதையும் புன்னகைத்துக் கொண்டே சொன்னான். இவன் எந்த விஷயத்தையும் ஒரு தீவிரத்துடன் ஆழத்துடன் சிந்திப்பானா என்று அவள் யோசனை செய்தாள். நளினியிடம் இவனுக்கு எந்த அளவுக்கு ஈடுபாடு இருக்கும்? கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று முடிவு எடுக்கக் கூடிய அளவுக்கு இருக்குமா? ஆள் நன்ருக இருந்தான். ஆரோக்கியமாகத் தெரிந்தான். நன்ருகப் பேசத் தெரிந்தவனுக இருக்கிருன். இவை மட்டும் போதுமா மண வாழ்க்கைக்கு?

அவள் யோசனையுடன் நளினியைப் பார்த்தாள். நளினி வார்த்தைக்கு வார்த்தை சிரித்துக் கொண்டு அசோக்குடன் பேசிக் கொண்டிருந்தாள், ஏதோ ஒரு சம்பவத்தை விவரித்தபடி. மெல்லிய சிவந்த உதடுகள் ஒரு அடிப்புடன் உல்லாசமாக வேகமாக அசைந்தன. கண்களில் இத்தனை நாட்களாகத் தென்படாத ஒரு மையல் தெரிந்தது. தனக்குத் தெரியாமல் இந்தச் சின்னப் பெண்ணுக்குள் ஒரு கள்ளத்தனம் புகுந்து கொண்ட மாதிரி இருந்தது. இது நல்லதற்குத்தான என்று அவள் திகைத்தாள். மாலாவைப் பற்றி எத்தகைய பிரச்னையும் இருக்கவில்லை. அவளுடைய அப்பா பார்த்துவைத்துக் கல்யாணம் செய்யும்வரையில் எந்த வகைக் கள்ளத் தனமும் அவளுள் புகுந்து கொள்ளவில்லை...

அசோக் சட்டென்று எழுந்தான். ''நான் கிளம்பறேன்'' என்ருன் ஒரு சின்னச் சிரிப்புடன். ''ஐ ஆம் க்ளாட் டு ஹேவ் மெட் யூ'' என்ருன் பவ்யமாக.

மைதிலி புன்னகையுடன் விடை கொடுத்தாள். நளினி அவனை வழியனுப்ப வாசல் வரை சென்று வந்தாள்.

காலித் தம்ளர்களை எடுத்துப் போக வந்த கஸ்தூரியிடம், ''சப்பாத்தி பண்ண ஆரம்பி. கொஞ்ச நேரத்திலே சாப்பிட வர்ரோம்'' என்ருள் மைதிலி.

''ட்ரெஸ் மாத்திண்டு வந்துடறேன்'' என்று நளினி மாடிக்குச் சென்ருள்.

இன்றைக்கு இவளிடம் இந்த அசோக்கைப் பற்றிப் பேசுவதா வேண்டாமா என்று மைதிலி யோசனை செய்தாள். இந்த மாதிரி விஷயங்களை உடனடியாகக் கேட்டு விடுவதுதான் நல்லது என்று தோன்றிற்று.

நளினி தொள தொளவென்ற ஒரு மாக்ஸியில் வந்தாள். ஒரு பாட்டை முணுமுணுத்த படி சாப்பிட உட்கார்ந்தாள். பட்சி மாதிரி கவலையில்லாமல் இருக்கும் இந்தப் பெண்ணிடம் அந்த ராஜு சொன்னதை வைத்துக் கொண்டு தான் ஒன்று கிடக்க ஒன்று கேட்கப் போய் இவளுடைய உல்லாஸ மனசுக்குக் கஷ்டமாகிப் போகுமோ என்று தோன்றிற்று.

திடீரென்று நினைவுக்கு வந்தவள் மாதிரி ''மாலா கிட்டேயிருந்து லெட்டர் வந்திருக்கு'' என்ருள்.

நளினி துள்ளிக் கொண்டு எழுந்தாள் எச்சில் கையுடன்.

ஒரே மூச்சில் படித்து முடிக்கையில் கடகட வென்று சிரித்தாள்.

''இந்தப் பெரிய மனுஷிக்கு என்னைப் பத்தி என்ன தெரியுமாம்? என்னை விட நாலு வயசு தான் பெரியவ. என்னவோ அத்தைப் பாட்டி மாதிரி எழுதியிருக்கா.''

மைதிலி பேசாமல் சிரித்தபடி அவளைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''எனக்கு என்ன மம்மி அப்படிப் பிடிவாதமும் கோபதாபமும் இருக்கு?''

''பார், இப்பவே உன் கோபத்தைக் காட்டறியே. அவ எங்கேயோ உட்கார்ந்துண்டு வேடிக்கையா எழுதியிருக்கா. அதைப் போய் நீ பெரிசா எடுத்துண்டு ஆத்திரப் படறே.''

''மம்மி, கோபமும் தாபமும் இல்லேன்னு, உணர்ச்சிகளே இல்லேன்னு அர்த்தம். ஐ வாண்ட் டு பி அலைவ். இல்லேன்னு எனக்கும் ஒரு ஜடப் பொருளுக்கும் வித்தியாசம் இடையாது.''

மைதிலி யோசனையுடன் சாப்பாட்டைத் தொடர்ந்தாள்.

''என்னை ஜடம் என்கிறியாக்கும்?''

சட்டென்று நளினி அவளை நிமிர்ந்து பார்த்தாள் தீர்க்கமான பார்வையாய்...

''இல்லே. நீ ஜடமில்லே. ஆனா அப்படி அப்ப வேஷம் போட்டே, அது உனக்குச் சௌகர்யம்னு.''

மைதிலி அதிர்ந்து போனுள். இப்படியெல்லாம் அவளைப் பற்றி நளினி யோசனை பண்ணி வைத்திருக்கிருளா?

அவள் எழுந்திருந்து போகையில் மைதிலி மெல்லிய குரலில் சொன்னுள்.

''நளினி, உன் பாடமெல்லாம் படிச்சு முடிச்சப்புறம் மொட்டை மாடிக்கு வாயேன். கொஞ்சம் உன்னேடு பேசணும் போல இருக்கு.''

நளினியின் புருவங்கள் லேசாக மேலே எழும்பின. பிறகு ''ஓ. கே'' என்று சிரித்த படி சென்ருள்.

படுக்கையறைக்கு அடுத்தாற்போலிருந்த மொட்டை மாடியில் நாற்காலியைப் போட்

ஓட்டல் சர்வர்: ''என்ன சார் காப்பி குடிச்சிட்டு டபராடம்ளரையும் எடுத்திட்டுப் போறீங்க?''

வந்தவர்: ''ஓ! ஸாரி... ஸாரி..! மன்னிக்கணும்பா. 'பில்'லுன்னு நினைச்சுட்டேன்!''

-முதது





**கல்யாண வீட்டில்!**

சாஸ்திரிகள்: அம்மியை மிதிக்கத்தான் சொன்னேன். அதுக்காக இப்படியா அம்மி உடையறமாதிரி மிதிக்கறது?

- லலிதா செல்லப்பா

டுக்கொண்டு உட்கார்ந்தாள் மைதிலி. குளுமையாகக் காற்று வீசிற்று. தோட்டத்திலிருந்த நைட்குவீனைத் தூக்கிக் கொண்டு மேலே வந்தது.

நினைவுகளின் கனம்... அதுவே தன் பார்வையை மறைக்கிறதோ என்று தோன்றிற்று. எந்தப் பிரச்னையையும் தைரியமாக அணுக முடியாமல் பாரமாக அழுத்துகிறதோ என்று சந்தேகமாக இருந்தது. அந்தப் பாரமே தன்னுள் ஒரு ஜடத்தன்மையை உண்டாக்கி விட்டதோ?

"நீ ஜடமில்லே. அந்த மாதிரி வேஷம் போட்டே. அது உனக்குச் சௌகரியம்னு" என்று நளினி சொன்னது ஞாபகத்துக்கு வந்தபோது மறுபடியும் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது மனதில். அது உண்மைதானோ என்று நினைக்கையில் பின் வேறு எப்படித்தான் தன்னால் நடந்து கொண்டிருக்க முடியும் என்று அவள் நினைத்துப் பார்த்துக்கொண்டாள். தன் நிலையில் நளினி இருந்திருந்தால் என்ன செய்திருப்பாள்? அவள் சட்டென்று திடுக்கிட்டாற்போல அவசரமாகச் சொல்லிக் கொண்டாள். தன் நிலையில் யாரையுமே கற்பனை செய்துகூடப் பார்க்கக்கூடாது. அந்தக் கஷ்டம் யாருக்கும் வர வேண்டாம்...

ஆறு மாதம் முன்பு வரை படுக்கையில் படுத்த நிலையில் அவளைப் பயங்கரமாக ஆட்டி வைத்தவரின் நினைவு வருகையில் இப்பொழுதும் ஒரு நடுக்கம் உடலில் ஏற்பட்டது. அந்தப் பார்வையில் இருந்த வெறுப்பும் வார்த்தையில் இருந்த விஷமும் இப்படியெல்லாம் ஏன் மனிதர்கள் உருவாகிறார்கள்? படுக்கையில் படுத்தபடி அவரால் எப்படி அவளை அப்படி ஒரு நடுக்கத்தில் வைக்க முடிந்தது? அதற்கு அவள் எப்படி உடன்பட்டாள்? அது அவருடைய ராசியா? இல்லை அவளுடைய கையாலாகாத் தனமா?

கடைசியில் உடம்பும் மனசும் அந்தக் கொடுமைகளெல்லாம் மரத்துப் போயிற்று. சுரணையை எடுக்கப்பா கழற்றி வைத்தமாதிரி.

"நீ ஒரு நெஞ்சழுத்தக்காரி. அழுக்கம் வேற..."

அதெல்லாம் யாருக்கோ சொல்லப்பட்ட வார்த்தைகள் என்று மனசு நினைக்க ஆரம்பித்து விட்டது. நிச்சயம் அவை என்னைப் பார்த்துச் சொல்லப்பட்ட வார்த்தைகள் இல்லை — இத்தனை அநாகரிகமாகப் பேசப்படும் வார்த்தைகளுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை... வாஸ்தவத்தில் அவர் இறந்து போனதும் கண்களில் கண்ணீரே வரவில்லை. மனதில் ஒரு குழந்தைத்தனமான நிம்மதி ஏற்படுவதை அவள் அதிர்ச்சியுடன் உணர்ந்தாள். சில சமயங்களில் பழைய நினைவுகளின் பாரம் மனத்தை அழுத்துகையில் அவர் எதற்காக அப்படி அனாவசியமாகத் தம்மையும் வருத்திக் கொண்டு அவளையும் வருத்தினார் என்று இப்பவும் புரியாமல் ஒரு திகைப்பு ஏற்படும். தானும் அவரும் பார்த்துக் கொண்ட வேளையே. மணம் செய்து கொண்ட வேளையே சரியில்லை என்று தோன்றும்... அநியாயமாய் ஒரு ஜீவன் தன்னையே விபரீத வக்ர எண்ணங்களால் அழித்துக் கொண்டதே என்று பரிதாபம் ஏற்படும். இப்பவும் அவரை நினைக்கையில் மனதில் ஒரு பரிதாபம்தான் ஏற்பட்டது. கோபம் ஏற்படவில்லை. அவளுக்கு வியப்பாக இருந்தது. இதுவும் ஒரு ஜடத் தன்மையா?

ஏதோ நிழல் தட்டிற்று. அவள் திரும்பிப் பார்த்தாள்.

நளினி நின்றிருந்தாள். மாக்ஸியிலிருந்து நைட் கவுனுக்கு மாறியிருந்தாள். இவள் எத்தனை விதமான உடைகளை ஒரு நாளைக்கு மாற்றுவாள்? காலையில் புடவை, மாலையில் ஜீன்ஸ், பிறகு...

"என்ன மம்மி நட்சத்திரங்களை எண்ணறியா?"

பளிச்சென்ற சிரிப்பு. ஆரோக்கியமான சிரிப்பு. என் மனசில் எந்த விதமான விலேசங்களும் இல்லை என்கிற மாதிரி...

"ஆமாம் இல்லாத நட்சத்திரங்களைத் தேடிண்டிருக்கேன்.."

நளினி ஒரு நாற்காலியை அவள் அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

"மம்மி நீ இன்னிக்கு என்னவோ பெரிய யோசனையிலே இருக்கற மாதிரி இருக்கு எனக்கு. என்ன சமாசாரம்? நான் ஏதாவது தப்பாப் பேசிட்டேனா?"

ஓ இவள் எவ்வளவு குழந்தையாக இருக்கிறாள் என்று மைதிலி நினைத்துக் கொண்டாள். நளினியைத் தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டே சொன்னாள்:

"இன்னிக்கு நான் ராஜு வீட்டுக்குப் போனேன்னு சொன்னேனே?"

"ஆமாம்..."

"ராஜு சொன்னார். கொஞ்ச நாளா யாரோ ஒருத்தனோட நீ போறதைப் பார்க்கிறாராம்."

நளினி ஒரு விநாடி அவளைத் திகைப்புடன் பார்த்தாள். பிறகு தலையைக் குனிந்து கொண்டாள்.

"ஆமாம். இந்த அசோக்கோடத்தான் போறேன். பட், வாட் இஸ் ராங் இன் இட்? ஒரு நல்ல சினேகிதனோடு நடந்து போனா தப்பா? நான் கெட்டுப் போயிடுவேன்னு அர்த்தமா?"

"அப்படின்னு யார் சொன்னது?"

"பின்னே அவர் ரகசியமா உன்கிட்டச் சொல்லி உன்னைக் கலங்க வைக்கிறதுக்கு என்ன அர்த்தம்?"

''எனக்குத் தெரியாத ஒருத்தனோட எனக்குத் தெரியாம நீ தினம்தினம் சாயங் கால வேளையிலே போனியானு நாலு பேர் நாலு விதமாத்தான் பேசுவா நளினி. அதைக் கேட்டு எனக்கு மனசுக்குக் கஷ்டமாத்தான் இருக்கும்.''

நளினி தலையைக் குனிந்து கொண்டாள். ''அசோக்கை உனக்குக் காண்பிக்கணும்னு தான் இன்னிக்கு அழைச்சிண்டு வந்தேன்.''

''எத்தனை நாளாப் பழக்கம் உனக்கு?''

''இரண்டு மாசமா.''

''சாதாரண சிநேகிதமா இல்லே கல்யாணம் பண்ணிக்கணுங்கிற சிநேகிதமா?''

''மம்மி நீ ரொம்ப ஓல்ட் பேஷண்டா இருக்கே.''

''இந்த மாதிரி விஷயங்களிலே அப்படி யிருக்கிறதுதான் சரி நளினி. இன்னிக்கு ராஜு சொன்னார்.. நாளைக்கு வேறே ஒருத்தர் சொல்லுவார். எனக்குத்தெரியணும். மூணும் மனுஷா கிட்டேயிருந்து உன்னைப் பத்தித் தெரிஞ்சுக்கறது எனக்குப் பிடிக்காது.''

நளினி தலையைக் குனிந்தபடி சொன்னாள். ''நாலே உங்கிட்ட சொல்லணும்னு தான் நினைச்சேன் மம்மி. அசோக்கை நான் விரும்ப றேன். ஐ லவ் ஹிம் வெரி மச். என் படிப்பு முடிஞ்சப்புறம் எங்க கல்யாணத்துக்கு நீ சம்மதிப்பியா?''

நளினி உணர்ச்சி வசப்பட்டிருப்பது அவள் குரலிலிருந்து தெரிந்தது.

''என்னாலே அப்படிச் சட்டுனு பதில் சொல் விட முடியாது, நளினி. நான் யோசிக்கணும். அந்தப் பிள்ளை எப்படிப்பட்டவன், எந்த மாதிரி குடும்பத்தைச் சேர்ந்தவன்னு தெரிய வேண்டாமா?''

''அசோக் ரொம்ப நல்லவர் மம்மி. சித் தப்பா வீட்டிலே ரொம்பக் கஷ்டப்பட்டுப் படிச்சு முன்னுக்கு வந்தவர். ரொம்ப இள கின சுபாவம் அவருக்கு...''

''எல்லாம் உண்மையாக இருக்கலாம் நளினி. ஆனா எனக்கு யோசிக்க அவகாசம் வேணும். அப்புறம் இந்த மாதிரி இருட்டிப் போற வரைக்கும் நீ வெளியிலே சுத்தறதை நிறுத்திக்கணும்..''

நளினி மெல்லிய குரலில் கேட்டாள்: ''என் மேலே உனக்கு நம்பிக்கையில்லையா மம்மி?''

''நம்பிக்கையில்லேன்னு அர்த்தமில்லே. நான் எத்தனையோ அனுபவிச்சாச்சு. அதை யெல்லாம் எப்படியோ தாங்கிக்க முடிஞ்சுது. இப்போ சின்ன விஷயமெல்லாம் கூட மனசைக் கலவரப் படுத்தறது. இப்ப ஒரு வாரமா நீ இருட்டினப்புறம் வரே. நீ வரதுக்குள்ளே என் மனசிலே எத்தனை பயம் ஏற்படறதுன்னு உனக்குத் தெரியாது..''

''சரி மம்மி நான் நேரத்தோட வந்துட றேன். உன்னைக் கலவரப் படுத்தும் படியா நான் நடந்துக்க மாட்டேன்.''

இரண்டு பேரும் அவரவர்கள் சிந்தனையில் லயித்தபடி வெகு நேரம் அந்த நட்சத்திரங்கள் இல்லாத வானத்தை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள். பிறகு நளினி எழுந்து படுக்கப் போனாள்.

நளினி தன்னறைக்குப் போய் வெகு நேரம் வரை மைதிலி வானத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். கன்னங்களில் நீர் வழிந்து நனைத்திருப்பதை உணர்ந்த போது தனக்குள் எப்படி இப்படியொரு பலவீனம் வந்தது என்று நினைத்துச் சிரித்தாள்.

(தொடரும்).

# குழந்தைகளைப் பற்றிய சிந்தனைத் துளிகள்!



பெற்றோருடைய அன்பு தான் உல கில் மற்ற எதையும் விடக் குழந்தை களுக்கு மிகவும் அவசியமானது. குழந்தையிடம் தாயும் தந்தையும் எவ்வளவு அன்பு காட்டினாலும் அதிக மாகி விடாது. அன்பே குழந்தைக்குப் பாதுகாப்பு: ஆதரவு எல்லாம். அன்பு இருந்தால்தான் குடும்பத்தில் மற்றவர் களிடம் ஒட்டுதலாக இருக்கும். வளர்ந்து பெரியவனான பிறகு வீட்டின்மேல் பாசம் அன்பிலிருந்தே ஏற்படுகிறது.

- பேரண்ட்ஸ் மாகஸின்.

இதயங்களின் மூலையில் ஒரு சக்தியை வைத்திருக் கிறான்: மிருகத் தனம் நிறைந்த பெற்றோர்களால் தாக்கப் படும்போது குழந்தை போல் என்றும் போர் வலையில் தன்னை மறைத்துக் கொள் கிறது.

இங்கர்சால்.

முன் உதாரணங்களே குழந்தை களுக்குத் தேவை; குறை காண்போர் தேவையில்லை.

ஜோபெர்ட்.

குழந்தையின் தனி உலகத்துக்கு நகரில் எனக்குச் சாந்தி நிலவும் ஒரு சிறிய மூலை கிடைத்தால் கூடப் போதும். அந்த விந்தையான உலகில் அவனுடன் பேச விண் மீன்கள் கூட முன் வரும். அவன் முகத்தையே நெருங்கித் தன் வான விந்தைகளையும் பித்துப் பிடித்த மேகங்களையும் காட்டி அவனை ஆனந்தப் பரவசப் படுத்த வானம் முன் வரும்!


தாகூர்.

தொகுப்பு: க. மாரியப்பன்.

இப்போது ஏராளமாக
விற்பனையாகிறது

சரவணா

மாவரைக்கும் இயந்திரம்



நீடித்த உழைப்பு ●
நிசப்தமான ஓட்டம் ●
கவர்ச்சியான ●
தோற்றம்
முழு பாதுகாப்பான ●
கவரிங்

சரவணா
இன்ஜினியரிங் டிரேடர்ஸ்
(சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் சமீபம்)
12/15-A கிருஷ்ணசாமி முதலியார் ரோடு
கோயமுத்தூர் 641002
PHONE 34250 • 32321
GRAMS 'WETGRINDER'
-OSR

THE BIOGRAPHY
OF
RAJAJI
by
RAJMOHAN GANDHI

PRICE Rs. 45/-
(Postage Rs. 3/- extra)

★

BHARATHAN PUBLICATIONS
PRIVATE LIMITED
Guindy, Madras-600 032

சிறந்த டிகாக்ஷன்
நிறைந்த கோப்பைகள் அளிப்பது

ஸ்டேன்ஸ்
பிரெஞ்ச் காபி

உங்கள் அபிமான
கடைகளில் கிடைக்கும்

Stanes




MAC/UCS/505 TAM

தி யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி லிமிடெட்
த. பெ. எண். 3856, கோயம்புத்தூர்-641 018

எஜமானி அம்மா பற்றிப் பேசறது — வந்து — அவங்க கழுத்துத்தாலி. காட்ரெஜ் பீரோ லாக்கருக்குள்ளே இருந்து பேசறேன். சிலநாட்கள் அம்மா கழுத்திலேயும் இருப்பேன். பாதி நாள் இங்கேதான். ஏன்னு அம்மாவுக்கும் ஐயாவுக்கும் அவ்வளவு அன்னியோன்யம். கோவம் வந்தா ''நீயுமாச்சு நீகட்டின தாலியுமாச்சு''ன்னு கழற்றி அவர் மொகத்திலே வீசிடுவாங்க. அப்புறமா பிடுங்கி உள்ளே வச்சுடுவாங்க. ஒரு கடவை அஸால்ட்டா ஐயா கையிலே ஒருநாள் இருந்தபோது, என்னே மார்வாடி கடையிலே விட்டுட்டு அவன் தந்த பணத்திலே ரேஸ் ஆடிட்டாரு. அதிலேருந்து உஷாராயிட்டாங்க அம்மா. தாலியாவது பேசறதாவதுன்னு தோணுதா?

ஏங்க? பேசக் கூடாதா? பெரிய எழுத்து விக்ரமாதித்தன் கதை விழுந்து விழுந்து படிச்சீங்களே. அதிலே அந்தம்மா — அதான் பேசா மடந்தை — அவங்களோட ரவிக்கை, தாவணி, உள்பாடி, பாவாடை எல்லாம் கதை சொல்லலியா? நீங்க ரசிக்கலியா? அதே மாதிரி தான் இதுவும்.

அம்மா குளிக்கறாங்க. வெள்ளிக்கிழமை இல்லியா? தலைக்கு ஊத்திக்கறாங்க. நிதானமாத்தான் ஆகும். வந்திருக்கற மனுஷாள்ளாம் கூடத்திலேயும் நடையிலேயும் பாய்லர் புகையைச் சுவாசம்பண்ணிக்கிட்டு 'தேமே'னு இருக்காங்க. என் பக்கத்திலே அவங்க கழற்றி போட்ட தினுசிலேயே அவங்க வளையலுங்க, அட்டிகை, சங்கிலி, வைரத்தோடு, வைர மூக்குப் பொட்டு எல்லாம் கெடக்குதுங்க. ராவிலே ரயில்லே மனுஷாள் தூங்கற மாதிரி ஒண்ணோடொண்ணு வித்தியாசமில்லாமே, கலந்து மோதிக்கிட்டு சுருண்டு கிடக்குதுங்க. எனக்குத்தான் யாரோடயாச்சும் என்ன வாச்சும் பேச மாட்டோமான்னு ஓர் ஏக்கம். அதால் நீங்க இருக்கீங்களே கேக்க! எங்க அம்மாவைப் பத்தி விவரமாச் சொல்றேன் —

அந்தக் கதையிலே அந்தம்மா பேசா மடந்தை. இங்கே நம்ப அம்மா நேர் எதிரு. தூங்கற நேரம்தான் வாய்க்கு ஓய்வு. இவங்க தான் முழுக்க முழுக்கப் பேசறது. மத்தவங்க கேட்டுக்கணும். அதான் பழக்கம். எல்லாருக்கும் நாக்கை வச்சவன் இவங்களுக்கு சவுக்கை வச்சுட்டான். முக்கால் வாசி நேரம் வாய் சிலம்பம் போடும். வார்த்தையெல்லாம் சாட்டையடி மாதிரி சுளீர் சுளீர்னு பாஞ்சு வந்து விழும்.

நம்பினா நம்புங்க, நம்பாட்டிப் போங்க. அம்மா அப்படியே சரஸ்வதி அவதாரந்தான். வீணையை எடுத்து வச்சுக்கிட்டு உக்காந்தாங்கன்னு இன்னைக்கும் பூரா கேக்கலாம். வீணை வாசிச்சுக்கிட்டுக் கூடவே பாடறவங்களைப் பாத்திருப்பீங்க. பேசறவங்களைப் பாத்ததுண்டா? இங்கேதான் அந்த மாதிரி! கைபாட்டுக்குத் தந்தியை மீட்டும். வாய் அதும் பாட்டுக்கு சம்பந்தமில்லாமே சர்வம், சினிமா விமர்சனம், புடவை நகைநட்டு அக்கப்போரு இதெல்லாம் பேசிக்கிட்டே இருக்கும்.

எதுக்கு எது பின்னணின்னே தெரியாது! பாடம் கத்துக் கொடுக்கறது, ராஜ தர்பார் மாதிரி தான். வர்ற பிள்ளைங்கள்ளாம் நடுங்கும். அத்தனை கண்டிப்பு. ஆனுக்குத் தகுந்த மாதிரி, காகக்குத் தகுந்த மாதிரி அருமையா சொல்லித் தருவாங்க.


ஒரு ரோஷக்காரப் புள்ளே அம்மா திட்டின போது முகத்தைக் கோணி, உதட்டைச் சுளிச்சு என்னவோ செஞ்சுது. குருவை ஒழுங்கு காட்டலாமா? நீங்களே சொல்லுங்க. அவ்வளவுதான் அம்மாவுக்கு வந்தது பாருங்க ஆத்திரம். ''வணக்கத் தெரியாம வளர்த்திருக்காங்க'' — அதுஇதுன்னு பெத்தவங்களுக்கும் சேத்து டோஸ் விட்டாங்க. அந்தப் பொண்ணு விருட்டுனு எழுந்து போயிடுச்சு, வீணையை அப்படியே போட்டுட்டு. சாயங்காலமாப் பெத்தவங்க வந்தாங்க, ஆவேசத்தோட. ''என்னமாச் சொல்லே எம் பொண்ணை. ஏதாச் சொல்லுவே. நீ பெத்திருக்கியா, வளர்த்திருக்கியா'' அப்படீன்னு ஏக சத்தம். என்ன அக்கிரமம் பாத்தீங்களா, என்னமோ கடவுள் கண்ணைத் தொறக்கலே? அம்மாவுக்குப் புத்ர பாக்கியம் இல்லே — அதுக்காகச் சொல்லிக் காட்டலாமா? ஆனா அவங்க ஜம்பம் அம்மாகிட்டே சாயலே. சடார்னு 'ரிக்ஷாக்கார' லெவலுக்கு அம்மா இறங்கிப் பேசினாங்க. ஏங்க, ஆபத்துன்னு வரும்போது கௌரவமெல்லாம் பாத்தா முடியுமா? சும்மா ஒரு பத்து நிமிசம் விளாசு விளாசுன்னு விளாசியிருக்காங்க, பாருங்க...



அப்பனும் ஆயியும் பயந்து ஓடியே போயிட்டாங்க. இன்னி வரை திரும்பலே. அம்மாகிட்டே எல்லாம் நடுங்கணும் ஆமா! அந்தப் பொண்ணு மட்டும் இஸ்கோல்லே சொல்லிக்கிட்டிருந்ததாம். ''மானம், வெக்கம் இருக்கறவங்க அங்க போயி கத்துக்க மாட்டாங்கன்னு'' சொல்லட்டுமே? யாருக்கு நஷ்டம்?

வீட்டு நிருவாகம் – உங்களுக்கே தெரிஞ்சிருக்கும் – அம்மாதான். நூறு ஆளுங்கன்னு னும் சமாளித்து வேலே வாங்கறதுக்கு வேறே யாராலேயும் முடியாது. யாரை எப்படி என்ன விலே கொடுத்து வாங்கணும்கறது அம்மாவுக்கு அத்துப்படி. காரையும், ஸ்கூட்டரையும் போட்டுக்கிட்டு பாங்குக்கும், ஸ்டேசனுக்கும் பாஸ்போர்ட் ஆபீசுக்கும் ஆம்பளைப் பசங்கள்ளாம் அலையும். அம்மாவோட சிரிச்ச முகமும் பேசற விதமும் அவ்வளவு சக்தி வாய்ந்தவை. உலகத்து ஆம்பிளைங்க எல்லாரையும் அடக்கி ஆள்ற ஒரு பெருமையும் சந்தோஷமும் அம்மாவுக்கு இருந்தா அது தப்பா?

ஆனா அம்மாவையே மயக்கறவன் ஒரு பிள்ளையாண்டான் வந்தான். ஐயாவோட ஒருநாள் வந்து வீணை கத்துக்கணும்னான். ரெண்டுநாள் தொட்டான். அவனுக்கும் சங்கீதத்துக்கும் ரொம்ப தூரம்னு அவனுக்கும் புரிஞ்சுது, அம்மாவுக்கும் தெரிஞ்சுது. வீணைப் பாடம் நின்னுபோச்சு சிநேகம் விடலே. அம்மாகிட்டே கத்துக்கற பல ஆம்பளைப் பசங்கள்ளே இவன்தான் புத்திசாலி. ஆள் நல்லா இருப்பான், பேச்சிலே அப்படியே தேன் ஒழுகும். அவ்வளவு நைசு! ஜல் வச்சு, சோப் போட்டுக் குளிப்பாட்டி, பூச்சுத்தி அப்படியே நலுங்காமே பஞ்சு மெத்தையிலே படுக்க வைக்கிற மாதிரி – அவ்வளவு சொகம்மா இருக்கும் அவன் பேச்சு. படு சந்தோஷம் நம்ப அம்மாவுக்கு. மொகஸ்துதிக்குப் பலியாகாதவங்க யாருங்க? அவன் வந்தாலே அம்மாவுக்குத் தலைகால் புரியாது. ஐயாவுக்காக அடுப்பை மூட்டக்கூட இஷ்டப் படாத நம்ப அம்மா அந்தப் பிள்ளைக்கு ஆசை ஆசையா விசநாளியிலே எல்லாம் பண்ணிப் போடுவாங்க; அவன் கூட சினிமா, நாடகம் எல்லாம் போவாங்க. ஐயா கண்டுக்க மாட்டாரு. தன்னை விட்டாச் சரின்னு இருந்துடுவாரு. ''டீச்சர் ரவா உப்புமா வேணும், டீச்சர் இங்கிலீஷ் படம் போகணும்''னு அந்தத் தம்பி கேக்கற தினுசிலேயே 'அய்யோ இவனுக்குச் செய்யக் கொடுத்து வச்சிருக்கணுமே'ன்னு யாருக்குமே தோணும். ஆனா என்ன பிரயோஜனம்? திடீர்னு தம்பி யாரையோ கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போயிட்டான். தன்னையே சுத்திச் சுத்தி வந்த ஆளு போன ஏக்கத்திலே அம்மாவுக்கு மனசு ஒடிஞ்சு போச்சு. தம்பி கல்யாணத்தன்னிக்கு தலைபூரா நீலகிரித் தைலத்தைத் தடவிக்கிட்டு இழுத்துப் போத்திப் படுத்துட்டாங்க. எப்படீங்க போக மனசு வரும்? நீங்களே சொல்லுங்க. ஆனா அம்மாவுக்குச் சிநேகத்தைப் பத்தி நல்லாத் தெரியும். அதனாலே இன்னைக்கும் தம்பி போக்குவரத்து வச்சுக்கிட்டிருக்கான். இந்த அல்ப சந்தோஷத்தையாவது அம்மாவுக்குத் தர அந்தப்பிள்ளையாண்டானுக்கு மனசு இருக்கே? அதைச் சொல்லுங்க.



சகல கலா வல்லின்னு கேள்விப் பட்டிருப்பீங்க. நம்ப அம்மாதான் அது. அம்மாவுக்குத் தெரியாத கலே இல்லே. சங்கீதம், விருந்து ஏற்பாடு, கல்யாணம் செய்து வைக்கிறது — இது மட்டுமா வீடு கட்டணுமா, தோட்டம் போடறதா, கோலம் போடறதா, குழந்தை வளக்கறதா கேவலம் வரவுக்குள்ளே செலவு பண்ணிக் குடும்பம் நடத்தற செப்பிடு வித்தையா— எல்லாத்திலேயும் அம்மா புலி. அது மட்டும் இல்லே. மத்தவங்களுக்கு ஒன்னும் தெரியாது நாம்தான் எல்லாம் சொல்லித் தரணும்கற உசந்த எண்ணமும் உண்டு. இதுக்கெல்லாம் கூடத் தனியா கிளாஸ் நடத்தி எல்லாருக்கும் கத்துத்தர அம்மாவுக்குக் கொள்ளை ஆசை. ஆனா நேரந்தான் இல்லே. பாவம். அந்தக் குறைதான் அவங்களுக்கு நெஞ்சு முட்டும் இன்னைக்கும் இருக்கு! நல்ல மனசு, ஆனா யாருக்குப் புரியுது?

பெண் பார்க்க வந்த பையன் பெண்ணின் தகப்பனாரைப் பார்த்துக் கேட்டான்:

''ஏன் சார், உங்க பெண்ணுக்கு சோஷலிஸம் ரொம்பப் பிடிக்குமோ?''

''ஆமாம், எப்படி கண்டு பிடிச்சீங்க?''

''பெண்ணைப் பார்த்தாலே தெரியுதே 36-36-36.''

— மு. செல்லபாண்டியன்

எங்க அம்மாவுக்குத் தெரியாத சாஸ்திரமா. அவங்க பேசாத மொழியா? அதிலே உச்சரிப்புத் தப்பு, அர்த்தம் கோணல் அந்தல் தெல்லாம் பாக்கக் கூடாது. தடலடி அடிப் பாங்க. கேக்கறவங்களும் புரிஞ்சுக்கிறாங்களே! அது போறாதா? அவங்க 'யா — யா'ன்னு இங்கிலீஷ், பேசற அழகு ஒன்னே போதும். நாலாவதுதான் படிச்சாங்க. தமிழ் கூடச் சரியா எழுதத் தெரியாது. எம். ஏ. படிச்சவங்க என்ன கிழிச் சுட்டாங்க? ஏங்க? ஒரு கவர்னருக்கு என்னங்க சம்பளம்? மூவாயிரம் இருக்குமா? ப்பூ! அதைப் போல ரெண்டுபங்கு இருந்த இடத்திலேயே தன் தொழில்லே அம்மா சம்பாதிக்கிறாங்க தெரியுமா? அவங்களுக்கு இணை அவங்களேதான். இப்பவாவது புரிஞ்சுக்குங்க!

முக்கியமா இன்னொண்ணு சொல்ல...

அய்யய்யோ!

அதோ அம்மா வராங்க! கொன்னுபோடுவாங்க என் குரல் கேட்டா.

கப்சிப்!

# BLIND RAGE

வியட்நாம் போர் முடிந்தாலும் அங்குள்ள ஒரு கோஷ்டிக்கு, 15 மில்லியன் டாலர் தொகை மணிலா பாங்கின் வாயிலாக அனுப்ப, அமெரிக்க ஸி.ஐ.ஏ. ஸ்தாபனம் முடிவு செய்கிறது. இந்தப் பெருந் தொகையை இடையில் அபேஸ் செய்ய ஐந்து பேர் சதித்திட்டம் வகுக்கின்றனர். பாங்கின் மானேஜருக்குப் பெரும் தொகை லஞ்சமாகத் தரப்படுகிறது. திறமையாகக் கொள்ளையடித்து டிரக்கில் அவர்கள் தப்பி ஓடும்போது, ஜெட் விமானத்தில் வரும் போலீஸாரால் மடக்கப்பட்டுக் கொல்லப்படுகின்றனர். தெருக்களிலும், பெரிய கட்டிடத்திலும் பயங்கரமான சண்டைகள் விறுவிறுப்புடன் நடக்கின்றன. ''தட மேன் போல்ட்'' படப்புகழ் ஃப்ரெட் வில்லியம்ஸன் சிறப்பு நடிகராக இப்படத்தில் தோன்றுகிறார்.

- டி. ஜய. ஆர்.





# காட்டு மலர்

எஸ். ஆர். கோவிந்தராஜன்

**கா**ட்டுப் பாதையில் தன்னந் தனிமையாகக் காலை வேளையில் காரோட்டிச் செல்லும் போது ஏற்படும் இன்பத்தை, அனுபவித்தவர்கள்தான் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். கள்ளிக் கோட்டையில் காலை எட்டு மணிக்குச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு கடலூரை நோக்கி விர்ரென்று விரைந்து கொண்டிருந்த போது சந்திரன் அப்படித்தான் இயற்கை எழிலில் மூழ்கி விட்டான்.

சேலத்தில் பெரிய தேக்கமர மண்டி அதிபர் கருப்பண்ண கவுண்டரின் ஒரே புதல்வன் சந்திரன். அமெரிக்காவில் ''டிம்பர் டெக்னலஜி,'' அதாவது மரத் தொழில், மேற்படிப்புப் படித்து, பட்டம் பெற்று ஊருக்கு வந்து ஓர் ஆண்டு கூட ஆகவில்லை. அவன் திரும்பிவந்த இரண்டுமாதங்களுக்குள்ளாகவே அவன் தந்தை எதிர்பாராத விதமாய், மாரடைப்பினால் இறந்து விட்டார். பல லக்ஷம் ரூபாய் மூலதனம் போட்ட மரமண்டி, மிகுந்த முதலீட்டில் அப்பொழுதுதான் தொடங்கப்பட்ட 'சௌடாம்பிகா ஸா மில்ஸ்'' என்ற மரமறுக்கும் தொழிற் கூடம் எல்லாம் சந்திரனின் நிர்வாகத்திற்குத் திடீரென்று வந்து விட்டன. முழுமையாக அப்பாவோடு உட்கார்ந்து தொழில் விவகாரங்களைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூட அவகாசம் கிடைக்கவில்லை. கதிகலங்கிப் போய் விட்டான். ஆனால் ஒன்று சொல்ல வேண்டும். அவன் தாயார் சௌடாம்பிகா அம்மாள், தன் அதிர்ச்சியை கூடக் காட்டிக் கொள்ளாமல், பிள்ளைக்கு உறுதியான பக்க பலமாகத்தான் நின்று விட்டாள். அவன் அண்ணன் நல்லமுத்து கவுண்டர் பவானியில் ஒரு பெரிய கம்பளத் தொழிற்சாலை நடத்தி வந்தார். அவர்தான் கூட வந்திருந்து, சிக்கல்களை ஒவ்வொன்றாகத் தீர்த்து வைத்துக் கடைசியாக முழுப்பொறுப்பையும் இப்பொழுது தான், நான்கு மாதங்களாக, சந்திரனிடமே ஒப்படைத்து விட்டார். ஏதோ ஒருவழியாக எல்லாம் சரியாகி, சந்திரனும் தனித்தியங்கும் தன்னம்பிக்கையைப் பெற்று விட்டான். வியாபார நிமித்தமாகக் கள்ளிக்கோட்டை, கடலூர், கூனூர், சத்தியமங்கலம் என்று பல இடங்களுக்குப் போக வேண்டியிருக்கும். தனியாகவே தான் செல்லுவான். இப்பொழுதுகூட, கடலூரில் தன் தந்தையின் பழைய நண்பர் சென்னியப்ப கௌண்டர் பங்களாவுக்குத்தான் போய்க் கொண்டிருந்தான். ஊர் கிட்ட வந்தாகி விட்டது; இன்னமும் பத்து நிமிட தூரம்தான்.

சட்டென்று மலைப்பாதையில் திருப்பிய சந்திரனை ஓர் அதிசயக் காட்சி வரவேற்றது. கீழே ஒரு நீர்த் தேக்கம். அங்கே ஒரு யானைக் குட்டி தனியாக நின்று தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. சந்திரன் இரண்டு மூன்று முறை இந்தப் பாதையில் போயிருக்கிறான். ஆனால் இந்த அற்புதக் காட்சியைக் கண்டதேயில்லை. காரை நிறுத்திவிட்டு, கீழே இறங்கி அக்காட்சியை அனுபவிக்கத் தொடங்கினான். இன்னும் கொஞ்சம் கிட்டப் போனால் என்ன என்று தட்டுத் தடுமாறி நீர்த்தேக்கத்தை நோக்கி இறங்கவாரம்பித்தான். திடீரென்று பின்னாலிருந்து ஒரு பெண்ணின் அலறல் கேட்டது.

''சார், சார். அங்கே போகாதீங்க. நில்லுங்க. ஆபத்து. போகாதீங்க.''

சட்டென்று சந்திரன் நின்று விட்டான். திருப்பிப் பார்த்தான். ஒரு பதினெட்டு, இருபது வயது மதிக்கக் கூடிய பெண், அவன் கார் பக்கத்தில் நின்று கொண்டு பதற்றமாகக் கையைக் காட்டி, ஆட்டி அழைத்துக் கொண்டிருந்தாள். சந்திரன் மெதுவாகத் திரும்பக் காரிடம் வந்து சேர்ந்தான்.

''ஏன் இப்படிக் கத்தறே? அது என்ன குட்டி யானைதானே. என்ன பண்ணிடும்?''

''அய்யய்யோ, குட்டி யானை ஒரு நாளும் தனியாக வராது. யானைக் கூட்டம் அங்கே பக்கத்திலே எங்கேயாவது இருக்கும். இங்கேயிருந்து கண்ணுக்குத் தெரியலே. முதுமலை காட்டிலேயிருந்து எப்பொழுதாவது இப்படித் தான் வரும். நீங்க இங்கேயிருந்து போயிடுங்க, சார்.''

சந்திரன் அந்தப் பெண்ணை ஏற இறங்கப் பார்த்தான். மிகக் களையான புறுபுறுவென்ற முகம். முத்துக் கோத்தாற்போல் பற்கள், நீண்ட கருவிழிகள். அப்படி ஒன்றும் சிவப்பு என்று சொல்வதற்கில்லை; ஆனாலும் நல்ல உடல்வாகு. காட்டில் வசிக்கும் பெண்ணைப் போல் சேலைதான் உடுத்தியிருந்தாளே ஒழிய, பட்டணத்து நாகரீகம் தெரிந்தவள் என்பது அவன் தன்னை ''சார்'' என்று அழைத்ததி லிருந்தே புரிந்து விட்டது.

''நீ மட்டும் பயப்படாமல் நிற்கிறாயே. உன்னை யானைக் கூட்டம் ஒன்றும் பண்ணாதா?''

அவள் களுக்கென்று சிரித்து விட்டாள்.

''நான் என்ன அங்கே இறங்கிப் போய் யானைக் குட்டி வாலைப் பிடித்துப் பார்த்தேனா? இங்கேயிருக்க வேண்டாமென்றுதான் அந்த மேட்டிலே ஏறப்போனேன். அப்போ உங்களைப் பார்த்துட்டேன். அந்த மேட்டுக்கு அந் தண்டைப் பக்கம்தான் எங்க வீடு. சீக்கிரம் போயிடுவேன்.''

சந்திரன் ஏதோ கேட்க வேண்டுமென்று நினைத்தான். அதற்குள் அவள் புதருக்குள் மறைந்து விட்டாள். தேவலோகத்திலிருந்து பூவுலகத்துக்குத் திரும்பிவரச் சந்திரனுக்குப் பிடிககவேயில்லைதான். என்ன செய்வது? காரைக் கிளப்பிக் கொண்டு கடலூர் போய்ச் சேர்ந்தான்.

மதிய உணவின் போது சென்னியப்ப கவுண்டரிடம் சந்திரன் மெதுவாகக் காலைச் சம்பவத்தைப் பற்றிக் கூறினான். கவுண்டருக்கு உடனே அடையாளம் புரிந்து விட்டது.

''அந்தப் பொண்ணு, அது நம்ப தெக்கங் காட்டு மேஸ்திரி நன்னை கௌண்டன் பெண் ராஜம்மா. ரொம்ப கெட்டிக்காரப் பெண். இந்த ஊர் உயர்நிலைப் பள்ளியிலே இறுதிப் பரீட்சையிலே முதல் இடம் வாங்கினா. அரசாங்கம் ஸ்காலர்ஷிப் கொடுத்திருக்காங்க. இப்போ சேலத்திலே தான் ஏதோ காலேஜில் பி. ஏ. படிக்கிறாள். அங்கே ஏதோ ஒரு மாதர் சங்கம் நடத்தர ஹாஸ்டல்லே இருக்காளாம். ரொம்ப அடக்கமான பொண்ணு.''

சந்திரனுக்கு ஒரே ஆச்சரியம். அந்தப் பெண் ஒரு காட்டு வாசிப் பெண். கல்லூரியில் படிக்கிறாளா? கொஞ்சங்கூடக் காண்பித்துக் கொள்ளவில்லையே. தான் காட்டில் வசிக்கும் பெண் என்பதில் அவளுக்குத் தாழ்வு மனப் பான்மை இல்லையே? இதுவும் அதிசயம் தான். அவன் அடுத்த நாள் சத்திய மங்கலம் சென்று ''கூப்பு'' பேரம் எல்லாம்



பேசிவிட்டுச் சேலம் போய்ச் சேர்ந்தான். ஆனால் அந்தப் பெண்ணின் குறுகுறு பார்வையும், களுக்கென்ற சிரிப்பும் மட்டும் அவனை விடாமல் எல்லா இடத்துக்கும் தொடர்ந்து கொண்டே வந்தன.

**ப**ல வாரங்களுக்குப் பின் ஒரு நாள் சாயந்திரம், சந்திரன் சேலம் ஏற்காடு ரோடில் ஒரு தோப்பில் உலாவப் போனான். அது அதிக ஜன சந்தடி இல்லாத, இயற்கை எழில் மிகுந்த இடம். சாதாரணமாகவே அவனுக்குத் தனிமை என்றால் மிக விருப்பம். அதுவும் கொஞ்ச நாட்களாக அவனுக்கு ஏதோ ஓர் இனம் புரியாத மனப்பதற்றம் இருந்து கொண்டே வந்தது. யாருடனும் அதிகமாகப் பேச விரும்புவதேயில்லை. அன்றும் என்னவோ சிந்தனையில்தான் மூழ்கியிருந்தான். எதிரே அந்தப் பெண் வருவதைக் கூடக் கவனிக்கவில்லை. அவளைத் தாண்டிப் போனபின் தான் சட்டென்று நினைவு வந்தது.

"அம்மா நில்லுங்கோம்மா, உங்களைத்தானே."

அந்தப் பெண் சற்றுப் பதற்றத்துடன் நின்று திரும்பிப் பார்த்தவள், களுக்கென்று சிரித்து விட்டாள். ஆமாம். அவளேதான். அதே சிரிப்பு, அதே குறுகுறுப்பு, அவள் உடை மட்டும் நாகரீகமாக மாறி இருந்தது. அவ்வளவுதான்.

"நீங்கதானா சார், யாரோன்னு பயந்திட்டேன். நீங்க இந்த ஊர்தானா. யானைக் குட்டியைப் புடிச்சிட்டீங்களா?"

"என்ன ராஜம்மா கும்மா கிண்டல் செய்யறே. என்னவோ வேடிக்கை பார்க்கலாம்னு போனேன். ஆனால், உனக்கு ரொம்ப தாங்ஸ். நீ சொல்லாட்டி அன்னைக்கிச் சரியா மாட்டிக்கிட்டிருப்பேன்."

"என் பேர் உங்களுக்கு எப்படி சார் தெரிஞ்சுது?"

சந்திரன் விவரமாய்ச் சொன்னான். தன்னைப் பற்றியும் கூறினான். உஷாராக, தற்பெருமை, கர்வம் எல்லாம் நீக்கி விட்டு உள்ளதை உள்ளபடி சொன்னான். அவளும் என்னென்னவோ கேள்விகள் கேட்டாள்.

அதற்கப்புறம் சந்திரன் பல தடவை அதே தோட்டத்தில் அவளைச் சந்தித்தான். அவளும் அவனுடன் சகஜமாகத்தான் பழகினாள். ஆனால் ஒன்று, ஒரு கட்டுப்பாட்டுக்குள் மட்டுமே அவனுடன் பேசலாம் என்பதில் அவள் சந்தேகமே வைக்கவில்லை.

**ஒ**ருநாள் சந்திரன் அவளைத் தன் வீட்டுக்கு வரும்படி அழைத்தான். தன் தாயாரைப் பார்க்க வரச் சொன்னான். அவளும் தயங்காமல் ஒப்புக் கொண்டாள். வந்தும் விட்டாள். சந்திரனுடைய அம்மாவுக்கு அந்தப் பெண்ணைப் பார்த்தவுடனேயே பிடித்து விட்டது.

"என்ன சமர்த்துப் பெண். அடக்கமாயிருக்கா. இந்தக் காலத்துப் படிக்கிற பெண் மாதிரி கர்வம் பிடித்து அலையலே. இந்தப் பொண்ணைக் கட்டிக்க யார் குடுத்து வெச்சிருக்காளோ" என்றாள். சந்திரன் அவள் யாரென்று அம்மாவிடம் விளக்கமாகச் சொல்லவில்லை. சென்னியப்ப கவுண்டருக்குத் தெரிந்த பெண் என்று மட்டும் தான் சொல்லியிருந்தான். ஆனால் தன் மாமாவிடம் மட்டும் உண்மையைச் சொன்னான்.

மாமாவுக்கு முகவில் ஒரு பெரிய அதிர்ச்சி. ஒன்று, தன் பெண் கோகிலாவைக் கொடுக்க வேண்டுமென்று அவர் கட்டி வந்த மனக்கோட்டை இடிந்து விட்டது. இரண்டாவது, காட்டிலே வசிக்கின்ற பெண், படித்து விட்டால் போதுமா? ஜாதி, குலம் பார்க்க வேண்டாமா? அப்புறம் நம் பணம், அந்தஸ்து எல்லாம் என்னவாகிறது? மாமாவுக்கும் சந்திரனுக்கும் அடிக்கடி இது பற்றிச் சர்ச்சை ஏற்படும். இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த வாக்கு வாதங்களைப் பற்றி அந்தப் பெண்ணுக்கும் தெரியாது. சந்திரன் அம்மாவுக்கும் ஒன்றும் தெரியாது.

ஆனால், மாமா இங்கிதம் தெரிந்தவர். பண்பாளர். சந்திரன் பிடிவாதமாக



இருப்பது தெளிவாகத் தெரிந்தவுடன், தாமே இதற்கு ஒரு வழி செய்யமுற்பட்டார். முதலில் தம் தங்கையிடம் சிறிது சிறிதாக விஷயத்தைக் கூறினர். சௌடாம்பிகா அம்மாள் அப்படியே இடி விழுந்து போய் விட்டாள். மாமா பக்குவமாக அவள் மனத்தை மாற்றினர்.

இரண்டு மூன்று முறை அந்தப் பெண் வீட்டுக்கு வந்தபோது அது நடந்த விதமும், அதன் அடக்கமும் புத்திசாலித் தனமும் அவளைக் கூடக் கவர்ந்து விட்டன. கடைசியில் அவளும் இந்த அதிசய சம்பந்தத்துக்கு ஒருவாறு சம்மதித்து விட்டாள்.

மாமா தான் கடலூருக்குப் போய் சென்னியப்ப கவுண்டருடனும், நன்ன கௌண்டனுடனும் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று முடிவாயிற்று. அப்பொழுதுகூட அந்தப் பெண் சம்மதத்தைக் கேட்க வேண்டுமென்று யாருக்கும் தோன்றவில்லை. 'ஆமாம். அவளுக்கென்ன கசக்கிறதா. கரும்பு தின்னக் கூலியா?' என்று மாமா உதாசீனமாக இருந்து விட்டார்.

நன்ன கௌண்டனிடம், சென்னியப்பக் கவுண்டர், விஷயத்தைக் கூறியவுடன் அவன் தேன் கொட்டின மாதிரி துள்ளிக் குதித்தான். அவனுக்குக் கொஞ்சங்கூட நம்பிக்கையில்லை. இதில் ஏதோ சூது இருப்பதாக அவனுக்குத் தோன்றிற்று.

''என்னங்க, ராஜம்மாவுக்கு அவ்வளவு பெரிய சம்பந்தமா? நமக்குச் சரிப்படாதுங்க சாமி. நான் ஏழைங்க. எனக்கு இந்த வம்பெல்லாம் வாண்டாங்க'' என்று கூறி விட்டான். மேலும், தன் இறந்து போன தங்கை மகன் கெம்பு கௌண்டனுக்கு அவளைக் கட்டிக் கொடுப்பதாக வாக்குறுதி கூறியிருப்பதாகவும் சொன்னன். சென்னியப்பர் எவ்வளவோ எடுத்துச் சொன்னர்.

''இதோ பார், நன்னு. தேடிவர சீதேவியை உதைச்சுத் தள்ளக் கூடாது. கெம்பு பையன் நல்லவன் தான். ஆனல் அவன் படிக்காதவன். காட்டிலே மரம் வெட்டிப் பிழைக்கிறவன். அவனு உன் பெண்ணுக்குத் தகுந்த கணவன்? அவதான் ஒத்துக் கொள்ளுவாளா?'' என்றெலாம் எடுத்துக் கூறினர்.

வெகு நேரம் தர்க்கம் நடந்தது. கடைசியில் நன்ன கௌண்டனும் விட்டுக் கொடுத்து விட்டான். ''நாயம்தானே. பெண் படித்து, நாகரீகமாக வாழ ஆரம்பிச்சுட்டா, அவளை மறுபடியும் இந்தக் காட்டிலே கொணர்ந்து மிருகம் மாதிரி முடக்க முடியுமா'' என்று தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக் கொண்டான். வெற்றிச் செய்தியுடன் மாமா சேலத்துக்குத் திரும்பினர்.

சரி, அடுத்தபடி அந்தப் பெண்ணிடம் கூற வேண்டுமே. சௌடாம்பிகா தான் அவளுக்குச் சொல்லியனுப்பினள். மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

''உன்னைப் பார்த்தா, என்னை யறியாமலே எனக்கு என்னவோ நெகிழ்ச்சியுண்டாகிறது. ராஜம்மா.''

''அது என் அதிர்ஷ்டம் அம்மா. நீங்க எப்போ வேணும்னலும் கூப்பிடுங்கம்மா. நான் வரேனே.''

''அதில்லேம்மா. உன்னை எப்போதும் எங்கிட்டேயே வெச்சுக்கலாம்னு பார்க்கிறேன், ராஜம்.''

''அது முடியுமாம்மா. நான் படிப்பு முடிந்து ஊருக்குப் போகணும். அப்புறம் எங்க ஜாதி ஜனங்களோட சேர்ந்து உழைக்கணும். அதுக்காகத்தானே இவ்வளவு கஷ்டப் பட்டுப் படிக்கறேன். ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பித்து, குழந்தைகளுக்கெல்லாம் பாடம் சொல்லித் தரணும். அவுங்களையெல்லாம் ஒப்பேத்தரத்துக்கு எவ்வளவோ வேலையெல்லாம் இருக்கு.''

''இல்லே ராஜம். நான் சொல்றது உனக்குப் புரியலேயே. உன்னை நான் மருமகளாக்கிக்கலாம்னு பார்க்கிறேன்.''

சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. ராஜம்மாதான் — கடைசியில் மௌனத்தைக் கலைத்தாள்.

''அது முதல்லேயே புரிஞ்சு போச்சும்மா. எனக்கும் தெரியும். சந்திரன் சார் இதுக்கு இஷ்டப் படறார்னு. ஆன, எனக்கு முறைப் பிள்ளை இருக்கார், எங்க அத்தை மகன். அவரைத்தான் நான் கட்டிக்கணும். அது தான் எங்க ஜாதிக் கட்டுப்பாடும்மா.''

''என்ன, ஒரு படிக்காத விறகு வெட்டி இருக்கானமே, அவனையா கட்டிக்கப் போறே?''

''அம்மா ஒங்ககிட்ட எனக்கு மரியாதை அதிகம். ஆன, என் ஜனங்களையும் என்னைக் கட்டிக்கப் போறவரையும் அவதூறுப் பேசின எனக்கு வருத்தமாப் போயிடும். கட்டாயமாச் சொல்றேன். நான் ஊருக்குத் திரும்பித் தான் போகப் போறேன். எங்க அத்தானைத் தான் கட்டிக்கப் போறேன். இதைப்பத்தி மறுபடியும் பேச வேண்டாம்'' என்று கூறியவள், எழுந்து விர்ரென்று போய் விட்டாள்.

ராஜம்மா தலைமறையும் வரை சௌடாம்பிகா அவளைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். பின்னர் சந்திரனிடம் விஷயத்தைச் சிறிது சிறிதாகக் கூறினள்.


''சந்திரா, அது காட்டுப்பூ அப்பா. நாட்டிலே மணக்காது. அங்கேயிருந்தாதான் அழகு. மறந்துடுடா கண்ணு!''

மறக்காமல் என்ன செய்வான் சந்திரன்? ஆனல் அதற்கப்புறம் அவன் பிசாசைப் போல் வேலையில் மூழ்கிப் போனன்.

ஒருவர்: நல்ல தரமான படங்களுக்கு சென்சாரிலே 'Q' சர்ட்டிபிகேட் தரப் போறாங்களாமே?

மற்றவர்: நம்ம சென்சார் கொடுக்கிற 'Q' சர்ட்டிபிகேட்டை வைக்க அந்தப் படத்திலே என்ன 'Q'uality இருக்கிறது என்று நம்ம மனசிலே 'Q'uestion தான் எழும்!

- சக்தி நாயனர்





# குளோஸ் அப்

## திரு செம்மங்குடி சீனிவாசய்யர்

கேரளாவில் சங்கீதக் கலைக்காக இவர் ஆற்றியுள்ள சேவைகளுக்காகவும், ஸ்வாதித் திருநாள் கீர்த்தனங்களை அச்சிட்டும் பாடியும் பிரபலப்படுத்தியதற்காகவும் கௌரவிக்கும் வகையில், கேரளப் பல்கலைக் கழகம் அண்மையில் இவருக்கு ''டாக்டர்'' பட்டம் வழங்கியுள்ளது.

1945ஆம் ஆண்டிலேயே திருவாங்கூர் மன்னர் இவருக்கு ''ராஜ்ய சேவா நிரத'' பட்டம் வழங்கியுள்ளார். தமிழகமும் பாரத அரசும் பல விதங்களில் கௌரவித்துள்ளது.

கேரளப் பள்ளிகளில் சங்கீதமும் ஒரு பாடமாக இருப்பதால், செம்மங்குடி அங்கு சங்கீதக் கல்லூரி முதல்வராக இருந்தபோது இவரிடம் படித்த அனைவரும் பல பள்ளிகளில் சங்கீத ஆசிரியர்களாய்ப் பணியாற்ற முடிந்தது... இது இவருக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கும் விஷயம்.

## திரு ப. மாணிக்கம்

தம்முடன் ஒரு பழகிய நண்பர் ஒருவரே மனம் பலவீனப்பட்டுப் போய்ப் போலீசுக்கு உளவு சொல்லிக் காட்டிக் கொடுத்த ஒரு நிகழ்ச்சியை எண்ணி இப்போதும் வருந்துகிறார், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராகப் பணியாற்றும் சட்ட மன்ற மேலவை உறுப்பினர் திரு ப. மாணிக்கம்.

கம்யூனிஸ்ட் சதி வழக்கில் 1950இல் இப்படிக் கைது செய்யப்பட்ட இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் ராஜாஜி அமைச்சரவை ஏற்பட்டதும், ''நேரடியாய் வன்முறையில் ஈடுபட்ட தற்கு ஆதாரமில்லை'' என்று கூறி விடுதலை செய்யப்பட்டார்.

வீரசாவர்க்கர், சுபாஷ் போஸ், விவேகானந்தர் இவர்களின் எழுத்துக்களில் பெரிதும் ஈடுபாடு கொண்ட இவர், உழைக்கும் மக்களுக்கும் நாட்டு விடுதலைக்கும் பாடுபடக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சேர்ந்தார்.

தென்னூர்க்க ட்டுக் காரரான இவர் பத்தொன்பது ஆண்டுகள் நெல்லை மாவட்டத்தில் வாழ்ந்தவர். குற்றாலத்து எழிலில் இளைத்தவர். ''சென்னைக் கடற்கரை, கன்னியாகுமரி, குற்றாலம் இவற்றின் இயற்கை எழிலை யெல்லாம் நவீனப் படுத்தல் என்கிற பெயரில் சிதைத்து விட்டார்களே!'' என்று அங்கலாய்க்கிறார் திரு. மாணிக்கம்.



## புலவர் திரு. கீரன்

மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர் திரு. கீரன். தமிழ் தவிர ஆங்கிலம் கிரேக்க மொழிகளிலும் நல்ல புலமை பெற்ற இவர் தமிழ், ஆங்கில மொழிகளில் ஒரே நேரத்தில் இரண்டு எம். ஏ. தேர்வுகளை முடித்திருக்கிறார்!

எங்கே யானையைப் பார்த்தாலும் உடனே காரை நிறுத்தித் தேங்காய் பழம் கொடுக்கும் வழக்கமுள்ள இவருடைய காரின் ஹாரன் ஒலி கேட்டால் எழுந்து நிற்குமாம் கோமதி என்கிற திருவிடை மருதூர்க் கோவில் யானை.



ஒரு நாளைக்கு இருபது காப்பி அருந்தும் பழக்கமுள்ள திரு கீரன் தமிழரசுக் கழகத்தில் மிகத் தீவிரமாகப் பணியாற்றியவர்.

67 ஆம் ஆண்டில் தமிழரசுக் கழகத்தை விட்டு விலகிய இவர் வேறு கட்சிகளில் சேராமைக்குக் கூறும் காரணம் ''திரு ம. பொ. சி. யின் நிலையில் வேறு அரசியல்வாதி இல்லை'' என்பதே.

அரசியலில் ஏற்பட்ட வெறுப்புணர்ச்சியே இவரை ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்தியதாம். ''47 வரை தேசிய நோக்கில் இருந்த நிலைமாறி, 57 வரை மாநில அளவில் குறுகிய அரசியல் 67க்குப் பிறகு தனி மனிதவழிபாட்டுக்காகவே என்று ஆகிவிட்டது'' என்கிறார் இவர்.

– யெஸ்பால்

# திருமலை-திருப்பதி தேவஸ்தானம் திருப்பதி

## திருமலையில் பவித்ரோஸ்தவம்

வேங்கடாஜலபதி சுவாமிக்கு வருஷந்தோறும் நடக்கும் பவித்ரோத்ஸவம் திருமலையில் ஆகஸ்டு 4-ந் தேதியிலிருந்து 6-ந் தேதி வரை நடைபெறும்.

இது ஆஸ்திகர்களுக்குப் பொன்னான சந்தர்ப்பம்; வேதங்கள், மந்திர உச்சாடனங்கள், புராணங்களால் வேங்கடாஜலபதித் தெய்வம் அர்ச்சிக்கப்பட்டு, அவரது பக்தகோடிகளுக்கு நல்லாசியைப் பூரணமாகப் பெற்றுத் தரும் வேளை. பக்தி வெள்ளத்தில் ஆழ்ந்து வாழ்வின் குறிக்கோளை எய்தும் நன்னாள்.

வேங்கடாசலபதிக் கடவுளுக்கு ஐந்து வண்ணங்களாலான பவித்ர மாலைகளை அணிவித்து அலங்கரித்து வண்ண முத்துக்களின் ஜொலிப்பிலே அருள்பாலிக்கும் தெய்வத்தைக் காண்பது கண்கொள்ளாக் காட்சி. இந்த அலங்காரக் கோலத்தைக் கண்டு பக்தர்கள் மெய்சிலிர்த்துப் போகவும் கூடும். வேதபாராயணங்கள் இன்னிசையுடன் முழங்க, புராணங்கள் இசைபட ஒலிக்க, வேத முறைப்படி ஹோமம் எழுப்பப்பட்டு எங்குமே ஒரே பக்திமயமான சூழ்நிலையைத் தரும் கோயில் முழுக்க ஒரே தெய்வ முழக்கமும் தரிசனமும் கிடைத்தற்கரிய காட்சி.

கிரகஸ்தர்கள் இந்தப் புனித உத்ஸவத்தில் கலந்துக் கொள்ள 1500 ரூபாய் கட்டணம் கட்டிப் பங்கு பெறலாம். மற்ற பக்தர்களுக்கான சேவைகள், அதாவது வஸந்தோத்ஸவம், கல்யாணோத்ஸவம், பிரம்மோத்ஸவம், சஹஸ்ரகலசாபிஷேகம், ஊஞ்சல் சேவை ஆகியவை இந்த மூன்று நாள் உத்ஸவத்திலும் இடம் பெறாது.

வேங்கடாஜலபதிக் கடவுள் மீது அபார பக்தி கொண்ட பக்தகோடிகள் அனைவரும் திருமலைக்கு விஜயம் செய்து பகவத் அருளைப் பெறலாம்.

**P.V.R.K. பிரசாத் I.A.S.**
**எக்ஸிக்யூடிவ் ஆபீசர்**
**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**



# வாழ்க்கை வரலாறு

## ராஜ்மோகன் காந்தி

சத்தியாக்கிரகத்தைத் தவறான வழியில் பயன்படுத்தக் கூடாது என்று வி. ஆர். எடுத்துக் கூறினார்:

"மகாத்மா தமது பிடிவாதமான கோரிக்கைகளைக் கைவிட வேண்டும் என்று கூறிக் கொண்டு தேஜ் பகதூர் சாப்ரூவும் சீனிவாச சாஸ்திரியும் உண்ணாவிரதம் மேற் கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் என்ன நினைப்பீர்கள்? மகாத்மாவின் மனம் சீனிவாச சாஸ்திரி தற்கொலை செய்து கொள்வதை ஏற்குமா? ஏற்காது எனில் அதற்காக மகாத்மா இந்தியா சார்பில் விடுத்துள்ள கோரிக்கைகளை வாபஸ் பெற முடியுமா? உற்சாகம் மிக்க இளைஞர்களாய நீங்கள் சத்தியாக்கிரகம் என்ற புதிய ஆயுதத்தைக் கண்டடைந்திருக்கிறீர்கள். அதனை துஷ்பிரயோகம் செய்யலாகாது என எச்சரிக்கிறேன்."

பிராமணத் துவேஷம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது கண்டு கவலையுற்று அவர் சொன்னார்:

"நான் வெறுப்புக்கு உள்ளாகி இருக்கிற அந்த ஜாதியைச் சேர்ந்தவன். எந்த ஒரு குலத்தையும் வெறுப்பது என்பது சரியான வழியல்ல. இதை இங்கே உங்களிடம்தான் சொல்லுகிறேன். இதையே வெளியே சொல்ல மாட்டேன். மக்கள் தாங்களாகவே தங்கள் அனுபவங்களிலிருந்து படிப்பினை பெற விட்டுவிட வேண்டும். ஆனால் நீங்கள் எல்லா வித வெறுப்புக்களையும் தவிர்த்து சமூக சீர்திருத்தத்தில் அன்பு வழியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."

ஜாதிப் பிரச்னை திருமணத்தைப் பாதிக்க வேண்டியதில்லை என்று கருத்துத் தெரிவித்தார் வி. ஆர்.:

"ஆண்களும் பெண்களும் தாங்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்களை மணக்கப் பூரண சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும் என்பது என் உறுதியான நம்பிக்கை. இளைஞர்களும் யுவதிகளும் ஒருவரை ஒருவர் இழுத்துக் கொண்டு ஓடிவிட வேண்டும் என்று நான் கூறவில்லை. கல்யாணங்களில் இளம் வயதினரின் விருப்பங்கள் மதிக்கப்பட வேண்டும் என்றுதான் கூறுகிறேன். ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் நாம் பங்காளிகளாக இருக்கலாம், நண்பர்களாக விளங்கலாம். அதே போல் கல்யாணங்களும் ஜாதிக் கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட வேண்டியதில்லை."

சம்பந்தி போஜனம் தவறல்ல என்றும் சொன்னார்:

"யார் தொட்டுச் சமைத்ததாயிருந்தாலும் யாருடன் சேர்ந்திருந்து வேண்டுமானாலும் யாருடைய முன்னிலையில் வேண்டுமானாலும் என்னால் உணவருந்த முடியும். இந்தச் சிறைச் சாலையைப் பெருக்கிச் சுத்தம் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உங்களைத் தொடவும் உங்களுடன் கலந்துறவாடவும் அனுமதித்தால் அவர்களுடைய பழக்க வழக்கங்களிலும் அவர்கள் நடந்து கொள்ளும் விதத்திலும் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் அவர்களைச் சதா நீங்கள் ஒதுக்கினால் அந்த நம்பிக்கையே ஏற்படாது.

"பேச்சல்ல, செயல்தான் தேவை. அருவருப்பான காரியங்களையும் செய்யத் தயாராயிருக்க வேண்டும். எல்லாரும் துப்புரவாளர் வேலையையும் பயில வேண்டும். துப்புரவாளர்கள் தம் வேலையைச் செய்து விட்டுக் குளித்து உடை மாற்றிக் கொண்டு வண்டியில் பயணப்பட்டுச் சென்று இருப்பியாக உணவருந்தி மகிழும் நாளை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

பலாத்காரத்தை நிராகரித்த வி. ஆர்., லட்சிய சோஷலிஸம் அல்லது போல்ஷிவிஸம் பற்றி கனவுக் கண்டார். சில சந்தர்ப்பங்களில் மனிதர்கள் தங்களுக்காகப் பணியாற்றுவதை விடச் சிறப்பாக நாட்டுக்காகப் பணியாற்றுவார்கள் என எண்ணினார்:

"நீ ஓர் ஓவியனாக இருந்தால் நீ தீட்டுகிற ஓவியம் உனது மகனுக்கோ அல்லது பேரனுக்கோ போய்ச் சேரும் என்பதை விடத் தேசத்தின் சொத்தாகும் என்ற நிலை இருப்பின் நீ இன்னும் சிறப்பாக அதனை வரைவாயா? எனக்குத் தெரிந்த பல நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இப்போதுள்ள சூழ்நிலையில் கூடச் சொந்த விவகாரங்களை விடத் தேசியக் கடமைகளிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள்."

தேசியம் மட்டும் போதாது என்றார் அவர்:

"சத்தியாக்கிரகப் பரிசோதனை நாம் விடுதலை பெறுவதற்காக நடத்தும் தேசிய

டாக்டர்: நேத்து ஜுர வேகத்தில என்னைக் கண்டபடி திட்டினீங்க!

நோயாளி: திட்டினது உண்மைதான். ஆனா ஜுர வேகத்திலே இல்லே!

-வெ. சீதாராமன்



பரிசோதனை மட்டுமல்ல. உலகம் முழுவதுமே முன்னேறுவதற்குரிய மார்க்கத்தில் ஓர் அடி எடுத்து வைத்ததுபோலக் கருதி இந்தியா போரிட்டால்தான் ஆண்டவன் அருள் கிட்டும்.''

சிறைக்கு வெளியே ஒரு போராட்டம் நடந்து கொண்டிருந்த போதிலும் அப்போராட்டத்தில் வி. ஆர். ஓர் அங்கமாக இருந்த போதிலும் அவர் கசப்புணர்ச்சிகளைச் சிறிதும் வெளிப்படுத்தவில்லை:

''அஹிம்சையிலிருந்து ஓர் அங்குலம் திசை திரும்பினாலும் நாம் பாடு படுவதெல்லாம் வீணாகிப் போகும். ஓர் ஆங்கிலேயனோ ஐரோப்பியனோ மகாத்மாவிடம் பேசினால் அதன் முடிவில் என்ன எண்ணுகிறான்? இந்தியாவில் உள்ள மக்கள் எல்லாரும் இவரைப் போலிருந்தால் பிரச்னைகளைத் தீர்ப்பது எளிதாகப் போகும் என்று நினைக்கிறான். ஆனால் எல்லா மக்களும் அவரைப் போல் இல்லை. மக்கள் அனைவரையும் வெறுப்புணர்ச்சிகளிலிருந்து விடுபடச் செய்வதே நமது முயற்சியாக இருக்க வேண்டும்.''

இளைஞர்கள் காட்டிய அன்பிலே நெகிழ்ந்த வி. ஆர். கூறினார்:

''என்னிடம் நீங்கள் காட்டுகின்ற அன்பு மற்றவர்களிடமும் தொத்திக் கொள்கிற மாதிரி செய்யுங்கள். அப்போது அவர்களுக்கு என்னால் சேவை புரிய முடியும். மற்றவர்களுக்கு என் மீது நல்லெண்ணம் ஏற்படுமாறு உங்களால் செய்ய முடியவில்லை என்றாலும் பாதகமில்லை; பொதுவாக நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை எல்லா மக்களிடமும் பரப்புவதற்கு முயலுங்கள். அதுவே போதும். மக்கள் ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் பார்ப்பது நிற்கட்டும்.''

விடுதலையாகும் தினத்துக்கு முதல் நாள் கடைசி வகுப்பு நடந்தபோது அவர் சொன்னார்:

''எனது அருமை நண்பர்களாக நீங்கள் என்னைப் பார்த்துப் புரிந்து கொண்டதுபோல வெளியே இருப்பவர்களால் உண்மையான வி. ஆரைப் புரிந்து கொள்ள முடியாது.''

''டேய், உனக்குத் தெரியுமா? நான் பலசாலியா ஆகணும்னு தினமும் அயர்ன் டானிக் சாப்பிடறேன், அப்புறம் தினமும் ஸ்விம் பண்ணறேன்.''

''ஐயய்யோ ஜாக்கிரதையா இரு! துரும் பிடிக்கப் போயிடப்போறே!'' - லதா



அடக்கத்துடன் அவர் தொடர்ந்தார்:

''பொறுமையின்மை எனது குண இயல்பு. நான் உங்களிடம் சதா கண்டிப்புக் காட்டிய போதிலும் நீங்கள் பொறுமையுடன் என்னிடம் நடந்து கொண்டதற்காக நன்றி தெரிவிக்கிறேன்.''

சிறைச்சாலை ஊழியர்களிடம் பரிவுடன் நடந்து கொள்ளுமாறு அவர்களை வற்புறுத்தினார்:

''நூற்றி எட்டாவது தடவையாக நான் இதைச் சொல்கிறேன். கொட்டடிக் கதவுகள் பூட்டப்பட வேண்டிய நேரத்தில் யாரும் கேட்டுக் கொள்வதற்குக் காத்திராமல் நீங்களாகவே உங்கள் கொட்டடிக்குள் சென்று விடுங்கள். இத்தகைய சுயக்கட்டுப்பாடு பின்னால் சட்ட மறுப்பு இயக்கத்தில் நமக்குத் தேவையான சமயத்தில் பலத்தைத்தரும்.''

தம்மிடம் உள்ள அன்பை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று ''மாணவர்''களை அவர் கேட்டுக் கொண்டார். ''அப்படிச் செய்தால் நான் நிலைகுலைந்து போய்விடுவேன்!'' என்ற அவர், எழுந்து நடந்து சென்று விட்டார்.

மொத்தம் ஒன்பது மாத சிறைத் தண்டனை அளிக்கப் பட்டிருந்தாலும் வி. ஆர். ஐந்து மாதங்களும் பதினொரு நாட்களும்தான் சிறைவாசம் அனுபவித்தார். அவரைச் சிறையில் அடைத்தபிறகு, இருநூறு ரூபாய் அபராதம்கட்ட மறுத்ததற்குச் சிறைவாசம் ஆறு வாரங்கள்தான், மூன்று மாதங்கள் அல்ல என்று அரசு கண்டுபிடித்தது! மேலும் பத்து வாரத் தண்டனை அமல் படுத்தாமல் விடப் பட்டது.

அக்டோபர் பத்தாம் தேதி விடுதலை பெற்ற வி. ஆர்., உடனேயே பெல்லாரி பொதுக் கூட்டம் ஒன்றில் பேசினார். புதிய அவசரச் சட்டங்களைத் தாக்கினார். ''இந்த அவசரச் சட்டங்களானவை இந்தியப் புரட்சி மாயையல்ல, நிஜமே என்று உலகுக்கு உணர்த்தும்! வைஸ்ராய் தயாரித்து அளித்துள்ள போஷாக்கு மிக்க உணவை (அவசரச் சட்டங்கள்) அருந்திப் புரட்சி பலம் பெறும்!''

சென்னையில் பொதுக் கூட்டங்களில் பேசும் போது, ''புரட்சி மனப்பான்மையை வேகம் பெறச் செய்யுங்கள்'' என மக்களைக் கேட்டுக் கொண்டார். ''அரசு ஜனத்தொகை கணக்கிடப் போகிறது. வீடு வீடாக வந்து புள்ளி விவரங்களைக் கேட்கும்போது பதில் சொல்ல வேண்டாம்'' என்றும் மக்களுக்கு அறை கூவல் விடுத்தார்.

வி. ஆர். வரம்பு கடந்து விட்டதாக அரசு கருதியது. கவர்னர் ஜார்ஜ் ஸ்டான்லி, 'ராஜகோபாலாச்சாரி போன்ற ஒரு பிரசித்தி பெற்ற புரட்சியாளரை' பொதுக் கூட்டங்களில் பேச அனுமதித்ததற்காக ஜில்லா அதிகாரிகளைக் கடிந்து கொண்டார். வி. ஆரைக் குறிக்க இந்தப் புதிய வர்ணனை, சட்ட மறுப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததால் அரசு பொறுமை இழந்திருப்பதை உணர்த்தியது.

(தொடரும்)

தமிழாக்கம்: டி. ராஜேந்திரன்

(Copyright Reserved)


# ஓர் ஆசிரியர் ராஜினாமா செய்கிறார்...

நந்தினி நாராயண்

முருகையா இப்படிச் செய்து விடுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

பொதுவாகவே, கல்லூரிகளின் நடைமுறைகளையும் மாணவர்களின் நடத்தையையும் கண்டு பொருமி, சக ஆசிரியர்களிடம் குறைப்பட்டுக் கொள்வது அவருடைய வழக்கம்:

''என் ஸார், இன்றைய இளைஞர்கள்தான், நாட்டின் எதிர் காலத் தலைவர்கள் என்றும் அந்த எதிர்காலச் சிற்பிகளை உருவாக்குவது ஆசிரியர்கள்தான் என்றும் உலகத்தில் சொல்கிறார்களே, அப்படித்தான் இன்றைய நிலைமை இருக்கிறதா? மாணவர்கள் தங்கள் சமுதாயப் பொறுப்பை உணர்ந்திருக்கிறார்களா? ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் சரியாகச்



செய்ய முடிகிறதா?... என்று மற்றவர்களிடம் அடிக்கடி கேட்பார். அது மற்றவர்களிடம் சும்மா பேச்சுக்காகக் கேட்கிற கேள்வி இல்லை. அவருடைய உள்மனத்தையே கேட்டுக் கொள்ளும் சுய சோதனைக் கேள்வி.

இப்படி அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்த முருகையா, கடைசியில் தன் மன எரிச்சல் தாளாமல், வேலையை ராஜினாமா செய்து விட்டாரே?

உலக நடைமுறை, லௌகிக விஷயங்களில் ஒட்டாமல், தனித்து நிற்கும் லட்சிய வாதியான அவரைப் பற்றி பலர், 'ஸார் ஒரு மாதிரி' என்று அபிப்பிராயம் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இருந்தாலும் அவர் இப்படி ஒரு திடீர் முடிவுக்கு வருவார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

அன்று அவர் வகுப்பில் வழக்கம்போல் ஏதேதோ கலாட்டா வாம். ஆனால் வழக்கத்தை மீறி, சிறிது அதிகமாகவே வலுத்து, யாரோ ஒரு மாணவன் அவரை ஏதோ கேவலமாகச் சொல்லி விட்டானாம். உடனே, தன் புத்தகங்களைத் தூக்கி எறிந்து விட்டு, பிரின்ஸிபால் அறைக்குப் போய், ராஜினாமா எழுதிக் கொடுத்து விட்டு, வீட்டுக்குப் போய் விட்டாராம் முருகையா.

செய்தியைக் கேட்டதும் பல ஆசிரிய நண்பர்கள், முருகையாவின் வீட்டுக்குப் போய், அவரைச் சமாதானப்படுத்தி, ராஜினாமாவை வாபஸ் வாங்கச் சொல்ல முயற்சி செய்தார்கள். ஆனால் அவர் வீட்டிலே சுபாவமாக இருந்த தோரணையும் தெளிவான அமைதியும் உறுதியான பேச்சும் – அவர் ஏதோ அவசரத்திலே ராஜினாமா செய்து விட்டார் என்று வருத்தப்படுவதாகத் தோன்றவில்லை.

''ஸார்! இந்தக் காலத்து மாணவர்களே இப்படித்தான், இருக்காங்க... இங்கேனு இல்லே – நாடு முழுவதும் ஏன் உலகம் முழுவதிலுமே இப்படித்தான் 'ஸ்டூடண்ட் – அன்ரெஸ்ட்' இருக்கு'' என்று விளக்கம் கூற ஆரம்பித்தார் ஒரு பேராசிரியர்.

''வெளியிலே 'அன்ரெஸ்ட்', குழப்பம் எல்லாம் இருக்கலாம் ஸார். ஆனால் க்ளாஸ் ரூமுக்குள்ளே ஆசிரியரை மாணவன் மதிக்க வேண்டாமா?... படிச்சவனே, படிக்கிறவனே மதிக்காட்டா, வெளியிலே இருக்கிற படிக்காதவன் எப்படி மதிப்பான்?'' என்று குமுறினார் முருகையா.

''எல்லாம் கலிகாலம், ஸார்... என்னமோ, நாமும் காலத்தோட அட்ஜெஸ்ட் பண்ணிக்கிட்டு, ஒத்துப் போகத்தான் வேண்டியிருக்கு...''

''நோ... என்னாலே முடியாது, ஸார் அநியாயத்தோட 'இண்டிஸிப்ளினோ'ட காம்ப்ரமைஸ் செஞ்சுக்கிட்டு, கேவலம் வருமானத்துக்காக, காலத்தை ஓட்ட முடி



யாது, ஸார்... நான் ராஜிநாமா பண்ணி னது, பண்ணிட்டுதான்'' என்று உறுதியாகச் சொல்லி விட்டார் முருகையா.

அவர் ஒரு விஷயத்தில் 'கன்வின்ஸ்' ஆகி முடிவெடுத்து விட்டார் என்றால், அவரைத் திருப்புவது அல்லது திருத்துவது கடினம் என்பது எல்லா ஆசிரியர்களுக்கும் தெரியும். என்றாலும், கணிசமான வருமானத்தை விட்டுவிட்டு அவர் எப்படிக் குடும்பத்தை நடத்தப் போகிறார்? அவர் நடுத்தர வர்க்கத்திலும் கீழ்த்தட்டு ஆளாயிற்றே? லட்சியங்கள், மனத்தை நிரப்பலாம், வயிற்றை நிரப்புமா?...

''ஸார் ... இப்போது வேலையை விட்டுட்டீங்களே, இனிமே வீட்டுச் செலவுக்கு என்ன செய்யப் போறீங்க?'' என்று ஆராவமுதன் தயங்கித் தயங்கிக் கேட்டபோது, பட்டென்று முருகையா சொன்ன பதில், ''எல்லா ஆசிரியர்களுக்கும் அதிர்ச்சியளித்தது... இவ்வளவுக்கும் அன்று வகுப்பில் என்னதான் நடந்தது?

முருகையா நிறையப் படித்தவர்; தம் சப்ஜெக்டிலே ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டமும் பெற்றவர். கல்வியாளர்களுடைய மாநாடுகள், சிம்போஸியம்ஸ், செமினார்களிலே அவருடைய கருத்துக்களுக்கும் கட்டுரைகளுக்கும் நிறைய மதிப்பு உண்டு. ஆனால் இப்படிப்பட்ட அவருடைய வகுப்புக்களில் எப்போதும் ஒரே கூச்சலும் குழப்பமுமாயிருக்கும். 'முருகையா வகுப்பு'க்கு வந்துவிட்டால், சாது மாணவன்கூட, குறும்புகள் செய்ய நினைப்பான்.

அன்று, அவர் வகுப்பிலே பாடம் நடத்துவதற்கு, நன்றாகத் தயாரித்து வைத்திருந்தார். சாணக்கியரின் 'அர்த்த சாஸ்திரம்', திருவள்ளுவரின் 'பொருட்பால்,' மாக்கியவெல்லியின் 'தி பிரின்ஸ்' எல்லாவற்றையும் ஒப்பிட்டு அருமையான 'லெக்சர்' செய்வதற்காக வகுப்புக்குள் நுழைந்தார்.

முதலில் ''அர்த்த சாஸ்திரம் எழுதியது யார்?'' என்று ஒரு மாணவனைக் கேட்டதும் அவன் விசுக்கென்று எழுந்தான்.

''ஸார்! சத்தியமா நான் எழுதலே, ஸார்!'' என்று அப்பாவி போல் நடித்தபடி பதில் சொன்னான். வகுப்பில் பெருத்த சிரிப்பு.

இன்னொருவன் எழுந்தான்:

''ஸார் அர்த்த சாஸ்திரம்னா அர்த்தம் சொல்ற சாத்திரம் தானே. ஸார்! எல்லாத்துக்கும் அர்த்தம் சொல்றது 'டிக்ஷனரி' தான்! அதை எழுதினது டிக்கன்ஸ்...''

அடுத்த பெஞ்சியிலிருந்து ஒருவன் எழுந்தான்:

''அதோ கடைசி பெஞ்சிலே தூங்குறானே, கப்பு, அவன்தான் ஸார், அர்த்த சாஸ்திரத்தை எழுதியிருப்பான்!''

வகுப்பில் ஏற்பட்ட கூச்சலில் தூக்கம் கலைந்து விழித்த கப்பு, நடந்ததையறிந்து பதறினான். ''ஸார்!... ஸார்!... நான் சத்தியமா எதுவுமே எழுதலே, ஸார்!...''

''அர்த்த சாஸ்திரத்தை எழுதினது யாருன்னு ஒரு 'என்கொய்ரி கமிஷன்' போட்டு விசாரிக்கலாம், ஸார்! அதுதான் ஸார், நல்ல யோசனை...'' என்று அபிப்பிராயம் சொன்னான் ஓர் எதிர்கால அரசியல்வாதி.

முருகையாவின் பொறுமை வெடித்து எரிமலையாய்ப் பொங்கி விட்டார்:

''ஏம்பா இந்த க்ளாஸும் ஒரு பார்பர் ஷாப்பை விட மோசமாய்ப் போயிடுச்சே? பார்பர் ஷாப்புக்கு ஹேர்கட் செஞ்சுக்கப் போறவன், பார்பர் சொன்ன இடத்திலே உட்கார்றான். அவன் சொல்ற படியெல்லாம் தலையைக் குனிந்து, சாய்த்து, ஒடுக்கி, அசையாம அமைதியாயிருக்கிறான். ஆனால் இங்கே, படிக்க வந்த நீங்க, ஆசிரியர் சொல்றது எதையுமே கேட்கறதில்லையே, ஏன்?... ஒரு சலூனிலே காட்டுற கட்டுப்பாட்டை, வகுப்பிலே காட்டக் கூடாதா? அந்த பார்பரை விட, ஆசிரியர் தாழ்ந்து போயிட்டாரா?''

''ஹேர் கட் பண்ணி முடிச்ச உடனே பார்பருக்கு, பணம் கிடைக்கும்; ஆனால் மாதம் முடிந்த பிறகுதான் ஆசிரியருக்குச் சம்பளம் கிடைக்கும்'' என்று ஒருவன் உட்கார்ந்தவாறே கூவினான். குபீர் என்று சிரிப்பு அலை எழுந்து பரவியது.

அந்தச் சிரிப்பின் ஊடே, மற்றொரு மாணவனின் குரல், தெளிவாகக் கேட்டது:

''நீங்களும் பார்பர் ஷாப் வைக்கலாம், ஸார்!''

நறுக்கென்று அந்தக் குரல், முருகையாவின் இதயத்துக்குள் பாய்ந்து குடைந்தது. சில விநாடிகள் எதுவும் பேசாமல், சிந்தனையோடு நின்றார் அவர். அமைதியாகச் சுற்றிலும் மாணவர்களின்மேல் பார்வையைத் தீர்க்கமாக ஓட்டினார். விழிகளின் ஓரத்தில் கசிந்த ஈரத்தையும் கடந்து, ஓர் அசாதாரண உறுதி பளிச்சிட்டது அவர் கண்களில்...

''மை டியர் ஸ்டூடண்ட்ஸ் ...'' அங்கே அசரீரியாகக் கேட்டதே ஒரு குரல் அது

ஒரு மாணவனுடைய குரல் அல்ல; அது எனது ஆசிரியரின் குரல், எனது தெய்வத்தின் குரல் என்று உணர்கிறேன். கடைசியாக எனக்கு ஞானத்தை ஏற்படுத்தி வழி காட்டிய அந்தக் குரலுக்கு நன்றி...'' என்று அழுத்தமாகச் சொன்னவாறு, கையிலிருந்த புத்தகம், தாள்களைத் தூக்கி எறிந்து விட்டு வகுப்பிலிருந்து வெளியேறி, நேரே பிரின்ஸி பாலின் அறைக்குச் சென்று, ராஜினாமா எழுதிக் கொடுத்து விட்டார் முருகையா...

அவருடைய முடிவான பதிலைக் கேட்டு, கூடியிருந்த ஆசிரிய நண்பர்கள் அதிர்ச்சி யடைந்து விட்டார்கள். அவர் குணத்தைப் பற்றி 'ஒரு மாதிரி' என்று அபிப்பிராயம் சொல்வார்களே, அது உண்மையாகவே ஆகி விட்டதோ என்று சிலர் கவலைப்பட்டார்கள்.

''ஸார் என்ன ஸார் இப்படிச் சொல்றீங்க டு யூ மீன் வாட் யூ ஸே?...'' என்று குரல் தழுதழுக்கக் கேட்டார் பொருளாதாரப் பேராசிரியர்.

''எஸ்... ஐ மீன் வாட் ஐ ஸே... அடுத்த வாரமே, ஒரு பார்பர் ஷாப் ஆரம்பிக்கப் போறேன். முதல்லே, தொழில் தெரிஞ்ச ரெண்டுபேரை சம்பளத்துக்கு வைச்சுப்பேன். கொஞ்ச நாளிலே நானே ஹேர்கட் செய்யப் பழகிடுவேன். அதொண்ணும் பிரமாத மில்லே, ஆஃப்டர் ஆல், 'ட்ரான்ஸ்ஃபர் ஆஃப் ட்ரெயினிங்' தத்துவம்தானே?... எம்.ஏ. எம். எஸ்ஸி. பி. எச். டி... பட்டங்கள் வாங்குகிறதைவிட இது சுலபம்தான்... சீக்கிரமே கத்துக்கிட்டு, தொழில் பண்ணிடு வேன். அப்புறம், நான் வாங்குகிற கூலிக்கு, மனப்பூர்வமாக வேலை செஞ்ச திருப்தி இருக் கும்... என் ஷாப்புக் குள்ளே வருகிறவன், கத்திக் கூச்சல் போட்டு, என் வேலையைக் கெடுக்க மாட்டான். என் மனத்தைப் புண் படுத்த மாட்டான். 'டிக்னிடி ஆஃப் லேபர்' என்று சொல்றதில்லையா, எந்தத் தொழிலா யிருந்தால் என்ன, செய்யும் தொழிலே தெய்வம்...''


—முருகையாவின் குரலில் ஒலித்த திடம், சக ஆசிரியர்களின் வாயை அடைத்துவிட்டது.


# பஸ்ஸில் சினிமா!



கண்டக்டர்: ஏம்பா... வேலூர்ல இறங் கணும்... இன்னும் உட்கார்ந்துக்கிட்டு இருக்கியே...?

கிராமத்து ஆள்: மன்னிச்சிக்கோப்பா படம் பார்க்கற ஜோர்ல மறந்தே போயிட் டேன்...





பாலு: சார்... எனக்குக் கடைசி சீட் டாக் கொடுங்க!

கவுண்டர் கிளார்க்: ஏன் சார்?

பாலு: பின்னே என்ன? முன்னாடி உட் கார்ந்து படம் பார்த்தா கண்ணுக்குக் கெடுதல் ஆச்சே அதுதான்.

★

சோமு: ஏம்பா இந்தப் படத்துல நம்ப 'Hero' குதிச்சு குதிச்சு பாட்டுப் பாடறார்?

ராமு: அட நீங்க ஒண்ணு பஸ் வேகமா பள்ளத்திலேயும் மேட்டுலேயும் குதிச்சு, குதிச்சுப் போறது இல்லே அதான்!

- எஸ். பிரகாஷ்

# உமா

## பிரபுசங்கர்

தெற்குப்புற ஜன்னலண்டை வந்து எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள் சங்கரி. தவிப்பு அவள் கைகளை உதறிக் கொண்டிருந்தது. 'சே என்ன மனிதர் இவர்!' என்று அலுத்துக் கொண்டாள்.

''என்னம்மா, முழி தெறிச்சுடற மாதிரி தெருவைப் பார்த்திண்டிருக்கே? கண்ணன் தானே? வந்துடுவான். நீ அலட்டிக்காம உன் வேலையைக் கவனி; அவன் என்னிக்குத்தான் பொழுதோட வீட்டுக்கு வந்திருக்கான்? ஆபீஸ், ஆ...ஸ். வேலே, வேலே. என்னதான் வெட்டி முறிப்பானோ?'' என்று அலுத்துக் கொண்டார் ரிடையராகி வீட்டில் இருக்கும் சங்கரியின் மாமனார்.

''அதில்லே அப்பா... வந்து... இத்தனை நேரம் குழந்தை உமா என்னமா விளையாடிண்டு இருந்தது. இப்போதான் தூங்க ஆரம்பிச்சது. 'தினமும் நான் வரபோது தூங்கிண்டே இருக்கே, தூங்கு மூஞ்சி'ன்னு திட்ட வேறே செய்யறார்.



''ஹூம்; கல்யாணத்துக்கு முன்னாலேதான் ஆபீஸைக் கட்டிண்டு அழுதானே. அப்புறமாவது குடும்பம் - பொறுப்புன்னு காலாகாலத்திலே வருவான்னு நெனைச்சேன்; அட.. ஒரு குழந்தை பிறந்து மூணு மாசமாறது. அந்தக் குழந்தையைப் பார்க்கணும், கொஞ்சணும் விளையாடணும்னு நினைச்சானா? தோணலியே அவனுக்கு.''

''ஆபீஸ்லே பாவம், வேலே முறையெல்லாம் எப்படியோ? இவர் ஒருத்தரே நாலுபேர் வேலையைச் செய்யணுமாமே?''

''என்னது, உன் குரல் மாறது? என்ன சங்கதி? ஓ துரை வராரு?''

''அப்பா, அப்பா ப்ளீஸ். வந்ததும் வராததுமா அவர்கிட்ட ஒண்ணும் கேட்டுடாதேங்கோ, சள்ளுன்னு விழுவார்.''

''அவனை எனக்குத் தெரியாதா? முன் கோபத்திலே முதல் பிரைஸ் அடிக்கறவனாச்சே'' என்ற அவர் குழந்தையை எடுத்து வைத்துக் கொண்டார். சங்கரி உள்ளே போய், மாமியாரிடம், ''அம்மா, அவர் வந்துட்டார்'' என்றாள். அவள் குரலிலிருந்த சந்தோஷத்தைக் கேட்ட பிறகுதான் அம்மாவுக்கும் நிம்மதியாக இருந்தது.

வழி நடையில் செருப்பை வீசிவிட்டு உள்ளே வந்தான் கண்ணன். ''உஸ்... அப்பாடா'' என்று அலுத்துக் கொண்டபடி நாற்காலியில் சாய்ந்தான். அப்பா தன் இருக்கையை விட்டு எழுந்து மின்விசிறியை அதிகமாகச் சுழல வைத்தார்.

''மணி ஒம்பதாறதேடா கண்ணா. சாப்பிட்டுட்டியா? இல்லே காப்பி வேணுமா?'' உள்ளிருந்து வந்த அம்மா கேட்டாள்.

''சாப்பிட்டுடறேன்'' என்றான் கண்ணன்.

சமையலறையில் அப்பாவுக்கும் பிள்ளைக்குமாகத் தட்டு வைத்தார்கள்.

''இந்த பிரைவேட் கம்பெனிகாரங்களே சுத்த மோசம். கசக்கிப் பிழிஞ்சுடுவாங்க, சே!'' என்று பொதுப்படையாகக் கூறிய அப்பா, ஓரக்கண்ணால் தம் பையனைப் பார்த்தார்.

இரண்டு கவளம் சாதம் உள்ளே இறங்கிய பிறகு கொஞ்சம் தெம்பு வந்தது கண்ணனுக்கு; ''இன்னிக்கு சாயந்திரம் மானேஜர் கூப்பிட்டார்'' என்றான்.

அவன் இயல்பாகவே பேச ஆரம்பித்ததைக் கண்டதும் சங்கரியும் அம்மாவும் அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டார்கள். அவன் சொல்லப் போவதை ஆவலுடன் கேட்டார்கள்.

''ஒரு மணி நேரம் அறுத்துத் தள்ளிவிட்டார். அவர் வேறே பிராஞ்சுக்கு மாற்றலாகிப் போகிறாராம். அதனாலே அப்போ இங்கே காலியாகிற அவர் பதவிக்கு என்னைச் சிபாரிசு செய்திருக்காராம்...''

''அடி சக்கை. கங்கிராஜுலேஷன்ஸ்.'' என்றார் அப்பா.

''என்னடி, என்ன சொல்றான் இவன்?'' அம்மாவுக்குச் சரியாகப் புரியவில்லை.

''இவருக்குப் பிரமோஷன் கிடைக்கப் போறதும்மா. மானேஜராகப் போறார்!'' சந்தோஷத்தால் உரக்கவே சொன்னாள் சங்கரி.

''தேவலையே'' என்றாள் அம்மா.

அப்போது படுக்கையறையில் தூளியில் தூங்கிக் கொண்டிருந்த உமா அழுதாள்.

''அட அதுக்குக் கூடக் கேட்டுடுத்தே. எல்லாம் என் பேத்தி வந்த வேளை. அவளோட ராசிதான்'' என்றார் அப்பா.

அதைக் கேட்டு, அழும் குழந்தையைக்கூடப் போய்க் கவனிக்கத் தோன்றாமல் மகிழ்ச்சி நயாகராவாகப் பொங்கிப் பெருகியது சங்கரியின் மனத்தில்.

''இல்லையா பின்னே?'' அம்மா அப்பாவை ஆமோதித்தாள்.

''என்ன பெரிய ராசியோட வந்துட்டா? நான் உழைச்சேன் — மாடா உழைச்சேன்; எனக்குக் கெடைச்சிருக்கு'' முணுக்கென்று கோபம் வந்து விட்டது கண்ணனுக்கு. அப்பா சொன்னது, தனது இத்தனை நாள் கடும் உழைப்பை அலட்சியம் செய்வது போலப் பட்டது அவனுக்கு.

''இல்லேடா, ஒரு பேச்சுக்கு...'' அதிர்ந்து விட்டார் அப்பா.

''பேச்சுக்கும் வேண்டாம், எழுத்துக்கும் வேண்டாம். இன்னிக்கு மானேஜர் என்ன சொன்னார் தெரியுமா? 'ஒரு நிமிஷத்தின் அறுபது செகண்டையும் வீணாக்காமல் உழைக்கிறவன் நீ. உன்னைத் தவிர வேறு யாரை நான் சிபாரிசு பண்ண முடியும்?'னார். 'உனக்குக் குழந்தை பிறந்திருக்கே, அதுக்காக இந்தா மானேஜர்பதவி'ன்னு ஒண்ணும்சொல்லலே'' என்றான் படபடப்புக் குறையாமல்.

மகிழ்ச்சி நயாகரா, கண்களில் சோகமாக மாறிப் பெருகியது சங்கரிக்கு.

இரவில் சங்கரி விசும்பும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான் கண்ணன். ''ஏய்,என்னஇது?''

விம்மி விம்மி பதில் சொன்னாள் சங்கரி: ''அப்பா சொன்னது அப்படி என்ன குத்தமா போயிடுத்தாம்? என்னமோ உங்களுக்கு உமாவைக் கண்டாலே பிடிக்கலே. வீணா கரிச்சுக் கொட்டறேள். ஒருவேளை அது பிள்ளையாப் பிறந்திருந்தா தலையிலே தூக்கி வைச்சு கொண்டாடுவேளோ என்னவோ?''

கண்ணனுக்குக் கோபம் அதிகமாகத்தான் ஆயிற்று. ''இன்னொரு எழுத்து நீ பேசினியானா நான் வெளியே போய்ப் படுத்துக் கொண்டு விடுவேன். நாளையிலேந்து வீட்டுக்கே வரமாட்டேன். ஆபீஸ்லேயே தூங்கி, சாப்பிட்டுட்டு... எல்லாம் பண்ணிப்பேன்...' என்று சிடுசிடுத்தான்.

தன் வழிக்கு அவன் வர மாட்டான் என்பதைத் தன் ஒன்றரை வருட அனுபவத்தில் தெரிந்து கொண்டிருந்தாள் சங்கரி. உடனே அவன் கோபத்தைக் குறைக்க எண்ணி, ''எல்லாமா?'' அது எப்படி?'' என்று கேலியாகக் கேட்டாள்.

அவள் சொன்னதன் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்ட கண்ணன், கோபத்தைக் குறைத்தவனாய், ''உதை கொடு ராஸ்கல்'' என்றபடி அவளை அணைத்துக் கொண்டான்.

''சொல்றதைக் கொஞ்சம் தன்மையாகச் சொன்னால்தான் என்னவாம்?'' சந்தடிச் சாக்கில் சொல்லி வைத்தாள் அவள்.

''என் சுபாவம் அப்படி. என்னாலே மாத்திக்க முடியலே, விடு'' என்ற கண்ணன் அவளை இன்னும் இறுக அணைத்துக் கொண்டான்.

புதிதாக மானேஜர் பதவி கிடைத்தவுடன் அதற்குத் தேவையான சௌகரியங்கள் பெருகின. கம்பெனியே ரெப்ரெஜிரேட்டர்,



டைனிங் டேபிள், ஸ்கூட்டர், டெலிபோன் போன்ற வசதிகளையும் செய்து தந்தது.

''எல்லாம் என் பேத்தி வந்த வேளை. என் செல்வம், என் ராஜாத்தி வந்தவேளை'' என்று குழந்தையை எடுத்து முத்தமிட்டுக் கொஞ்சினார் அப்பா. கூடவே கண்ணன் அந்தப் பக்கமாக வந்துவிடப் போகிறானே என்ற பயமும் இருக்கும். அப்படியும் இப்படியுமாகப் பார்த்துக் கொண்டே கொஞ்சினார்.

உமாவோ பொக்கை வாய் திறந்து சிரித்தாள்: 'போ தாத்தா, நீ என்னமோ பெரிசா கொஞ்ச வந்துட்டே. அப்பாவைக் கொஞ்சச் சொல்லு' என்று கூறுவது போல் இருந்தது அந்தச் சிரிப்பு. ஆனால் அவனுக்குத் தான் அதற்கு அவகாசமே இல்லை.

புதிய பதவி கண்ணனுடைய நேரத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டது. அவனுக்கே ஏதோ குற்ற உணர்வு உறுத்தியது போலும்! ''இன்னும் ஒரே வாரம்தான். அப்புறம் பொறுப்புக்களைப் பிரித்துக் கொடுத்திட்டு மேஸ்திரி வேலை பார்க்க வேண்டியதுதான். வசதிகளையும் கொடுத்து வேலைப் பளுவையும் குறைக்கிறார்கள் பார்'' என்று வேடிக்கையாகச் சொன்னான்.

''அதெப்படி? உங்களுக்குக் கீழே வேலை பார்க்கற இருபது பேர்ல ஒருத்தர் தப்பு பண்ணினாலும் நீங்கதானே பொறுப்பேற்கணும்? பொறுப்பு அதிகமாயிடுத்தே'' அவனுக்கு திருஷ்டி பட்டு விடக் கூடாதே என்று பதில் சொன்னாள் சங்கரி.


**வ**ழக்கமாகக் கேட்க வேண்டிய ஸ்கூட்டர் சத்தம் கேட்காமல் ஏதோ வேன் சப்தம் கேட்கவே அனைவரும் திடுக்கிட்டு வாசலைப் பார்த்தார்கள்.

''என் தந்தையைப் போலவே பெரிய பணக்காரனாகவேண்டுமென்று நான் ஆசைப் படுகிறேன்''

''உன்னோட தந்தை என்ன அவ்வளவு பெரிய பணக்காரரா?''

''ஊஹூம்... அவரும் பணக்காரராக வேண்டுமென்று ஆசைப்படுகிறார்.''

- டி.வி. ரவீந்திரன்



ஆம்புலன்ஸ்.

பின் கதவுகளைத் திறந்து ஸ்ட்ரெட்சரை வெளியே எடுத்தார்கள். அதில் கண்ணன் படுத்திருந்தான்.

அப்பாவும் அம்மாவும் பிரமை பிடித்தாற் போல இருக்க, சங்கரியின் கண்கள், நீரைப் பெருக்கின. கத்தக்கூடத் திராணியில்லை. மயக்கம் வரும்போல இருந்தது. குழந்தை உமா மட்டும் அப்பாவுக்கு ஏதோ ஆபத்து என்பதை உணர்ந்தாற்போலக் கத்திக் கொண்டிருந்தது.

காலையிலேயே விபத்து ஏற்பட்டு விட்டதாம். ஓர் ஆட்டோ ரிக்ஷாவின் எதிர்பாராத வலது திரும்பல். அவனது கால் எலும்பு முறிவில் முடிவடைந்ததாம். உடனே அருகே இருந்தவர்கள் கண்ணனை மருத்துவமனையில் அனுமதித்து விட்டு, அவன் பையிலிருந்த அலுவலக விலாசத்துக்குத் தகவல் கொடுத்தார்களாம். அதிகம் சேதமுறாத ஸ்கூட்டரும் அவன் அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டதாம்.

''இந்த ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் சுத்த மோசம்.'' அப்பா பொதுவாகச் சொன்னார், வேதனையுடன்.

''இது என்னடி சோதனை?'' அம்மா புடவை முந்தானை கண்ணீரில் நனைந்தது.

படுக்கையில் படுத்திருந்த அவன் நெஞ்சை நீவிக் கொண்டிருந்தாள் சங்கரி. சூடாக அவள் கண்ணீர் பொலபொலவென்று அவன் மார்பில் உதிர்ந்தது.

''அழாதே சங்கரி. எனக்கு ரொம்ப சீக்கிரம் குணமாயிடுமாம், டாக்டர் சொன்னார்...'' கண்ணன் ஆறுதல் சொன்னான்.

சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு கண்ணன் மெதுவாகக் கேட்டான்: ''என்ன இது, எனக்கு விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் உமாவின் ராசிதான்னு யாருமே சொல்லக் காணுமே, ஏன்?''

திடுக்கிட்டாள் சங்கரி.

''அன்னிக்கு, என் பிரமோஷனுக்குக் காரணம் உமாவின் ராசிதான்னு அப்பா சொன்னபோது நானும் தலையாட்டியிருந்தேன்னு வெச்சுக்கோ, இன்னிக்கு நானே என்னை அறியாமல் இந்த விபத்துக்கும் அவள் ராசிதான் காரணம்னு கற்பனை பண்ணிக் கொண்டு விட்டிருப்பேன். பாவம் பச்சைக் குழந்தை அது. அதுக்கு இனிமே நாமதான், சூது, வாது, பொய், புரட்டு, எல்லாம் சொல்லிக் கொடுக்கணும். அதுக்குப் பிறவியிலேயே அதெல்லாம் தெரியாது. நல்லதோ, கெட்டதோ, நடக்கறது நடந்தே தீரும். அதுக்கு இந்தக் குழந்தையை ஏன் அநாவசியமாகப் பழியாக்கணும்?...''

சங்கரி அப்படியே நெகிழ்ந்து போனாள்; தன் குழந்தை மீது அவனுக்கு அன்பில்லை என்று நினைத்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்தாள். ''என்னை மன்னிச்சுடுங்கோ. நீங்க பெரியவர், ரொம்பப் பெரியவர்'' என்று கதறினாள்.

திடீரென்று 'ஆவ்' என்று கத்தினாள் உமா. 'தேங்க்ஸ் அப்பா' என்று சொல்வது போலிருந்தது அது.

படவிமரிசனம்

# ஒரே வானம் ஒரே பூமி

அமெரிக்காவில் எடுக்கப்பட்ட முதல் தமிழ்ப் படம் என்று சாதனையை விளம்பரப் படுத்தியுள்ளார்கள். இது மட்டுமா சாதனை?

அமெரிக்க டாக்டரே கைவிட்ட கேஸைத் தமிழ் நங்கையான ஒரு நர்ஸ் உயிர்ப்பிக்கிறாளே, இது எப்பேர்ப்பட்ட சாதனை!

இதுவரை நமது கதாநாயகர்கள் சென்னைத் தெருக்களிலோ அல்லது சிங்கப்பூர் சாலைகளிலோதான் ஆடிப்பாடி ஓடுவார்கள். ஜெய்சங்கர் அமெரிக்க வீதிகளிலேயே ஆடிப் பாடிய படி ஓடுகிறார். இது எவ்வளவு பெரிய சாதனை!

நமது கதாநாயகிகள் காட்டாறுகளினிடையே உள்ள பாறைகள் மீது நடனம் ஆடியுள்ளனர். இப்படத்தில் கதாநாயகி நயாகரா நீர்வீழ்ச்சி எதிரே உள்ள பாறைகளில் கவர்ச்சி உடையில் நடனக் கோலங்களில் நிற்கிறாள். மகத்தான சாதனையல்லவா இது!

இந்நாள் வரை நமது பட உலகம் இந்தியப் போலீஸைத்தான் முட்டாளாக்கி விருந்தது. இப்படம் அமெரிக்கப் போலீஸையே முட்டாளாக்கியுள்ளது! மாபெரும் சாதனைதானே!

நமது கதாநாயகர்களும், நாயகிகளும் பூங்காக்களிலும் மலைச் சரிவுகளிலும் கடற்கரைகளிலும் ஓடி ஓடி டூயெட் பாடுவார்கள். இப்படத்திலோ தமிழ் நாட்டுக் காதலியும் அமெரிக்கக் காதலரும் அந்நாட்டுத் தெருவிலே டூயெட் பாடியபடி நடப்பது அளப்பரிய சாதனையாயிற்றே!

'மகத்தான அமெரிக்க நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் இப்படத்தைச் சமர்ப்பிக்கிறோம்' என்று ஆரம்பத்தில் எழுதிவிட்டு ஓர் அசட்டு அமெரிக்க டாக்டர், ஓர் அப்பாவி அமெரிக்கத் தம்பதி தவிர கதையில் வரும் மற்ற அமெரிக்கர்களை அரக்க குணம் படைத்தவர்களாகச் சித்திரித்திருப்பது எப்பேர்ப்பட்ட சாதனை!

ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கத்தைக் கூடக் கிண்டல் பண்ணியிருப்பது அதனிலும் பெரிய சாதனையாயிற்றே! — இவ்வாறு சாதனைப் பட்டியல்களை அடுக்கலாம்.

சும்மா சொல்லப்படாது. ஒளிப்பதிவு பல அமெரிக்கத் திரைப்படங்களுக்கு நிகராகத் தான் உள்ளது. அமெரிக்கா அமெரிக்கா தான் என்று சொல்லும்படி அங்குள்ள பல அற்புதங்கள் படமாக்கப்பட்டுள்ளன.

கதையில் இரு ரசிக்கத் தக்க இடங்கள். அமெரிக்காவிலிருந்து மகன் திரும்பியதும் கணக்குத் தீர்த்து விடுவதாகக் கூறிக் கரண்டி கரண்டியாகக் காப்பிப் பொடி சர்க்கரை என்று கடன் வாங்கிப் போகும் மனோரமா, ஒட்டாண்டியாக மகன் திரும்பியதும் கரண்டிக்குப் பதில் பெரிய பாத்திரத்துடன் வருவது! அமெரிக்காவில் வாய்க்கு ருசியாக ஏதாவது கிடைக்காதா என்று ஏங்கிக் கிடந்த ஜெய்சங்கர் இட்டிலி சாம்பார் சட்னியைப் பார்த்து அடையும் ஆனந்த அவஸ்தை.

அமெரிக்காவுக்குச் செல்லும் உல்லாசப் பயணிகள் (உண்மையான அமெரிக்காவைப் புரிந்துகொள்ள நினைப்பவர் அல்ல) எதையெல்லாம் பார்க்கலாம் என்று உணர்த்த ஒரு டாக்குமெண்டரிப் படம் எடுக்கிறோம் என்று கூறிப் படம் பிடித்திருந்தால் தயாரிப்பாளரின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு பாராட்டி யிருக்கலாம். ஆனால் அதில் கதையைச் சேர்க்கிறேன் என்று ஆரம்பித்துப் பொறுமையைச் சோதித்து விட்டார்கள் ப்பா!

வானமுமில்லை பூமியு மில்லை இரண்டுங் கெட் டானாக அந்தோ!


— குட்டி கிருஷ்ணன்



# விநோதமான விவாகரத்து!

லிண்டா பல்லார்டு என்ற அமெரிக்கப் பெண்ணிடம் அவள் கணவன் விவாக ரத்துக் கேட்ட போது, "நீங்களும் நானும் ஒரு விமானத்திலிருந்து பாரா சூட் மூலம் கீழே குதிக்க வேண்டும்; நாம் தரைக்கு வந்தவுடன் விவாகரத்துப் பத்திரங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்; இந்த நிபந்தனைக்கு நீங்கள் சம்மதித்தால் நான் அந்தப் பத்திரங்களில் நான் கையெழுத்திடுவேன்" என்றாள். அவன் சம்மதித்தான். அவனும், அவளும், அவர்களது வழக்கறிஞர்களும் பல நெருங்கிய நண்பர்களும், மூன்று கிலோ மீட்டர் உயரத்தில் பறந்த ஒரு விமானத்திலிருந்து கீழே குதித்தனர்; அதன் பிறகு, திரு. பல்லார்டின் வருங்கால மனைவியின் முன் விவாக ரத்துப் பத்திரங்களைப் பரிமாறிக் கொண்டனர்! •

—நியூ டைம்ஸ்.



# பூங்குழலி

இலந்தை சு. ராமசாமி

புள்ளின் பக்கக் கத்திருப்பே, புகைப்ப் பேமே எங்கும்
செல்லக் காற்று, காட்டுமலர், நுரைகொள் கடலின்
தெம்மாங்கு
கல்லுக் குள்ளே பனிஊற்று: காற்றுப்புரவி; உள்ளன்பின்
எல்லைச் சிமை; இளநெஞ்சம்; இவளே இவளே பூங்குழலி.

அச்சத்தெறிநி: அறிவாளி, அலையும் கடலின் செல்வமகள்
கொச்சை எண்ணம் இல்லாதாள்; குனிந்து பார்க்கத்
தெரியாதாள்
உச்சி மேகக் கூந்தலினை உலுக்கிப் பார்க்க எண்ணுபவள்
எச்சரிக்கை விழிப்புடையாள், இவளே இவளே பூங்குழலி;

புயலைச் சீறும் புயலாவாள்; பொங்கும் கடலில் ஒலியாவாள்
முயலைப் போன்ற மென்மையினள்; முரட்டுச் சிங்கத்
தன்மையினள்
கலங்கள் புரளும் கடலினிலே கங்குல் பகலாய்ச் சுற்றுபவள்
இயலும் நன்மை செய்திடுவாள் இவளே இவளே பூங்குழலி.

அலைக்கடலை இசையதனால் ஓய்வெடுக்கச் செய்கிறவள்
வாலைக்குமரி; துடுப்பதனை வலிப்பாள்: வலியாக்
கரமுடையாள்
மேலும் வியப்பாய்க் கதையினிலே விரியும் மனிதப்
படையினிலே
ஏலம் போல மணக்கிறவள் இவளே இவளே பூங்குழலி.

ஓடக்காரி; பிசாசுகளின் உறவுக்காரி; வெகுளி
ஆடும் அலையின் உச்சியிலே அழகாய் ஊஞ்சல் ஆடுபவள்
வாடும் நெஞ்சப் பிழிவதனை ஓங்கும் இசையாய்ப்
பொழிகிறவள்
ஈடுசொல்ல முடியாதாள் இவளே இவளே பூங்குழலி.

பொன்னியின் செல்வன் நெஞ்சை அசைக்கும்பூவே
பூங்குழலி — அவன்
புன்னகைக்காகப் புயலாய்ப் பாயும் புனிதம் பூங்குழலி
கன்னிமனத்தில் காதல்சுமக்கும் கனவேபூங்குழலி — நெஞ்சக்
கல்மலருள்ளே கனவுத்தேனைக் காக்கும் பூங்குழலி;

ஆடவர்தம்மை ஆட்டிப்படைக்கும் அழகுபூங்குழலி — அன்பன்
அருள்மொழி வர்மன்முன்னே ஊமை ஆகும்பூங்குழலி
காடும்கடலும் நதியும்இருளும் கடக்கும்பூங்குழலி — சோம்பல்
கண்டேஅறியாக் கட்டளைக்காரி கவிதைப்பூங்குழலி.

சமுத்ரகுமாரி என்றுதிரியும் சக்திபூங்குழலி — தீய
சக்திகள்தம்மை அடக்கிஒடுக்கும் சாட்டைபூங்குழலி.
குமுறும்கடலில் கொட்டம்அடிக்கும் குயிலேபூங்குழலி — ஓரக்
கோடிக்கரையின் கோயில்தீபக் கொழுந்தேபூங்குழலி.

அரியணைஏறும் ஆசைகொண்ட அன்பேபூங்குழலி — அந்த
ஆசைஉண்மை ஆகஅடைந்த ஆக்கம்பூங்குழலி
ஒருபயம்இன்றி உலவித்திரியும் உயர்வேபூங்குழலி — கதையின்
ஓட்டந்தன்னை உந்தும் விசையின் ஊக்கம்பூங்குழலி.

சரித்திர நாயகன் உயிரினைக் காத்தனள்
சக்தியின் வடிவாயினள்
தரித்திரம் இல்லதோர் நெஞ்சினைக் கொண்டனள்
சத்திய நிலையாயினள்

அரியணை ஏறினள் அரசியாய் மாறினள்
அமுதனின் துணைவியானள்
திரையெழும் சமுத்திர குமாரியாம் பூங்குழல்
தேவியைப் போற்றுகின்றோம்.

ஸ்ரா. சராஜ், ஆர்.பி. சாரதி ஆகியோர் நன் முயற்சியில் சென்னை, சைதாப்பேட்டை பாரதி கலைக் கழகம் அமரர் கல்கி நினைவு கவி அரங்கம் நடத்தியது. கல்கி அவர்களின் நூல்களின் தலைப்புகளை அல்லது கதா பாத்திரங்களின் பெயர்களைத் தலைப்பாகக் கொண்டு கவிதை புனைந்து படித்தனர் பலர். வி.ஜி.பி. அவர்கள் இல்லத்தில் நடந்த இந்தக் கவியரங்குக்கு நா. சி. வரதராஜன தலைமை வகித்தார். மாதிரிக்கு ஒரு பாடல்:











✖ ஏ. வி. எம்
✖ கிருஷ்ணன் பஞ்சு
✖ ஏ. பி. என்.
✖ கே. பாலசந்தர்

## 11–20

**''உயர்ந்த மனிதன்''**: ''சினிமாவில் நான் முதன் முதலில் மேக்கப் போட்டது ''சித்ரா பௌர்ணமி'' என்ற படத்துக்காகத்தான். வெளி வந்த சித்ரா பௌர்ணமி அல்ல. இது வெளிவராமல் நின்று விட்ட ''சித்ரா பௌர்ணமி.'' அப்படத்தின் டைரக்டர் கிருஷ்ணன் பஞ்சு. அதற்குப் பிறகு மறுபடியும் உயர்ந்த மனிதன் படத்தில்தான் கிருஷ்ணன் பஞ்சு டைரக்ஷனில் நடித்தேன். உயர்ந்த மனிதனில் நடிக்க ஆரம்பித்த கொஞ்ச நாட்களில் ஏ. வி. எம். ஸ்டுடியோவைச் சில பிரச்னைகளினால் மூடினார்கள். நேரத்தைப் போக்க முடியாமல் உட்கார்ந்திருந்தேன். பிறகு, 'சிவாஜி', சௌகார் ஜானகியுடன் நடிக்கப் போகிறோம். நன்றாக நடிக்க வேண்டும்' என்ற ஆசையில் காட்சி வாரியாக வசனங்களை எழுதிக் கொண்டு வந்து நாடகத்துக்கு மனப்பாடம் செய்வது போல் செய்து என்னை நானே தயார் நிலையில் வைத்திருந்தேன்.

**''பால்குடம்''**: முதன் முறையாகக் கொஞ்சம் நல்லவனல்லாத (பெண்டாட்டி சொற்படி ஆடுகிறவன்) பாத்திரத்தை ஏற்க நேர்ந்தது. ராஜனுக்குச் சாதகமாகவும் எனக்குப் பாதகமாகவும் ரசிகர்கள் தியேட்டரில் கத்திப் பேசுவதை முதல் முறையாகக் கேட்டேன். அப்படத்தின் தயாரிப்பாளர் படப்பிடிப்பின் போது என்னிடம் வந்து. ''தொஞ்சலியும் நீங்களும் முன்பே கல்யாண சீன்ல நடித்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார். தொஞ்சலிதான் அப்படத்தில் எனக்கு ஜோடி. ''ஏன் சார் எதற்குக் கேட்கறீங்க?'' என்றேன் நான். ஒன்றுமில்லை. முன்பு நடித்திருந்தால் அந்தப் படத்தில் வரும் கல்யாணக் காட்சியை மட்டும் வெட்டி எடுத்து நம் படத்தில் இணைத்து விடலாமே? பணம் மிச்சமாகுமே'' என்றார்.

நல்லவேளை நான் தொஞ்சலியுடன் அதற்கு முன் வேறு படத்தில் நடித்திருக்கவில்லை.



**''காவல் தெய்வம்''**: நான் தான் படத்தின் கதாநாயகன். படம் முழுதும் வந்த என்னை ஒரு சில காட்சிகளில் மட்டும் தோன்றிய சிவாஜி கணேசன் தம் நடிப்பாற்றலால் விழுங்கி விட்டார்.

ஜெயில் அதிகாரி தந்த விசேஷ அனுமதியின் பேரில் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையிலிருக்கும் தன் தாயாரைப் பார்க்கச் செல்லுகிறான் கைதி. அம்மாவைப் பார்க்கப் போனவன் காலதாமதமாகத் திரும்பி வருகிறான். தாமதமாக வந்ததால் தன்னை நம்பிய ஜெயிலதிகாரிக்குத் தான் தொந்தரவு கொடுத்து விட்டோமோ என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டே மன்னிப்புக் கேட்கும் தோரணையில் சல்யூட் அடித்தபடி அழுதவாறு கைதி நிற்கிறான். கைதி வேடத்தில் நான் நடித்தேன். இந்தக் காட்சியின் போது நெருங்கிய குளோஸ் அப்பில் என் முகத்தை மட்டும் திரை முழுக்கக் காட்டினார்கள். இதைப் பார்த்து விட்டு ரசிகர் ஒருவர் ''சிவாஜிக்குப் பிறகு நீங்கள்தான் வசனமே பேசாமல் உணர்ச்சிகளை அதி அற்புதமாகத் திரையில் காட்டியுள்ளீர்கள்'' என்று எழுதியிருந்தார்; இந்தப் பாராட்டை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

# சிவகுமார் 101

**''பூஜா புஷ்பம்''**: நான் நடித்த முதல் மலையாளப் படம் இது.

**''கன்னிப் பெண்''**: இந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் என்னுடைய சென்னை வாழ்க்கைக்கு ஊன்று கோலாக இருந்த எனது மாமா இறந்து விட்டார் என்ற செய்தி வந்தது. உடனே படப்பிடிப்பை ரத்து செய்ததுடன் நில்லாமல் எனக்குக் காரும் கொடுத்துத் துணைக்கு நடிகர் ஒருவரையும் அனுப்பி வைத்தார்கள். அன்று நான் இன்றுள்ள சிவகுமார் அல்ல. வளர்ந்து வரும் சிவகுமார் தான். இருப்பினும் சத்யா மூவிஸார் என்னிடம் பேரன்பு காட்டி நடந்து கொண்டார்கள்.

**''அனையும் பிதாவும்''**: இந்தப் படம் எடுக்கப்பட்டு வந்தபோது நாடகத்திலும் நடித்து வந்தேன். நாடகத்துக்குப் பிரபலமான நடிகை ஒருவரைச் சேர்த்துக் கொண்டோம். அப்பொழுது ஏஸி தியேட்டர்கள் கிடையாது. இதைக் குறிப்பிட்ட அவர், ''என்ன நாடகக் கொட்டகைகள் இவை? ஒன்றில் கூட மேக்கப் போட ஏஸி வசதி இல்லை'' என்று அலுத்துக் கொண்டார். வழக்கமாகத் தாமதமாக வருபவர் ஒருசமயம் ''நாடகத்தில் உடுத்திக் கொள்ள வேண்டிய உடைகளை வீட்டிலேயே வைத்து விட்டேன்'' என்று கூறிக் காரை வீட்டுக்கு அனுப்பினார்.

காட்சிகளுக்கிடையே மிக நிதானமாக உடை மாற்றிக் கொள்வார். திரையைத் தூக்காமல் எவ்வளவு நாழிதான் இசையை வாசித்துக் கொண்டிருப்பது? சிறு வயதிலேயே ரத்த அழுத்தமும் இருதய நோயும் வந்து விடக் கூடாது என்று நாடகம் போடுவதையே நிறுத்தி விட்டேன்!

**''விளையாட்டுப் பிள்ளை''**: உணர்ச்சி வசப்பட்டு அடிக்கும் காட்சிகளில் சிவாஜி, பத்மினி இருவருக்கும் நடிக்கத் தெரியாது. நிஜமாகவே அடி விழும்! ஒரு சீனில் சிவாஜி பத்மினியை அறைய வேண்டும். அவ்வளவு தான், இவர் அறைந்த வேகத்தில் பத்மினியின் காதுக் கம்மல் கழன்று தெறித்து விழுந்து உருண்டது. அப்பொழுது பத்மினியைப் பார்க்க வேண்டுமே, செட்டின் ஓரமாக அழுது கொண்டு நின்றிருந்தார். பத்மினி எனக்குப் பூசை கொடுக்க வேண்டிய கட்டம் வந்தது. மூன்று அறை விட்டுப் பின் நீண்ட வசனம் பேசுவது போன்ற காட்சி. எனது போதாத காலம் நான்கு முறை இக் காட்சி எடுக்க வேண்டி வந்தது! 4 × 3 = 12 அறைகள். இரண்டு பெரிய ஐஸ் கட்டிகள் வீங்கிய கன்னங்களுக்குப் பரிசாகக் கிடைத்தன.

* ஸ்ரீவித்யாவுடன்



மைசூர் லலித் மகாலில் பதினைந்து நாட்கள் இப்படத்தின் படப்பிடிப்பு நடை பெற்றது. பணம் தண்ணீராகச் செலவு செய்யப் படுவதை நேரில் பார்த்தேன். அன்றைய ஜெமினி அதைத் தாக்குப் பிடித்தது.

**''எதிரொலி''** : இந்தப் படம்தான் பாலசந்தருடன் நான் இணைந்த முதல் படம். காமிராவை நிலையாக வைத்துப் படமெடுக்காமல் மன ஓட்டத்துக்கு ஏற்பக் கேமிராவையும் ஓடவிட்டுப் படமாக்குபவர். கண்களால் பேசும் திறன், முகபாவங்களை வெளிப்படுத்தும் ஆற்றல், காலப் பிரமாணத்துடன் இயல்பாக வசனம் பேசும் திறன் இவற்றில் ஏதாவதொன்றில் ஒரு நடிகர், அல்லது நடிகை சிறந்து இவரைக் கவர்ந்து விட்டால் போதும், பிரமாதமாக அவரை உயர்த்தி விடுவார். நடிப்பவர்கள் சரியாகச் செய்யாவிடில் இவர் உணர்ச்சிப் பிழம்பாகித் தாமே நடித்துக் காட்டுவார். இதனால் தம் உடல்நிலை பாதிக்கப் படுவதை நினைத்தே பார்க்க மாட்டார்.

**''கஸ்தூரி திலகம்''** : குழந்தை மனம் எனக்கு இருக்கிறதோ இல்லையோ குழந்தைத் தனமாக என்னுடன் நடிக்கும் சக நடிகையினிடம் சண்டை போட்டுக் கொள்வேன். இப்படித்தான் ஒரு முறை நான் 'டூ' விட, அன்று மாலையே நாங்கள் படப்பிடிப்புக் குழுவினர் சகிதம் ஒரு கோயிலுக்குச் செல்ல, கதாநாயகி எனக்காக அர்ச்சனைக்கு வேண்டிய சாமான்களை வாங்கியது மட்டுமல்லாமல் என் பெயரில் அர்ச்சனையும் செய்தார். வேதாளம் முருங்கை மரத்தை விட்டுக் கீழே இறங்கியது.

ஒரு வாரப் பத்திரிகையில் ஓர் அழகான சிறுமியின் அட்டைப் படம் வந்திருந்தது. என்னையும் மீறி அந்த அட்டைப் படத்தில் லயித்து வெட்டி எடுத்து வைத்துக் கொண்டேன். படப் பிடிப்பின் பொழுது எனது தங்கையாக நடிக்க ஒருவரை அழைத்து வந்திருந்தார்கள். அட்டைப் படத்தில் சிறுமியாகத் தோன்றியவர்தான் என் எதிரே வளர்ந்து நின்றிருந்தார். அவர் யார் தெரியுமா? ஸ்ரீவித்யாதான்!

**''திருமலை தென்குமரி''** ஆயிரம் ஆண்களை ஒன்று சேர்த்து விடலாம். ஆனால் இரு பெண்களை ஒன்றுசேர்ப்பது ரொம்ப சிரமம். ஆனால் ஏ. பி. என். அவர்களோ 17 நடிகர் 17 நடிகையர் ஆகியோருடன் அவர்களுக்குத் துணையாக வந்தவர்கள், புரொடக்ஷன் சம்பந்தப்பட்டவர்கள் என்று சுமார் 150 பேரைச் சேர்த்து 30 நாட்களில் திட்டமிட்டபடி படத்தை முடித்துக் காட்டினார். ஒவ்வொரு ஊருக்கும் நாங்கள் செல்வதற்கு முன்பே அந்த ஊரில் நாங்கள் தங்கப் போகும் ஹோட்டல் அறையின் சாவி எங்களிடம் கொடுக்கப்பட்டு விடும். அந்த அளவுக்குத் திட்டமிட்டு வேலை நடந்தது. மைசூர் சாமுண்டி மலைமீது காலை ஏழு மணிக்குப் படப்பிடிப்பு என்று சொல்லியிருந்தார். ஆனால் நாங்கள் வருவதற்கு அரை மணி தாமதமாகி விட்டது. அவ்வளவுதான் ஏ.பி.என். ருத்ர தாண்டவமாடி விட்டார்! இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் 150 பேரும் இரவு 1 மணிக்கே எழுப்பப் பட்டனர். எட்டு ஒப்பனையாளர்கள் இருந்தும் எல்லோருக்கும் ஒப்பனை முடிந்து உடைமாற்றிச் சிற்றுண்டி அருந்தி விட்டுவர அரை மணி தாமதமாயிற்று. இதற்கே ஏ. பி. என். பொறுக்க முடியாமல் கோபித்தார். ஆனால் இன்றோ இரண்டே நடிகர்களைக் கொண்டு படமெடுத்தாலும் நான் முழுதும் காத்திருந்தும் அவர்களில் ஒருவர் வராததால் ஒரு ஷாட்கூட எடுக்க முடியாமல் போய் விடுவது சகஜமாகவுள்ளது.

பேட்டி: **சலன்**



# காண்டாக்ட் லென்ஸ்!







❋ காண்டாக்ட் லென்ஸைக் கண்ணுக்கு அருகே கொண்டுவந்து . . .
❋ இப்படி அணிந்து . . .
❋ இவ்வாறு கழற்ற வேண்டும்.

மூக்குக் கண்ணாடி அணிவதை விரும்பாதவர்கள் காண்டாக்ட் லென்ஸ் அணிவது சகஜமாகி வருகிறது. காண்டாக்ட் லென்ஸ் அணிவதால் கண்கள் பாதிக்கப்படுவதாகச் சமீபத்தில் ஜப்பானியச் செய்தி ஒன்று நாளிதழ்களில் வெளியாயிற்று. இதுபற்றிக் கண் பார்வை சிகிச்சை நிபுணரான டாக்டர் ரவி அவர்களைச் சந்தித்துக் கேட்ட போது:

''எந்த ஒரு நோய்க்கும் சிகிச்சை அளிக்கும் போது மருத்துவர் கூறும் அறிவுரைப்படி நடந்து கொண்டால்தான் எவ்வித மாற்று விளைவுகளும் தோன்றாமல் நோய் விரைவாகக் குணமாகும். கண் பார்வைக் குறைக்காக காண்டாக்ட் லென்ஸ் பொருத்திக் கொள்வதிலும் டாக்டரின் அறிவுரையை இம்மியும் பிசகாமல் கடைப்பிடிப்பது மிகவும் அவசியம்.

''உடலின் அங்கங்களில் கண் மிகவும் நுண்மையானது. கண் பார்வைக் கோளாறுக்காகக் கருவிழியின் மீது கண்ணீர்த்திரை மேல்தான் காண்டாக்ட் லென்ஸ் பொருத்தப்படுகிறது. இம்மாதிரி பொருத்துவது திறம்படச் சீராக இல்லாவிடில் வேண்டாத விளைவுகள் தோன்றச் சாத்தியக்கூறுகள் உண்டு. சரியானபடி பொருத்தப்பட்டால் ஒரு தொந்தரவும் இராது. மேலும் காண்டாக்ட் லென்ஸ் பொருத்திக் கொள்பவர் அதனைத் தொடர்ச்சியாக எவ்வளவு நேரம் பொருத்திக்கொண்டிருக்கலாம் என்று மருத்துவர் அறிவுரை வழங்குகிறாரோ அந்தக் கால அளவைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். பொதுவாக எட்டு மணி நேரத்துக்கு மேல் அணிந்து கொண்டிருப்பதைத் தவிர்க்க வேண்டும். நேரத்தையும் சிறிது சிறிதாகத்தான் கூட்டிக் கொண்டு போக வேண்டும்.


''எனக்குத் தெரிந்த ஒரு பெண் ஞாபக மறதியில் திருமணத்தன்று குறிப்பிட்ட நேரத்துக்குள் லென்ஸை அகற்ற மறந்துவிட்டாள். மறுநாள் தேனிலவுக்குக் கிளம்பவேண்டும். விடிந்ததும் பார்த்தால் கண் கோடிகளில் ஏகப்பட்ட வீக்கம். கண்களில் கட்டுகளுடன் தேனிலவுக்குப் போகும்படி ஆயிற்று.

டாக்டர் ரவி



''காண்டாக்ட் லென்ஸ் மேலை நாடுகளில் முப்பதாண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. இதனை உபயோகிப்பதால் ஏதேனும் தீமை நேர்ந்திருக்குமானால் இருபது ஆண்டு கால அளவில் அது வெளித் தெரிந்து இருக்கும். இதுவரை அப்படி ஏதும் தோன்றாததனால் பயப்பட அவசியமேயில்லை.''

- பேட்டி: **நாயகன்**




“இறக்கும் தருணத்தில் ஒருவன் எதைப் பற்றி எண்ணுகிறானோ, அதையொட்டியே அவனுக்கு மறுபிறவி ஏற்படும். அப்போது பிரணவம் உச்சரிக்கப்பட்டால், மறுபிறவியின்றி, அழியாப் பரம்பொருளிடத்துச் சென்று கலக்க வைக்கும்” — இப்படிக் கண்ணன் கீதையில் சொல்லும்போது, “இறக்கும் தருணம்” என்பதற்கு “வருங்காலத்தில் ஏதோ ஒரு நேரம்” என்று பொருள் கொள்ளலாகாது. “இப்பொழுதே” என்பதுதான் அதன் பொருள். எந்தத் தருணமும் இறக்கும் தருணம் ஆகலாமல்லவா?

நீங்கள் முன்னரே உண்ட உணவின் வாஸனைதான் ஏப்பம் விடும்போது வெளியாகும். வாழ்நாளில் முன்பிருந்தே செய்த முயற்சியும் பயிற்சியும்தான் இறக்கும் தருணத்தில் மேலோங்கி வரும். எனவே முடிவில் பிரணவத்தில் மனத்தை நிலை நிறுத்தும் விஷயத்தை அந்த முடிவின் போது பார்த்துக் கொள்ளலாம் என எண்ணுபவன், “பரீக்ஷைக்குத்தான் ஓராண்டு இருக்கிறதே” என்று, ஆசிரியர் சொல்வதைக் கேளாமல், பாடங்களைப் பாராமல், பரீக்ஷைக்குப் போகிற நேரத்தில் முதல் முறையாகப் புத்தகத்தைப் புரட்டுபவனின் கதியைத்தான் அடைவான். வாழ்வின் நீண்ட ஆண்டுகள் முழுதும் விடா முயற்சி என்னும் யோகத்தால், பல்வேறு எண்ணங்களை அகற்றி, இறைவன் பேரிலேயே ஊன்றி நிற்பதற்கு மனத்தைப் பழக்கினாலன்றி, இறக்கும் தறுவாயில் அது பரம்பொருளை நினையாது, நினைக்க முடியாது.

எதைச் சந்தித்தாலும் சந்திக்கா விட்டாலும் ஒவ்வொரு மனிதனும் சாவைச் சந்திப்பதென்னவோ நிச்சயம். ஸாதகர்கள், “எப்படிப் பிறப்பது?” என்பதிலிருந்து ஆசையைத் திருப்பி, “எப்படி இறப்பது?” என்பதில் மனத்தைச் செலுத்த வேண்டும். ஏனெனில் நீங்கள் நல்ல பிறவி எடுத்து, நல்ல குடும்பத்தில், மனத்துக்குகந்த சூழ்நிலையில் வாழ்ந்தாலும் நீங்கள் செய்யும் கருமங்கள் நல்ல சாவு வராமல் கெடுத்து விடக்கூடும். சாவதற்கே பிறப்பதாகவும், மறுபடி பிறப்பதற்கே சாவதாகவும் பாமர மக்கள் நினைக்கிறார்கள். இது தவறு. மறுபடி பிறக்காமலிருப்பதற்காகவே நாம் பிறக்கிறோம்; மறுபடி இறக்காமலிருப்பதற்கே இறக்கிறோம் — இறக்கும் போது இறை நினைவுடன் போகப் பழகுவோமாயின்.

[கீதா வாஹினி.]

சேய்மையில் ஒரு பூச்சியையும் புழுவையும் பார்ப்பதற்கே விஞ்ஞானிகள் கண் பார்வைக்குத் துணையாக நுட்ப நோக்கி, தொலை நோக்கி யந்திரங்களைப் பயன்படுத்துவதை மதிக்கிறோம். எங்கும் நிறைந்து எல்லாம் கடந்த தத்துவத்தைக் காண முனிவர்கள் தந்துள்ள மந்திரங்கள் கொண்டு ஞானக் கண்ணைத் துணை சேர்த்துக் கொள்ள ஏன் மறுக்க வேண்டும்?

தண்ணீரில் தூசி சேர்ந்து கலங்குவது போல் நாம் பலவிதமான இச்சைகளோடு கர்மம் புரிகையில் மனம் கலக்கம் அடைகிறது. சில்லிஞ்சி விதை (தேற்றாங் கொட்டை) யைக் கலங்கிய தண்ணீரில் போட்டால் அது வண்டலையெல்லாம் பிரித்துத் தண்ணீரின் அடியில் தேங்கச் செய்து தானும் அடிக்கு வந்து மறைந்தே போய் விடும். நிஷ்காம கர்மா (பற்றும், பலனில் இச்சையும் இல்லாமல் செய்யும் கர்மம்) இது போலவே நம் மனக் கலக்கத்தை நீக்கித் தெளிவு செய்யும்.

அத்வைதத்துக்கு த்வைதத்திடம் சண்டை இல்லை. ஏனெனில் மனம் செயல்படும் வரைதான் த்வைதம் (நமக்கு வேறாக ஒன்று) உண்டு. நம் மனம் செயல்படாத தூக்கத்திலோ, ஸமாதியிலோ இரண்டு என்ற அறிவு இல்லை. இரண்டாவதாக ஒன்றிருப்பதாக எண்ணும் போதுதான் அதனிடம் சண்டையிட முடியும். எனவே எதிர்ப்புக்கள் யாவும் த்வைத மதங்களுக்குள்ளேயேதான்! அத்வைதிக்கோ எல்லாம் ஒன்றானபடியால், எதிரி என்றே வேறொன்றில்லை.


நினைவிருக்கட்டும்: உயிர்த் தத்துவமான நீங்கள் ஸத், சித், ஆனந்தமான பரம்பொருளாக இருக்கிறீர்கள். இந்த உறுதியிலேயே ஓங்காரத்தைத் தியானம் செய்யுங்கள்.

நாம் பழக வேண்டிய யோகமாவது: மனத்தின் அலைப்புக்களில் நாமே மாட்டிக் கொள்ளாமல் அதை ஸாக்ஷி யாக இருந்து கவனியுங்கள்! எதற்கும் எதிராகவோ ஆதரவாகவோ முடிவுகளும் தீர்மானங்களும் எடுக்காதீர்கள்! [உபநிஷத்வாஹினி]

டாக்டர் பி. கே. சுந்தரத்தால் தமிழாக்கப் பட்டுள்ள இவ்விரு நூல்களும் (விலை முறையே ரூ ஏழு, ரூ. இரண்டு) கிடைக்குமிடம்: *Sri Satya Sai Education and Publication Foundation 61, Artheon Road, Royapuram Madras 600 013.*

[அனுப்புனர் : ரா. கணபதி]

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600 032. Editor: K. Rajendran






# எல்லாவற்றிலும் ஆர்வம்!

# எப்பொழுதும் துடிதுடிப்பு!

உங்களுடைய குழந்தை, வளரும் பருவத்தில் ஒவ்வொரு வினாடியும் அதிகமான சக்தியை செலவழிக்கின்றான். அவனுக்கு வேண்டிய சக்தியை அளிக்கிறது—மால்ட், சாக்லெட், பால் நிறைந்த, சுவைமிகுந்த பூஸ்ட். ஏனெனில், பூஸ்ட் முழு ஆடைப் பால் கோதுமை, பார்லி மால்ட், மற்றும் கோகோவிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

உங்களுடைய குழந்தை ஒவ்வொரு நாளும், நாள் முழுவதும் படிப்பில் ஆர்வத்துடனும், விளையாட்டில் துடிதுடிப்புடனும் இருப்பதற்கு, சக்தி தரும் எரிபொருள்களை அவனுக்கு அளியுங்கள்.




# துடிதுடிப்புடனும், ஊக்கத்துடனும் விளங்க சக்தியளிக்கும் எரிபொருள்.

## பூஸ்ட்

மால்ட் சாக்லெட் மில்க் ட்ரிங்க்


B-5621 TAM 10

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka


# POWER for bigger profit !

## THE P6/354

## 120 BHP for Vehicular and 90 BHP for Industrial applications



The P6/354 is a cost effective power unit specially designed to give higher productivity at lower fuel consumption levels.

It's 5.8 litres swept volume together with the direct fuel injection system ensures instant and sustained power output at all load conditions.

Engineered to perform under the worst operational conditions the P6/354 has earned a reputation for reliability.

This profitable prime mover is available in both industrial and vehicular versions and is backed up by a nation wide service and parts outlets.

*Manufactured and Marketed by*

Simpson & Co. Ltd

861/862, Anna Salai, Madras-600 002

MAC/S/404/78A